விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 வைகாசி 20 வியாழக்கிழமை (02.06.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 166

# மீள்குடியேற்ற செயற்பாடுகளில் மைத்திரி அரசாங்கத்துக்கு தோல்வி

## அமெரிக்க ஆய்வு அமைப்பு சுட்டிக்காட்டு

(கலிபோர்னியா)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியேற்று ஒன்றரை வருடங்களாகியுள்ள போதும் முகாம்களில் வசிக்கும் மக்கள் இன்னும் தமது சொந்த இடங்களில் குடியேறுவது உறுதி செய்யப்படவில்லை என தெரிவித்த ஒக்லேன்ட் நிறுவகம் எனப்படும் கலிபோர்னியாவை தளமாகக் கொண்ட சிந்தனைக் குழு, துரித மீள்குடியேற்ற செயற்பாடுகளில் மைத்திரி அரசாங்கம் தோல்வியை சந்தித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

## தமிழில் தேசியகீதம்; மனு பரிசீலனைக்கு

(கொழும்பு)

இலங்கை தேசிய கீதத்தை தமிழ் மொழியில் பாடுவது அரசியலமைப்புக்கு முரணானது என அறிவிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை, எதிர்வரும் ஜூலை மாதம் 7-ம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள உயர்நீதிமன்றம் தீர்மானித் 24ஆம் பக்கம் பார்க்க....

## 200 ஏக்கர் காணி விடுவிக்கப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கு பிரதேசத்தில் எதிர்வரும் 2 வாரங்களில் 200 ஏக்கர் காணி இராணுவத்தினரால் விடுவிக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது.

நல்லாட்சிக்கு பின்னர் யாழ் மாவட்டத்தில் இதுவரை 1759.50 ஏக்கர் நிலங்களே விடுவிக்கப்பட்டிருந்த 24ஆம் பக்கம் பார்க்க....

### பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதாகி

## பிணை பெற்ற 39 நபர்களில் பெண் உட்பட 8 பேர் விடுதலை

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பின்னர் பிணை வழங்கப்பட்டிருந்த 39 பேரில் பெண்ணொருவர் உட்பட 8 பேர் நேற்று நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இந்த சந்தேகநபர்கள் 39 பேரும் கொழும்பு நீதவான் அருணி ஆட்டிகல முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டிருந்தனர்.

இதனையடுத்து, பிரான்ஸிலிருந்து தனது பிள்ளையுடன் நாட்டை வந்தடைந்தபோது கைது செய்யப்பட்டிருந்த பகிரதி முருகேசு என்ற பெண் 24ஆம் பக்கம் பார்க்க....

## வாக்காளர் படிவ விநியோகத்தில் கிராமசேவகர்கள் குறித்து முறைப்பாடுகள்

### யாழ்.அரச அதிபர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

வாக்காளர் பதிவு படிவங்களை கிராம சேவகர்களே வீடுகளிற்கு சென்று வழங்க வேண்டும். எனினும் சில கிராமசேவகர்கள் அவ்வாறு செய்ய முன்வருவதில்லை என தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளது என யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளர்.

வாக்காளர் தினத்தை முன்னிட்டு தேர்தல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் விசேட நிகழ்வுகள் நேற்றையதினம் யாழ் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் கலந்து 24ஆம் பக்கம் பார்க்க....

## பாதிக்கப்பட்டவரின் மனநிலையை அறிந்தே நல்லிணக்கத்தை சாத்தியப்படுத்த முடியும்

### நோர்வே குழுவிடம் முதலமைச்சர் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்டவர்களின் மனோநிலையையும் அவர்களின் எதிர்பார்ப்பினையும் அறிந்து செயற்பட்டால் மட்டுமே நல்லிணக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள முடியும் என வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.


நோர்வே நாட்டின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரெறி ஹர்டெம் உள்ளிட்ட 6 பேர் அடங்கிய குழுவினர் நேற்றையதினம் வட மாகாண முதலமைச்சரை அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர். அக் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், நல்லிணக்கத்திற்காக பல்வேறு 24ஆம் பக்கம் பார்க்க....

## பகிரதி முருகேசு விடுதலையானார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் மகளிர் பிரிவுத் தலைவியாக செயற்பட்டவரென பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பிரான்ஸ் நாட்டை வசிப்பிடமாகக் கொண்ட பகிரதி முருகேசு அல்லது மீலர், கொழும்பு நீதிவான் நீதிமன்றினால் விடுதலை செய்யப் 24ஆம் பக்கம் பார்க்க....



நோர்வே வெளிவிவகார அமைசசின் இராஜாங்க செயலாளர் ரெறி ஹர்டெம் உள்ளிட்ட 6 பேர் கொணட குழுவினர் நேற்றையதினம் யாழ். மாவட்டத்திற்கு வருகை தந்தனர். இவர்கள் வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே மற்றும் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோரை அவர்களது அலுவலகங்களில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

## ஒற்றையாட்சிக்குள் சமஷ்டி

### மக்கள் கருத்தறியும் குழு சிபாரிசு!

(கொழும்பு)

ஒற்றையாட்சி அரசியல் சாசன அமைப்புக்குள் சமஷ்டி ஆட்சி முறையை தமிழ் மக்கள் விரும்புவதாக அர சாங்கத்தினால் நியமிக்கப்பட்ட அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தொடர்பான பொதுமக்கள் கருத்தறியும் குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டுள்ள அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தொடர்பான பொதுமக்கள் கருத்தறியும் குழுவின் அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கில் சுயாட்சியுடன் கூடிய அரசியல் தீர்வு தான் நிரந்தரமானதென எதிர்க் கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் கூறியிருந்தார்.

அத்துடன், வடக்கு கிழக்கிற்கு தனியான சுய அலகு தேவை என வட மாகாண 23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அனர்த்த பாதிப்புக்குள்ளான பகுதிகளுக்கு வாரமொரு முறை விஜயம் செய்யுங்கள்

## மக்கள் பிரதிநிதிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்து

அண்மையில் ஏற்பட்ட சீரற்ற வானிலையின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகள் தொடர்பாகவும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நலனோம்புகை நடவடிக்கைகள் குறித்தும் கண்டறிவதற்கு

வாரத்தில் ஒரு முறையேனும் அப்பிரதேச ங்களுக்கு விஜயம் செய்யுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறித்த மாவட்டங்களிலுள்ள மக்கள் பிரதிநிதிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

நேற்று முற்பகல் கேகாலை நகர மண்டபத்தில் நடைபெற்ற கேகாலை மாவட்ட விசேட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டததில கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

மண்சரிவு காரணமாக நிர்க்கதியாகியுள்ள மக்களை மீள் குடியேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை விரிவுபடுத்துமாறும் ஜனாதிபதி இதன்போது அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

கேகாலை மாவட்டத்தில் இடம்பெற்ற மண்சரிவு காரணமாக நிர்க்கதிக்குள்ளான மக்களை மீள் குடியேற்றுவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள செயற்திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும் ஜனாதிபதி அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

தேவையான காணிகளை இனம்காணும் நடவடிக்கையை விரைவுபடுத்துமாறு பணிப்புரை விடுத்த ஜனாதிபதி, அம்மக்கள் குடியிருந்த பிரதேசங்களுக்கு அருகாமையிலேயே அவர்களை மீண்டும் குடியேற்றுவது தொடர்பில் கூடியளவு கவனம் செலுத்துமாறும்ஆலோசனை வழங்கினார்.

அம்மக்கள் குடியேறியிருந்த காணிகளில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்காக அக்காணிகளை அம்மக்களிடமே பெற்றுக்கொடுப்பது தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

அவர்களை மீள் குடியேற்றுவதற்காக காணிகளை இனங் காணும் போது காணி அமைச்சு மற்றும் பெருந்தோட்டத் தொழிற்றுறை அமைச்சு ஆகியன சிறந்த ஒருங்கிணைப்புடன் செயற்படவேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

மேலும் அம்மக்களுக்குத் தேவையான வீடுகளை நிர்மாணிக்கின்ற போது சிறந்ததும் உயர்நியமங்களை உடையதாகவும் அவ்வீடுகளை நிர்மாணிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி,

அதற்காக ஒரு குழுவை அமைத்து அதன அறிக்கையை மூன்று நாட்களுக்குள் தமக்கு கிடைக்கச் செய்யுமாறும் குறிப்பிட்டார்.

அனர்த்தத்திற்குள்ளான எல்லா மக்களுக்கும் நிவாரணங்களை வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகளை குறைவின்றி மாவட்டங்களுக்கு பெற்றுக்கொடுப்பதாக இதன்போது ஜனாதிபதி தெரிவித்தார். (செ-12)


### தேவை

நல்ல நிலையில் உள்ள தச்சு வேலை இயந்திரம் விலைக்குத் தேவை.

0774366704

(சி-4779)



### வாகனம் வாடகைக்கு



அனைத்து வைபவங்களுக்கும் அழையுங்கள்

07 66 88 99 06


## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு

**யாழ்.மாநகர சபை சைவ சமய விவகாரக்குழு நல்லைக்குமரன் மலருக்கான ஆக்கங்கள் கோரல்**

யாழ்.மாநகர சபை சைவ சமய விவகாரக் குழு 2016ஆம் ஆண்டுக்கான 24 ஆவது மலருக்கு ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.

பின்வருவனவற்றை கருத்தில் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

1.இடதுபக்க மேல் மூலையில் நல்லைக்குமரன் மலர் 24 எனக் குறிப்பிட வேண்டும்.
2. கட்டுரைகள் 5-7 பக்கங்களுக்குள் அமைதல் வேண்டும்
3.ஏற்கெனவே நல்லைக்குமரன் மலரில் வெளிவந்த கட்டுரைகள், வேறு புத்தகங்களில் வந்த ஆக்கங்கள் என்பன தவிர்க்கப்பட வேண்டும்.
4.முடிவுத் திகதி 30.06.2016
5 ஆக்கங்களை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்கின்றேன்.
6.ஆக்கங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி: பிரதம பதிப்பாசிரியர், "நல்லைக்குமரன் மலர் 24", 21/3A, இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
7.மின்னஞ்சல் முகவரி:kajendra81@gmail.com
8.கட்டுரைகள் இறுவட்டுக்களில் அனுப்பி வைக்கவும்
9.தயவுசெய்து தங்களது தொலைபேசி இலக்கங்களை குறிப்பிடவும்.

**பொ.வாகீசன்**
**ஆணையாளரும் சைவசமய விவகாரக்குழு தலைவரும்**
**யாழ்.மாநகர சபை**
**31.05.2016**

(ஐ)


### பாராட்டி வாழ்த்துகின்றோம்



இருள் சூழ்ந்த முன்பள்ளிக்கு ஒளியேற்ற மின்சார வசதியினை பெற்றுத் தந்த ஆன்மிகச்சுடர் ரிஷி தொண்டுநாத சுவாமிகள் இன்னும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துவதோடு, எங்கள் இதயம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மு/புனித சகாய மாதா முன்பள்ளி
ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்.
மாத்தளன் முல்லைத்தீவு.

(சி-4772)


## கூறுவிலை கோரல்

பின்வரும் வேலைகள் செய்வதற்காக தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றது.

வெள்ளிரும்புக் கொள்கலன்-10000 லீற்றர் -01
வெள்ளிரும்புக் கொள்கலன்- 1000 லீற்றர் -01

**(ஒட்டு வேலை "ஆகன் காஸ்" பாவித்தல் வேண்டும்)**

வெள்ளிரும்புக் கொள்கலன் செய்வதில் அனுபவமுடைய நிறுவனங்கள் 18.06.2016ஆம் திகதிக்கு முன்னர் கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொண்டு உரிய தரவுகளைப் பெற்று 20.06.2016ஆம் திகதிக்கு முன்னர் கூறுவிலையைச் சமர்ப்பிக்கவும்.

**தலைவர்,**
**வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி,**
**பிப்பிலிச் சந்தி,**
**மானிப்பாய்.**
**01.06.2016**

(சி-4773)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### ஞானேஸ்வரன் கோகுலவதனன்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 14 - 11 - 1980 | 12 - 06 - 2015 |

ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்
கோகிலன் உங்கள் அன்பு முகம்
எங்கள் நினைவுகளில்
நின்று மறையவில்லை
நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகி,
மாதங்கள் வருடமாகியும் உங்கள் நினைவுத்
துயரிலிருந்து மீண்டெழ முடியவில்லை.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்


ஆசைப்பிள்ளை
அன் சன் நகைமாடம்
K.T பிளாஷா
பிரதான வீதி, சங்கானை.

ஆசைப்பிள்ளை
குடும்பத்தினரும்,
குணசேகரம் குடும்பத்தினரும்,
ஆசைப்பிள்ளை அன் சன்
நகைமாடம் ஊழியரும்.

## மரண அறிவித்தல்

### செல்வராசா சண்முகநாதன்

(ஓய்வூதியர்-இலங்கை மின்சார சபை)



*சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், ஆவரங்கால் மேற்கு சிவன் வீதியை வதிவிடமாகவும் கொண்ட செல்வராசா சண்முகநாதன் (ஓய்வூதியர்-இலங்கை மின்சார சபை) 2016.06.01ஆம் திகதி புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.*

*அன்னார் செல்வராசா-கனகம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், கந்தையா-செல்லம்மா தம்பதிகளின் மருமகனும், குணபூசணியின் அன்புக்கணவரும், சரவணபவானந்தன், சச்சிதானந்தன், காலஞ்சென்ற சதானந்தன், தவமணிதேவி ஆகியோரின் சகோதரனும், இராஜதுரை (ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்) மீனலோசனி, இராதாகிருஷ்ணன் (ஓய்வூதியர்-இலங்கைப் போக்குவரத்துச் சபை-மட்டக்களப்பு) ஆகியோரின் மைத்துனரும், செல்வரூபா, சிவதீபா, கௌதமி (சுவிஸ்), கோகுலன் (பாதுகாப்பு உத்தியோகத்தர்-இலங்கை வங்கி), கிருஷா ஆகியோரின் தகப்பனாரும், திருஞானசம்பந்தன் (சாரதி-இலங்கைப் போக்குவரத்துச் சபை), முரளிதரன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், யதுஷன், பிரபாகினி ஆகியோரின் பேரனும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் 2016.06.03 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது ஆவரங்கால் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆவரங்கால் கரதடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

**தகவல்:- குடும்பத்தினர்**
**(0776758920/ 0766254702)**

(சி-4776)

# ஊழலுக்கு எதிரான விசாரணை என்ற பேரில்

# அழகான நாடகம் அரசால் அரங்கேற்றம்



(கொழும்பு)

ஊழலுக்கு எதிரான் விசாரணைகள் என்ற பேரில் அரசாங்கத்தால் அழகான நாடகம் அரங்கேற்றப்படுவதாகவும் மகிந்த ஆட்சிக்காலத்தில் காணப்பட்ட முறையற்ற விதத்திலான ஆட்சியையே நல்லாட்சியும் மிக வேகமாக கொண்டு செல்வதாகவும் மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸாநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

அதேவேளை கல்வியில் தகைமையில்லாதவர்களே நல்லாட்சியில் உயர் பதவி வகித்து வருவதாகவும், இது கல்வித்துறையிலும் காணப்படுவதாக அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பத்தரமுல்ல கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

குறிப்பாக கல்வித்துறையில் காணப்படும் தகைமை மட்டங்களை மீறி சாதாரண தரம் மற்றும் உயர் தரத்தில் பல முறை பரீட்சைக்கு தோற்றி சாதாரண சித்தியை கூட பெற்றுகொள்ள முடியாத பலர் இன்று கல்வித்துறையில் நிறைவேற்று அதிகாரங்கள் உடைய அதிகாரிகளாக அமர்த்தப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டார்.

மேலும் ஊழல் குற்றச்சாட்டில் நீதிமன்றத்தால் குற்றவாளிகளாக காணப்பட்ட ஆறு பேர் இன்று பிரதமரின் அலுவலகங்களில் அரச அதிகாரிகளாக முக்கிய பதவிகளில் செயற்பட்டு வருவதாக அநுரகுமார திஸாநாயக்க குற்றம் சுமத்தினார். இதே வேளை, அரசியல் வெற்றி மற்றும் கட்சி ஆதரவு என்பவற்றினை எதிர்பார்த்து ஊழல் தொடர்பான விசாரணைகள் திசை திருப்பப்படுவதாக வும் மேலும் சில விசாரணைகள் முடிவடைந்துள்ள நிலையிலும் ஜனாதிபதி அனுமதி மற்றும் தீர்மானங்களுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளவை ஜனாதிபதி காரியாலயத்திலே முடிவுகளற்று இருப்பதாகவும் அவர் கூறினார்.

ஊழலுக்கு எதிரான விசாரணைகள் என்ற பேரில் அழகான நாடகம் இப்போது அரங்கேறுவதாகவும், மகிந்த காலத்தில் காணப்பட்ட முறையற்ற விதத்திலான ஆட்சியையே நல்லாட்சியும் மிக வேகமாக கொண்டு செல்வதாகவும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். (இ-10)

## ராஜிதவை நீக்கும்வரை ஓயவேமாட்டோம்-GMOA



சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவை பணி நீக்கம் செய்யும் வரையில் தாம் ஓயப் போவதில்லை என அரச வைத்தியர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

மருத்துவர்களின் நியமனங்களில் அரசியல் தலையீட்டை அனுமதிக்க முடியாது எனத் தெரிவித்து அரச வைத்தியர்கள் சங்கம் நேற்று முன்தினம் 4 மணிநேர அடையாள வேலை நிறுத்தம் ஒன்றை முன்னெடுத்தது. இந்நிலையில் குறித்த வேலை நிறுத்தம் வெற்றியளித்துள்ளது என தெரிவித்துள்ள அரச வைத்தியர்கள் சங்க செயலாளர் நலிந்த ஹேரத், சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவை பணி நீக்கம் செய்வதே அடுத்த கட்ட நடவடிக்கை எனத் தெரிவித்துள்ளார். (இ-10)

## விஜித ஹேரத்துக்கு அபராதம்



மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் இருந்து, பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் விடுவிக்கப்பட்டுள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் பயணித்த வாகனம் தொலைபேசிக் கம்பம் ஒன்றுடன் மோதி, கடந்த திங்கட்கிழமை இரவு இராஜகிரிய பகுதியில் வைத்து விபத்துக்குள்ளாகியது.

இதன்பின்னர் இவருக்கு எதிராக மது போதையில் வாகனம் செலுத்தியமை உள்ளிட்ட மூன்று குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

இது தொடர்பில் வெலிக்கடை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட விஜித ஹேரத், பின்னர் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இருப்பினும், தான் போதையில் வாகனம் செலுத்தவில்லை என, விஜித ஹேரத் நேற்றுமுன்தினம் மறுப்பு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில் நேற்று கொழும்பு மோட்டார் வாகன நீதிமன்றத்தில் சந்தேகநபர் ஆஜர்படுத்தப்பட்ட போது, மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் இருந்து அவரை நீதிபதி விடுவித்தார்.

எனினும் ஏனைய இரு குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் 1500 ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## அழுத்தங்கள் அதிகரித்ததால் பெல்பிட்ட இடைநிறுத்தம்



உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் அனுஷ பெல்பிட்ட பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

பொதுச்சேவை ஆணைக் குழுவினால் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சியின் போது, தேர்தல் காலத்தில், 600 மில்லியன் ரூபா பெறுமதியான பௌத்த "சில்" துணிகளை சட்டவிரோதமாக பகிர்ந்தளித்தமை தொடர்பில் அனுஷ பெல்பிட்ட மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக் குழுவின் முன்னாள் தலைவராக அவர் இருந்த வேளையில் குறித்த சம்பவம் இடம் பெற்றதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மகிந்த ராஜபக்ஷவின் முன்னாள் செயலாளர் லலித் வீரதுங்க மீதும் குற்றம்சாட்டுள்ளதோடு, இது தொடர்பிலான வழக்கு கொழும்பு உயர் நீதிமன்றில் இடம்பெற்று வருகின்றது.

சர்ச்சைகளுக்கு மத்தியில் கடந்த வாரம், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளராக அனுஷ பெல்பிட்ட பதவியேற்றிருந்தார்.

எனினும் குறித்த குற்றச்சாட்டு தொடர்பிலான வழக்கு விசாரணைகளை கருத்திற் கொண்டு அவரை பணியிலிருந்து இடைநிறுத்துமாறு, பொதுச் சேவை ஆணைக் குழுவிற்கு கிடைத்த பல்வேறு முறைப்பாடுகளுக்கு அமைய இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ-10)

## மீனவர்களை கைது செய்வதை இலங்கை கைவிட வேண்டும்



தடைக்காலம் முடிந்து கடலுக்குள் மீன்பிடிக்க செல்லும் மீனவர்களை கைது செய்வதை இலங்கை கைவிட வேண்டும் என இந்திய மத்திய இணையமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் வைத்து நேற்றுக் காலை பத்திரிகையாளர்களிடம் கருத்து வெளியிட்ட போதே, அவர் இவ்வாறு கூறியதாக தமிழக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 7 மீனவர்கள் மீன்பிடி தடைக்காலம் முடிந்தவுடன் மீன்பிடிக்க சென்றபோது நேற்று முன்தினம் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட வேளை சந்தேகநபர்களை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த மீனவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கக் கோரி, தமிழக முதல்வர் ஜெயலலிதா இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## வைத்திய அதிகாரிகள் சங்கத்திலுள்ளவர்கள் அரசியல் கைக்கூலிகள்

### சதுர சேனாரத்ன குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தில் இருப்பவர்கள் அரசியல் கைக்கூலிகள் என நாடாளுமன்ற உறுப்பினர் சதுர சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

சில மருத்துவர்கள் சம்பந்தப்பட்ட காணொளிகள், புகைப்படங்கள் எம்மிடம் உள்ளன. அவற்றை வெளியிடவும் தயாராக உள்ளோம் எனவும் சதுர சேனாரத்ன தெரிவித்தார். (இ-10)

## இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கிராம சேவையாளர் கைதானார்

பெண்ணொருவரிடம் 15 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாக பெற்றுக்கொண்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட வட்டப்பல மாவிகும்புர பிரிவின் கிராமசேவகர், இலஞ்ச ஊழல் ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டுக்குச் செல்வதற்காக குடும்பப் பின்னணி தொடர்பிலான தகவல்களை போலியான வகையில் தயாரித்து கொடுப்பதற்காகவே இலஞ்சம் பெற்றுள் ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-10)

### பேர்த்தி மீதான கொலைச் சம்பவம்

# மனநலம் பாதித்த பேரன் கைது; மருத்துவ நடவடிக்கைக்கும் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.காரைநகர் சிவன்கோவில் பகுதியில் கடந்த 15-ம் திகதி மனநலம் பாதித்த தன் பேரனால் தாக்கப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த பேர்த்தியான வயோதிப மாது நேற்றைய தினம் உயிரிழந்துள்ள சம்பவம் தொடர்பில் கைதாகிய பேரனுக்கு விளக்கமறியல் விதிக்கப்பட்டுள்ளதோடு, பேரன் தொடர்பான மருத்துவ நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு ஊர்காவற்றுறை பதில் நீதவான் கருப்பையா ஜீவராணி உத்தரவிட்டுள்ளார்.

சுப்பிரமணியம் சீதாலட்சுமி (வயது73) என்ற வயோதிபமாது தன் மகள் மற்றும் மகளின் இரு பிள்ளைகள், மகன் ஆகியோருடன வாழ்ந்து வந்த நிலையில், குறித்த வயோதிப மாதுவின் மகளுடைய மகன் ஒருவர் மனநலம் பாதிக்கப்பட்டிருக்கின்றார். 27 வயதான மேற்படி மனநலம் பாதிக்கப்பட்ட இளைஞன் தினசரி வீட்டின்கதவை பூட்டி திறப்பை கையில் வைத்துக் கொண்டு,

தன்னுடைய அனுமதி இல்லாமல் யாரும் வீட்டுக்குள் போகக் கூடாது என வீட்டில் இருந்தவர்களை வற்புறுத்துவதை வழக்கமாக கொண்டிருந்துள்ளான்.

இந்நிலையில் கடந்த 15ஆம் திகதி மேற்படி இளைஞனின் தாய் கூலி வேலைக்கு சென்று விட்டு மழை காரணமாக வீடு திரும்பாத நிலையில் மேற்படி வயோதிப மாது தன் பேரனை சோறு சாப்பிடுமாறு கேட்டிருக்கின்றார்.

அதற்குபேரன் மறுத்த நிலையில் இல்லை கட்டாயம் சாப்பிடவேண்டும் என கேட்டவாறு மேற்படி வயோதிப மாது குசினிக்குள் சென்ற நிலையில் மனநலம் பாதிக்கப்பட்ட இளைஞன் (பேரன்) தனது அம்மம்மாவை மர சட்டத்தால் தாக்கி விட்டு வீட்டின் தாழ் வாரத்தில் கொண்டு வந்து போட்டுள்ளான். இந்தச் சம்பவத்தின் போது குறித்த வயோதிபமாது சத்தமிட்ட போதும், அயலவர்களோ வீட்டில் இருக்கிறவர்களோ வீட்டுக்கு வராத நிலையில் மறுநாள் 16ஆம் திகதி மனநலம் பாதிக்கப்பட்ட இளைஞனின் தாய் வந்து தனது தாயை காப்பாற்ற முயன்று யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்து சிகிச்சைவழங்கப்பட்டு வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட பொலிசார் சந்தேக நபரினை கைது செய்து,

நேற்றைய தினம் ஊர்காவற்றுறை பதில் நீதவான் கருப்பையா ஜீவராணி முன்னிலையில் ஆஜர்ப்படுத்தினர். இதன்போது, மேற்படி சந்தேக நபரினை எதிர்வரும் பதினாறாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதவான், சந்தேக நபர் தொடர்பான மருத்துவ நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு வழக்கு தொடுநர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.(செ-4)

# புலிகளின் பதுங்குகுழி பகுதியில் வழமைக்கு மாறான செயற்பாடு!

(பரந்தன்)

வட்டக்கச்சி இராமநாதபுரம் பொலிஸ் நிலையத்திற்கு பின்புறமாக உள்ள விடுதலைபுலிகளின் நிலக்கீழ் பதுங்கு குழி அமைந்துள்ள இடத்தில் வழமைக்கு மாறான செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன

நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களால் குறித்த பதுங்கு குழி அமைந்துள்ள காணியில் இரண்டு சிறிய குழிகள்தோண டப்பட்டு தேடுதல் நடவடிக்கை நேற்று நடத்தப்பட்டுள்ளது.

குறித்த காணியில் நேற்று காலை தொடக்கம் 571 படைப்பிரிவு இராணுவத்தினர் சிலர் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்

யுத்தம் முடிவடைந்த பின்னர் பதுங்கு குழி அமைந்துள்ள காணியில் இராணுவத்தினரின் சிறிய காவலரண் ஒன்று போடப்பட்டு காவலில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் . எனினும் குறித்த காவலரண் ஒருவருடத்திற்கு முன்னர் அகற்றப்பட்டுள்ளது.

மேற்படி பகுதிக்குள் என்றுமே வந்திராத பயங்கரவாத தடுப்பு பிரிவினர் மற்றும் பொலிஸார் அடங்கிய குழுவினர் கடந்த மாதம் 29ஆம் திகதி அன்று பகல் வேளை மூன்று வாகனங்களில் வந்து இரண்டு மணிநேர தேடுதல் நடவடிக்கை ஒன்றினை மேற்கொண்டிருந்ததாகவும் அதன் பின்பு நேற்றைய தினம் இனந்தெரியாதவர்களால் இரவு வேளையில் குழிகள் தோண்டப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டுள்ளமை மீண்டும் ஒரு அச்ச உணர்வை தோற்றுவித்திருப்பதாக அக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இருப்பினும் குறித்த சம்பவங்கள் தொடர்பான முழுமையான தகவல் எதனையும் நேற்று நள்ளிரவு வரை பெற்றுக் கொள்ள முடியவில்லை. (செ-312)

# காணிகளற்ற 104 குடும்பங்களுக்கு தலா 2 பரப்பு காணி பகிர்ந்தளிக்கப்படும்

## தெல்லிப்பழை பிரதேச செயலகம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

பலாலி வடக்கில் மீள்குடியேறுவதற்காக பதிவு செய்து காணி அற்ற 104 குடும்பங்களுக்கு தலா 2 பரப்புகாணி நன்கொடையாக தெல்லிப்பழை பிரதேச செயலகத்தால் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பலாலி வடக்கு பகுதி கடந்த டிசெம்பர் மாதம் 29ஆம் திகதி இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டு, தெல்லிப்பழை பிரதேச செயலாளரிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டிருந்தது.

இதில், விடுவிக்கப்பட்ட அன்ரனி புரத்தில் 40 குடும்பங்களுக்கு நிரந்த காணிகள் உள்ளன. அக்குடும்பத்திலுள்ள அங்கத்தவர்கள் தற்போது திருமணம் செய்துதனித் தனிக் குடும்பங்களாக உள்ளனர்.

இதனடிப்படையில் அக் குடும்பங்களுக்கு சொந்தக் காணி பெற்றுக் கொடுக்கும் நோக்கில், பலாலி வடக்கு கிராமசேவகர் பிரிவில் தொண்டைமானாறு வீதிக்கு தெற்குபுறமாக உள்ள அரச காணி கனரக இயந்திரங்களின் உதவியுடன் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

அவற்றில், ஒரு குடும்பத்துக்கு தலா 2 பரப்பு காணிகள் தற்போது பகிர்ந்தளிக்கும் செயற்பாடு தெல்லிப்பழை பிரதேசசெயலகத்தினால் முன்னெடுக்கப்பட்டு, நிறைவடைந்துள்ளது. இதன் அடிப்படையில்,தற்போது முகாம்களில் வசித்து வரும் 104 குடும்பங்களுக்கு அவை பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

அத்துடன் காணிகிடைக்கப் பெறாத மேலும் 20 குடும்பங்களுக்கு அரச காணியை பகிர்ந்தளிக்க நடவடிக்கை மேற்கொள்ள ப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டதை அடுத்து, மீள்குடியேற்றஅமைச்சின் நிதி உதவியின் ஊடாக 8 இலட்சம் ரூபாய் பெறுமதியான நிரந்தர வீட்டுத் திட்டமும் வழங்கப்படவுள்ளதாக தெரிய வருகிறது. (செ-9)

## வாள்வெட்டு; குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

வாள்வெட்டுக்கு இலக்கான குடும்பஸ்தர் ஒருவர் படுகாயடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச சம்பவம் நேற்று மாலை 4.35 மணியளவில் மருதங்கேணியில் இடம்பெற்றுள்ளது.

இதில் வைத்திரியான் வடக்கு தாளையடியை சேர்ந்த அழகன் பிரகாஷ் (வயது 42) என்ற 2 பிள்ளையின் தந்தையே வாள்வெட்டுக்க இலக்காகியுள்ளார்.

பிறிதொரு குடும்பத்தாருடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடே மேற்படி வாள்வெட்டுக்கு காரணம் என தெரியவருகின்றது.

இது தொடர்பில் பளை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (செ-30)

# இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகளை வாக்காளர்களாக உள்வாங்க பொறிமுறை

## மேலதிக தேர்தல் ஆணையாளர் மொஹமட் தெரிவிப்பு

இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளை வாக்காளர்களாக உள்வாங்கக்கூடிய பொறிமுறை எதிர்காலத்தில் அமையும் என மேலதிகதேர்தல் ஆணையாளர் ஜனாப்.எம்.எம்.மொஹமட் தெரிவித்துள்ளார்.

வாக்காளர் தினத்தை முன்னிட்டு தேர்தல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் விசேடநிகழ்வுகள் நேற்றையதினம் யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இந்தியாவில் அகதிமுகாம்களில் வாழ்பவர்கள் இலங்கை பிரஜாவுரிமையை இழக்கவும் இல்லை இந்திய பிரஜாவுரிமையை பெற்றுக்கொள்ளவும் இல்லை. அவர்கள் தமிழ் நாட்டில் இலங்கை அகதிகளாக இருக்கிறார்கள். இது மிகவும் சர்ச்சைக்குரிய விடயம்.

இந்தியாவில் போய் இலங்கை அகதிகளை வாக்காளர்களாக கணக்கெடுக்க முடியாது. அதற்குசட்டம் இடம் கொடுக்கமுடியாது. வெளிநாட்டுக்கு போய் உள்ள நபர் ஒருவரை எவ்வாறு பதிவு செய்துள்ளோம் அல்லது உயர்கல்விக்காக வெளிநாடுகளுக்கு சென்றுள்ளவர்களை எவ்வாறு பதிவு செய்துள்ளோமோ அவ்வாறு அவர்களின் வீடுகளில் போய் உறவினர்கள் மூலமாகபதிவு செய்து கொள்ள முடியுமே தவிர முற்று முழுதாக பதிவு செய்யமுடியாது.

எதிர்காலத்தில் அவர்களையும் உள்வாங்கக்கூடிய பொறிமுறை அமையும் என எதிர்பார்க்கிறோம். அதுவரை முடிந்தளவு இந்தியாவில் உள்ள அகதிகள் இலங்கையில உறவினர்கள் மூலமாக தமது பெயர்களை வழங்கினால் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் வெளிநாடுகளில் உள்ளவர்கள் வாக்காளர்களாக பதிவு செய்யவேண்டும் என்றால் அவர்கள் யூன் முதலாம் திகதி 18 வயதை பூர்த்தி செய்த இலங்கை பிரஜாவுரிமை உள்ளவராகவும் அல்லது இரட்டை பிரஜாவுரிமைஉள்ளவராக இருக்கவேண்டும். எமது இணையத்தளத்துக்கு சென்று கணக்கெடுக்கப்படாத படிவத்தை நிரப்பி தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்ப முடி யும். கடவுச்சீட்டு இலக்கத்தை குறிப்பிட வேண்டும் எனமேலும் தெரிவித்தார். (செ-9)

## கோப்பாய்க்கு கல்விப் பணிப்பாளர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளராக நாகலிங்கம் சிவநேசன் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான் நியமனத்தை வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் வழங்கியுள்ளார்.

யூன் மாதம் முதலாம் திகதி முதல் இவருக்கான நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள நா.சிவநேசன் கோண்டாவில் இந்துக் கல்லூரியின் அதிபராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ரு)


**மரண அறிவித்தல்**

**கந்தையா செல்லம்மா**



மீசாலை வடக்கு, வேம்பிராயை பிறப்பிடமாகவும் மீசாலை கிழக்கு, மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செல்லம்மா நேற்று 01.06.2016இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆழ்வார் -பாராத்தை அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பு-நாகமுத்துவின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பு கந்தையாவின் பாசமிகு மனைவியும், தெய்வேந்திரம் (கட்டிட ஒப்பந்தகாரர்-வேம்பிராய்), காலஞ்சென்ற மகேந்திரம் (வேலும் மயிலும் டிப்பர் உரிமையாளர்-நல்லூர்), தேவமலர் (மீசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் பஞ்சரத்தினம், வண்ணமலர், தங்கவடிவேல் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 02.06.2016 வியாழக்கிழமை பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை

தகவல்:-தெய்வேந்திரம் (மகன்)
0779432200

(சி-4780)

# நூலகம் எரிக்கப்பட்ட நினைவுநாள் நிகழ்வு





யாழ்ப்பாண பொது நூலகம் தீக்கிரையாக்கப்பட்ட கசப்பான சம்பவம் நிகழ்ந்து நேற்றுடன் 35 வருடங்கள் நிறைவடைந்ததை முன்னிட்டு நேற்றைய தினம் காலை யாழ். நூலகத்தில் நினைவு நாள் நிகழ்வொன்று அனுஷ்டிக்கப்பட்டது.

1981ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி நள்ளிரவுக்குப் பின்னர் இடம்பெற்ற இச்சம்பவத்தில் நூலகம் முற்றாக எரிந்ததுடன் அதுவரை இந்நூலகம் கட்டிக்காப்பாற்றி வந்த அரிய ஓலைச்சுவடிகள் உள்ளிட்ட பழம் பெரும்பொக்கிஷங்களும் எரிந்து சாம்பலாகின.

அதன்பின்னர் 25 வருடங்கள் கழித்து மீள் புனருத்தாரணம் செய்யப்பட்டு 2004 ஆம் ஆண்டு தனது பணியை மீளவும் ஆரம்பித்த இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நூலகம் பழைய மிடுக்குடன் தற்போது இயங்கி வருகின்றது

யாழ்.பொதுநூலக வாசகர் வட்டத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் வாசகர் வட்ட தலைவர் தங்கமுகுந்தன் மற்றும் நூலக ஊழியர்களும் வாசகர்களும் கலந்து கொண்டனர்.



படங்கள்:-பொ.சோபிகா

மேலும் இதன்போது நூல் நிலையத்தை ஆரம்பித்த ஸ்தாபகர் அமரர் க.மு செல்லப்பா மற்றும் நூல் நிலையம் எரிவதாக கேள்வியுற்று உயிர்நீத்த வணபிதா தாவீது அடிகளாரையும் நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தப்பட்டது. (இ-9)


## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை:

கிளிநொச்சியில் அமைந்திருக்கும் தேயிலை உற்பத்திசார் பதிவு செய்யப்பட்ட பன்னாட்டு நிறுவனமொன்றிற்கு அதன் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு ஆர்வமுள்ள சுயாதீனமாக இயங்கக்கூடிய தன்மையுள்ள விற்பனைப் பிரதிநிதிகள் வேண்டப்படுகின்றனர்.

தகைமைகள்:

- க.பொ.த.சா/த சித்தி
- குறித்த துறையில் ஒரு வருடத்திற்குக் குறையாத முன்னனுபவம்
- செல்லுபடியாகக் கூடிய மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம்
- ஒன்றிற்கு மேற்பட்ட மொழிகளில் பரீட்சயம் மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.

கொடுப்பனவுகள்:

மாதாந்த ஊதியம் ரூ.20,000+தரகு

ஆர்வமுள்ளோர் தமது விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி,

தபால்மூலம்:
சி.கோகிலவாணி,
D4, தம்புகமம், மருதநகர், கிளிநொச்சி.
மின்னஞ்சல்:sk_vany@possiblegreen.com
தொலைபேசி:021 228 3369, 077 698 0569
விண்ணப்ப முடிவுத் திகதி 05 ஜூன் 2016
நேர்முகத் தேர்வு யாழ்ப்பாணம்,
(சி-4771) கிளிநொச்சி இரு பிரதேசங்களிலும் நடைபெறும்.



## உளமார வாழ்த்துகின்றோம்




வாழ்த்துபவர்: திரு.இ.ஸ்ரீதரன், வேணுகா ரவல்ஸ், (4823) நாச்சிமார் கோயிலடி.



## விநியோகஸ்தர்கள் தேவை

கிளிநொச்சியில் அமைந்திருக்கும் தேயிலை உற்பத்திசார் பன்னாட்டு நிறுவனமொன்றின் கீழ்க்காணும் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு விநியோகஸ்தர்கள் வேண்டப்படுகின்றனர்.

- Cinnamon Tea
- Diabetic Tea
- Moringa Tea
- Ginger Tea
- Jaffna coffee
- Sesame Sweet balls
- Palmyrah Jaggary
- Dates Sweet

இத்துறையில் சிறந்த அனுபவம் மற்றும் வலையமைப்புக்களைக் கொண்டுள்ளதுடன் கணிசமான நிதிப் பின்னணியுமுள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

தபால் மூலம்:
சி.கோகிலவாணி,
D4, தம்புகமம், மருதநகர், கிளிநொச்சி.
மின்னஞ்சல்:sk_vany@possiblegreen.com
தொலைபேசி :021 228 3369, 077 698 0569
(சி-4771) விண்ணப்ப முடிவுத் திகதி: 10 ஜூன் 2016


## இராசி பலன்

02.06.2016
(வைகாசி 20, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
துவாதசி பிற்பகல் 4.12 மணிவரை
அச்சுவினி மாலை 6.13 மணிவரை
சுபநேரம் 7.22-8.52 மணிவரை
இராகுகாலம் 1.22-2.52 மணிவரை
பிரதோசவிரதம் அமிர்தசித்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சந் புத | சூரி சுக் | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் அத்தம், சித்திரை | | |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மேடம்** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பணியில் சிறுமன உளைச்சல் ஏற்படலாம், கனவு பலிதமுண்டு, எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான அதாயம் கிடைக்கலாம்.

**இடபம்** விருப்பங்கள் நிறைவேற பரம சிவனை வழிபட வேண்டிய நாள், நண்பர்களின் சந்திப்பால் திடீர் விரயங்கள் ஏற்படலாம், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு.

**மிதுனம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தனவரவுகள் திருப்திகரமாக அமையும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு.

**கடகம்** தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிம்மம்** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், சிக்கல்கள் விலகி சிறப்புகள் கூடும் நாள், வருங்காலத்திற்கான திட்டமொன்றைத் தீட்டுவீர்கள்.

**கன்னி** குடும்பப் பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் அவசியம்.

**துலாம்** குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள், நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், பயணங்கள் நன்மைதரும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்** பொதுவாழ்வில் புகழ்கூடும் நாள், மனக்குழப்பம் அகலும், இறை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.


**தனுசு** கேளிக்கை, கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், பெற்றோரின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், குடும்பப்பொறுப்புக்கள் கூடும் நாள், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், உடன் பிறப்புக்கள் உதவி செய்ய முன்வருவர்.

**மீனம்** எதிர்பாராத தனவரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழிலில் உத்வேகம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

## வீதி புனரமைப்பு பணி ஆரம்பம்



அராலி மத்தி முருகமூர்த்தி ஆலய வீதிப் புனரமைப்பு பணிகள் கடந்த 31ஆம் திகதி வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனினால் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. (இ-91)

## தொழிற்பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபையானது யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்கால வேலைவாய்ப்பினை மையமாக கொண்டு முழு நேர மற்றும் பகுதி நேர தொழிற் பயிற்சி கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது.

பின்வரும் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு அவற்றுக்கான பதிவுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இக் கற்கை நெறிகளாவன, விருந்தோம்பல் கற்கை நெறிகளான சமையலாளர், வெதுப்பாளர், அறை பராமரிப்பாளர், உணவு மற்றும் குடிபானம் பரிமாறுபவர், காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்), இரு சக்கர மற்றும் முச்சக்கர வண்டி திருத்துநர், அலுமினிய பொருத்துநர், வீட்டு மின்னிணைப்பாளர், மரவேலை தொழில் நுட்பவியலாளர், பெண்கள், சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், கட்டட நிர்மாண உதவியாளர் ஆகும்.

இக்கற்கைநெறிகள் காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது. இக் கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழிற் றகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும்.

இக் கற்கை நெறிகளை கற்க விரும்புபவர்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் யாழ்.வீரசிங்கம் மண்டபம் முதலாம் மாடியில் எதிர்வரும் 06.06.2016 ஆம்திகதிக்குமுன்னர் மேற்கொள்ளவும். (இ

## ஆன்மீக வார்த்தைப் போட்டி

சித்தன்கேணி ஞானரத்தினம் அமைப்பினால வீணாகான குருபீட அனுசரணையுடன் நடத்தப்படும் ஆன்மீக வார்த்தைப் போட்டியானது ஆன்மீக நீரோட்டத்தில் மாணவர்களை இணைத்துச்செல்வதற்கான ஓர் ஆரம்ப நிலையாகும். இப் போட்டி மூலம் மாணவர்கள் சைவ சமயத்தின் மீது அதிக நம்பிக்கை உடையவர்களாக திகழவும் நல்லொழுக்கம் மிக்க நற்பிரஜைகளாக வாழ்வதோடு எதிர்வரும் சந்ததியினருக்கு சைவ சமயத்தின் தார்ப்பரியம் பற்றி அறிவூட்டுவதற்காகவும் அமையும்.

போட்டி விதிமுறை

இது ஒரு குழுப்போட்டி ஆகும். இருவர் ஒரு குழுவில் அங்கம் வகிக்க வேண்டும். தரம் 10, 11 மாணவர்கள் பங்கு பற்ற முடியும். பாடசாலை மூலமாகவோ அல்லது தனியார் கல்வி நிறுவனங்கள் மூலமாகவோ அல்லது தனிப்பட்ட ரீதியிலோ கலந்து கொள்ளலாம். பங்கு பற்றும் மாணவர்கள் தமது விண்ணப்பத்தினை பின்வரும் முகவரியில் பி.ப 3 மணியிலிருந்து மாலை 6 மணி வரை நேரடியாக மேற்கொள்ளவும். "ஞானரத்தினம்" சிவன்கோவில் சித்தன் கேணி.விண்ணப்ப முடிவு திகதி : 06.06.2016

போட்டி விபரம்

ஆன்மீக ரீதியாக வழங்கப்படும் சொற்களை கண்டு பிடித்தல் வேண்டும். குழுவில் உள்ள ஒருவர் தனக்கு வழங்கப்படும் சொற்களை அதே சொற்களையோ அல்லது ஒத்த சொற்களையோ பயன்படுத்தாது மற்றவருக்கு விளங்கும் வகையில் கூறி அவர் அந்த சொல்லை கண்டு பிடிக்க உதவ வேண்டும்.

மற்றையவர் முதலாமவர் வழங்கும் விளக்கத்தின் அடிப்படையில் அவர் கூற வரும் சொல்லை கண்டு பிடிக்க வேண்டும். முதலாமவர், இரண்டாமவர் இருவரையும் குழுவினரே முடிவு செய்யலாம். இப்போட்டிக்கான கால எல்லை ஒரு நிமிடம் ஆகும்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் 077 239 1964 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (இ-10)





## ஒருங்கிணைப்புக் கூட்டம்

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை மறுதினம் 4ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது என பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ



யா/நவாலி ஸ்தான அ.மி.த.க. பாடசாலை அதிபர் க.விஜயகுமாரின் சேவைநலன் பாராட்டு விழா அண்மையில் இடம்பெற்ற போது...

## யாழ்.வலய அதிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ். வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள அதிபர் வெற்றிடங்களுக்கு யாழ்.வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் பொருத்தமான அதிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நிபந்தனைகள் :

இலங்கை அதிபர் சேவை வகுப்பு II,III ஐச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். போதிய அதிபர் சேவை II ஐச் சேர்ந்த விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாதவிடத்து மட்டுமே இலங்கை அதிபர் சேவை வகுப்பு III ஐச் சேர்ந்தவர்களினது விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும்.

இவர்கள் தற்போது கடமையாற்றும் பாடசாலையில் 3 வருட சேவையை பூர்த்தி செய்திருப்பதுடன் விண்ணப்ப முடிவுத் திகதியிலிருந்து நியமிக்கப்படும் பாடசாலையில் 3 வருடம் சேவையாற்றக் கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.

1. யா/சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை - வகை 2

2.யா/கந்தர்மடம் சைவப் பிரகாசவித்தியாலயம்-வகை2

3. யா/ நாவாந்துறை றோ.க.த.க.பா - வகை 2

இவ் விண்ணப்பங்கள் நேர்முகப் பரீட்சைக்குழு ஒன்றின் மூலம் பரிசீலிக்கப்பட்டு அதன் அடிப்படையில் தேர்வு செய்யப்படும்.

விண்ணப்பப்படிவங்களை யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தில் பொது நிர்வாகக்கிளையில் பெற்று 08.06.2016 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு யாழ். வலயக் கல்வி பணிப்பாளரான ந. தெய்வேந்திரராசா கேட்டுக் கொண்டுள்ளார். (இ

## அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் 'ஶ்ரீராமநாம கானாமிர்தம்' இசைவேள்வி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைக் கம்பன் கழகம் ஶ்ரீராமநாம கானாமிர்தம் எனும் பெயரிலான இசை வேள்வியினை ஆண்டுதோறும் நடத்தி வருகிறது.இவ் இசை வேள்விகளின் வரிசையில் 2016ஆம் ஆண்டுக்கான இசை வேள்வியினை எதிர்வரும் ஜூலை மாதம் 5ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை நடத்த கம்பன் கழகத்தினர் முடிவு செய்துள்ளனர்.

ஜூலை 5ஆம் திகதி மாலை நல்லூர் கம்பன்கோட்ட மேல் மண்டபத்தில் ஈழத்தின் பிரபல கலைஞர்களும் இந்தியக் கலைஞர்களும் கலந்து கொள்ளும் தியாகராஜசுவாமி இசை ஆராதனையுடன் இவ் இசைவேள்வி ஆரம்பமாகவுள்ளது.

6ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை தினமும் மாலை 5 மணிமுதல் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நம் நாட்டு பிரபல நாதஸ்வர தவில் வித்துவான்களின் கச்சேரிகளும் அதைத் தொடர்ந்து தமிழகத்திலிருந்து வருகை தரும் பிரபல இசைக்கலைஞர்களின் பாட்டுக்கச் சேரிகளும் நடைபெறவுள்ளன.

இவ்வாண்டு இசை வேள்வியில் தமிழ் நாட்டின் பிரபல இசைக்கலைஞர்களான மல்லாடி சகோதரர்கள்., அபிஷேக் ரகுராம், ஓ.எஸ். தியாகராஜன், ரி.என். சேஷகோபாலன், பம்பாய் ஜெயஶ்ரீ ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இலவசமாக நடைபெறவுள்ள இந் நிகழ்ச்சிகளில் பங்கேற்க விரும்புவோர் தமது விபரங்களை 077 293 5509 எனும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொண்டு அறியத்தரின் அவர்களுக்கான அழைப்பிதழ்கள் அனுப்பி வைக்கப்படும் என கம்பன் கழகம் அறிவித்துள்ளது. (இ-10)

### யாழ்.பிரதேச செயலர் பிரிவில்

## மலசலகூடத்திற்கு 91பேர் விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

மீள்குடியேற்ற அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மலசலகூடம் அமைக்கும் திட்டத்திற்கு யாழ். பிரதேச செயலகர் பிரிவில் 91 பயனாளிகள் விண்ணப்பித்துள்ளார்கள் என யாழ். பிரதேச செயலக புள்ளி விபரத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத் திட்டத்திற்கு 4.469 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒரு மலசலகூடத்திற்கு 54 ஆயிரத்து 500 ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்திற்கு 91 பயனாளிகள் விண்ணப்பித்திருந்தும் 82 மலசல கூடங்கள் அமைப்பதற்கே அனுமதி கிடைக்கப் பட்டுள்ளது. (இ-7)

## யாழ்ப்பாணத்தில் இன்னும் இரண்டு வருடங்களில் புகையிலைச் செய்கை முற்றாகக் கைவிடப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் 2 வருடங்களில் புகையிலை எசய்கை முற்றாக கைவிடப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக விவசாயத் திணைக்கள மாகாண பிரதிப் பணிப்பாளர் ஶ்ரீபால சுந்தரம் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் யாழ். மாவட்டத்தில் புகையிலைச்செய்கை எவ்வாறு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பது தொடர்பாக விளக்கம் கோரிய போது அதற்கு பதிலளித்த அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் 2 பிரிவுகளில் புகையிலைச் செய்கை நடைபெற்று வருகின்றது.

தீவுப்பகுதி மற்றும் உள்ளூர்ப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதில் மிகவும் அச்சுறுத்தலாக எமக்கு இருப்பது உள்ளூர்ப்பகுதிகளில் செய்யும் பயிர்ச்செய்கையால் வளமான நிலம் பாதிக்கப்படக் கூடிய சாத்தியம் காணப்படுகிறது.

இப் பயிர்ச்செய்கைக்கு எம்மால் ஊக்குவிப்புத்திட்டங்களோ பயிர் அழிவுக்கான கொடுப்பனவுகளோ வழங்கப்படுவதில்லை.

அவர்கள் தமது சொந்த முதலீட்டிலேயே இப் பயிர்ச் செய்கையை மேற்கொள்கின்றனர்.

இந்தப் பயிர்ச்செய்கையை மேற்கொள்பவர்களுக்கு மாற்று பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கான திட்டத்தை நாம் முன்னெடுத்துள்ளோம்.

அதாவது வருவாய் கூடிய பழச்செய்கைகளை முன்னெடுப்பதற்கான வழிகளை வழங்குவதற்கு தயாராகவுள்ளோம்.

சிலர் மாற்றுப் பயிர்ச் செய்கை செய்து வருகின்றனர்.

ஆனால் தீவுப்பகுதியில் மாற்றுப்பயிர்ச்செய்கையே மேற்கொள்ள முடியும்.

ஆனால் அவர்களின் வாழ்வாதாரத்தை கருத்திற் கொண்டு அப்பகுதிகளில் புகையிலை செய்கையை மேற்கொள்ள அனுமதி வழங்கினால் விவசாயிகளுக்கு நன்மையாக இருக்கும் என அவர்கள் எதிர்பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)







யா/ சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இதன் போது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களது உடற்பயிற்சி நிகழ்வினையும் நிகழ்வில் விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகன் வெற்றி பெற்ற இல்லத்திற்கு வெற்றிக்கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

தரம்-5 மாணவர்களுக்கான
**புலமைப்பரிசில் பரீட்சை** — மாதிரி வினாத்தாள் இல-14

**(01.06.2016 அன்று வெளிவந்த வினாத்தாளுக்குரியவை)**

பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 1) 3 | 11) 3 | 21) 3 | 31)3 |
| 2)3 | 12)2 | 22)2 | 32)1 |
| 3)1 | 13)1 | 23)14(I) | 33)3 |
| 4)3 | 14)1 | 24)3 | 34)2 |
| 5)3 | 15)2 | 25)3 | 35)2 |
| 6)3 | 16)2 | 26)3 | 36)30 லீற்றர் |
| 7)2 | 17)2 | 27)3 | 37)2 |
| 8)1 | 18)1 | 28)2 | 38)1 |
| 9)3 | 19)2 | 29)Open | 39)3 |
| 10)3 | 20)1 | 30)1 | 40)2 |

# மீனவர்கள் பிரச்சினை என்றுதான் தீருமோ?

## கருணாநிதி ஆதங்கம்

தமிழக மீனவர்களின் பிரச்சினை என்றுதான் தீருமோ என தி.மு.க. தலைவர் கருணாநிதி தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்.

"Men may come and Men may go, But I will go on for ever" என்று நதியொன்று பாடுவதாக ஆங்கிலக் கவிஞர் டென்னிசன் எழுதிய ஒரு கவிதை உண்டு. அதைப் போல இலங்கையில் எத்தனை ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும், நம்முடைய மீனவர்கள் பிரச்சினைக்கு மட்டும் முடிவு காலமே ஏற்படாது போல உள்ளது! 45 நாட்கள் மீன்பிடித் தடைக்காலம் முடிந்து கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற முதல் நாளே தமிழக மீனவர்கள் ஏழு பேர் இலங்கைக் கடற்படையினரால் நேற்று முன்தினம் சிறை பிடிக்கப்பட்டுள்ளனர்.

மீன்பிடி தடைக்காலம் முடிந்து நேற்று முன்தினம் தான் கிழக்குக் கடற்கரை பகுதி மீனவர்கள் கடலுக்குள் மீன் பிடிக்கச் சென்றிருக்கிறார்கள்.

இவர்களில் பலர் கச்சதீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த போது, அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்களைத் தாக்கி, விரட்டி அடித்ததுடன், சேசு இருதயம் என்பவரின் விசைப்படகையும், அதிலிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் 7 பேரையும் சிறை பிடித்துச் சென்றுள்ளனர்.

மீன்பிடித் தடைக்காலம் முடிந்து, மீன்பிடிக்கச் சென்ற முதல் நாளிலேயே இவ்வாறு 7 மீனவர்களை இலங்கைக் கடற்படை இரக்கமின்றிப் பிடித்துச் சென்றிருப்பது, இந்திய மீனவர்கள் மத்தியில் கடும் வெறுப்பையும், விரக்தியையும் ஏற்படுத்தியுள்ளது. மீனவர்கள் சிறை பிடிக்கப்பட்டதற்கு இராமேஸ்வரம் மீனவர் சங்கம் தனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு மாநிலத்திலும் • முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள், பதவியேற்றதும் உடனடியாக டில்லி சென்று பிரதமரையும், ஏனைய மத்திய அமைச்சர்களையும் நேரில் பார்ப்பதும், அவர்களிடம் மாநிலப் பிரச்சினைகளையும், கோரிக்கைகளையும் விவாதிப்பதும் வாடிக்கை. அதைப் பயன்படுத்திக் கொண்டு கூட நம்முடைய முதலமைச்சர் டில்லி சென்று இவ்வாறு இலங்கைக் கடற்படையினரால் அவ்வப்போது சிறை பிடிக்கப்படும் தமிழக மீனவர்களுக்கு முடிவின்றி தொடரும் துயரத்தை எடுத்துக் கூறித் தீர்வுகாண முயற்சி செய்திருக்கலாம்.

ஏற்கனவே இந்திய மீனவர்களின் பிரச்சினை குறித்து இரண்டு நாடுகளுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தை முடிவு காணப்படாமல் அந்தரத்தில் தொங்குகிறது. இந்தத் தீர்வு எட்டப்படாத பிரச்சினையில் தகுந்த முடிவு காண இந்திய அரசு இனியாவது அக்கறை செலுத்துமா? அல்லது எப்போதும் நடைபெறுகின்ற ஒரு தொடர் சம்பவம் தானே என்று அலட்சிய எண்ணத்தோடு விட்டு விடுமா?

மாநில அரசு, மத்திய அரசை நேரடியாகச் சென்று சந்தித்து மீனவர்களின் வாழ்க்கையைப் புரட்டிப் போடும் இப்படிப்பட்ட சம்பவங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்திடத் தேவையான அக்கறையோடும் அனுதாபத்தோடும் முயற்சிக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன் என்று கருணாநிதி தெரிவித்துள்ளார். (இ-10)

# இலங்கைக்கு யானைகளை வழங்க மியன்மார் இணக்கம்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

பௌத்த வழிபாட்டுத் தலங்களால் முன்னெடுக்கப்படும் நிகழ்வுகளில், பழக்கப்பட்ட யானைகளை பயன்படுத்துவது தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைகள் குறித்து ஆராயும் கலந்துரையாடலொன்று, ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

பண்டைய காலம்தொட்டு முன்னெடுக்கப்பட்டுவரும் பெரஹரா கலாசாரத்திற்கு முன்னுரிமையளித்து செயற்பட வேண்டுமென, இக்கலந்துரையாடலில் பங்கு பற்றிய அதிகாரிகளை அறிவுறுத்திய ஜனாதிபதி, ஏற்பட்டுள்ள சர்ச்சைகளுக்கான நீண்டகால மற்றும் குறுகியகால தீர்வுகளை கண்டறிவதன் அவசியத்தினையும் சுட்டிக் காட்டினார். இதுகுறித்து ஜனாதிபதி தொடர்ந்து குறிப்பிடுகையில்,

"பழக்கப்பட்ட யானைகளை பெரஹராக்களின் போது பயன்படுத்துவது தொடர்பிலான சட்ட பின்புலம் தொடர்பில், சட்டமா அதிபரிடம் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ள வேண்டும். அது எம்மிடமுள்ள குறுகிய கால பிரச்சினையாகும்.

நீண்டகாலம் தொடர்பில் சிந்திக்கும்போது, பெரஹராக்களுக்கு முக்கியத்துவம் வழங்குவது போன்று விஹாரைகள் மற்றும் தேவாலயங்களுக்கு யானைகளை வழங்குமாறு கோரிக்கைகள் விடுக்கப்படுகின்றன.

அதனால், எமக்கு சில யானைகளை வழங்குமாறு நான் அண்மையில் மியன்மார் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்தேன், அவர்களும் அதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர். இதன்படி முக்கிய இடங்களுக்கு யானைகளை வழங்க முடியுமென எண்ணுகிறேன்" என்றார்.

இக் கலந்துரையாடலில், நிலையான அபிவிருத்தி மற்றும் வன ஜீவராசிகள் அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா, அமைச்சின் செயலாளர் எஸ்.பி.பீ.மீகஸ்முல்ல, கண்டி தலதாமாளிகையின் திய வடன நிலமே உள்ளிட்ட பலர் பங்குபற்றியிருந்தனர். (இ-10)

## கிராமசேவையாளர் மீது தாக்குதல்

# இராணுவத்தை கண்டித்து நேற்று பாரிய ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

**மட்டக்களப்பு கிரான் பிரதேசத்தில் வைத்து கிராம சேவையாளரை இராணுவம் தாக்கியதை கண்டித்து பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப் பட்டுள்ளது.**





காட்டு பிரதேசங்களில் இருந்து மரங்களை வெட்டிக் கொண்டு வந்த இராணுவத்தினருக்கும் கிராம சேவையாளருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாக இராணுவத்தினர் கிராம சேவையாளரை தாக்கியுள்ளனர்.

இவ்வாறு கிராமசேவகர் தாக்கப்பட்டமையை கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுவதாக மட்டக்களப்பு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சா.வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மட்டக்களப்பு தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், கிராம சேவகர்கள், மக்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-10)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

| |
|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 36 சூரி செவ் 9 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில் : HNDA/ அரசதொழில்<br>தொ.இ: B/4471 |
| பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 10சூரி செவ் 3 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: B/4477 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 14 செவ் 4 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர் இந்தியா<br>தொ.இ: B/4479 |
| பிறப்பு: 1984RC<br>உயரம்: 168CM<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: B/4481 |

இவர்களுக்கு மணமகன் தேவை

| |
|---|
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 31<br>உயரம்: 157cm<br>தகைமை/தொழில்:CBF/வங்கியாளர்<br>தொ.இ: G/5458 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 16சூரிசெவ் 10 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:BSc/ஆசிரியர்<br>தொ.இ: G/5459 |
| பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 21<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: G/5461 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 32 செவ் 2 இல்<br>உயரம்: 169cm<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>தொ.இ: G/5462 |


**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு: 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

# வாக்காளர் தினத்தை முன்னிட்டு யாழில் விழிப்புணர்வுப் பேரணி









(படங்கள்:-கு.கஜரூபன்)

வாக்காளர் தினத்தை முன்னிட்டு தேர்தல் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வுப் பேரணி ஒன்று நேற்றைய தினம் காலை 8.30 மணியளவில் யாழ்.மத்திய பேருந்து நிலையத்திலிருந்து ஆரம்பித்து ஆஸ்பத்திரி வீதியூடாக யாழ்.மாவட்ட செயலகத்தை சென்றடைந்தது.

"தகைமையுடைய அனைத்துபிரஜைகளும்உள்ளடங்கிய தேருநர் இடாப்பொன்று" எனும் தொனிப்பொருளில் உங்களது பெயரைதேருநர் இடாப்பில்பதிவுசெய்துகொள்வதற்கு தாமதியாது நடவடிக்கை எடுக்கவும் என்ற சுலோகத்துடன் மேற்படி விழிப்புணர்வு பேரணி இடம்பெற்றது. இந்த பேரணியில்விழிப்புணர்வுதுண்டுப் பிரசுரங்களும் பொது மக்களுக்கு வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அகிலன் தலைமையில் யாழ்.மாவட்ட கேட்போர்கூடத்தில் சிறப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், எல்லைநிர்ணய ஆணைக்குழு தலைவர் கே.தவலிங்கம், மேலதிக தேர்தல் ஆணையாளர் ஜனாப்.எம்.எம்.மொஹமட் மற்றும் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை ஆகியோர் சிறப்புரைகளை வழங்கியிருந்தனர். தேர்தல் ஆணைக்குழுவின் அங்கத்தவர் பேராசிரியர் எஸ். ரட்ண ஜீவன்,எச்.ஹூல் விசேட உரையைவழங்கினார். மேலும் இந்நிகழ்வில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்களின் விழிப்புணர்வு நாடகம் ஒன்றும் மேடையேற்றப்பட்டது. (இ-7-9)

# புகைத்தலுக்கு எதிர்ப்பு



பஸ்தரிப்பு நிலையத்தில் பதாகைகளுடன் சமுர்த்திப் பயனாளிகள்

பருத்தித்துறை பிரதேச செயலகத்தினால் புகைப்பொருள் எதிர்ப்பு தினம் நேற்று புதன்கிழமை (01/06/2016) நடைபெற்றது. பிரதேச செயலகத்தில் இருந்து ஆரம்பமான பேரணி பஸ்தரிப்பு நிலையத்தில் நிறைவடைந்தது. இதில் பிரதேச செயலக அதிகாரிகள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சுகாதாரப் பகுதியினர், மாணவர்கள், சமுர்த்தி பயனாளிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.



சிகரெட்டின் மாதிரி தீ வைத்து எரிக்கப்படுவது

சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்கு முன்பாக சர்வதேச புகைத்தல் மது எதிர்ப்பு தினம் நேற்று புதன்கிழமை காலை நடைபெற்றது. இதில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், மதுவரித்திணைக்களத்தினர், சுகாதார பகுதியினர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.





கோப்பாய் பிரதேச வாழ்வின் எழுச்சி பிரிவினரால் கோப்பாய் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் புகைத்தலுக்கு எதிரான விழிப்புணர்வு பேரணி நேற்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் சித்திரவேலாயுத ஆலயத்தில் இருந்து கோப்பாய் பிரதேச் செயலகத்தைச் சென்றடைந்து விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெற்றது.

# நல்லாட்சி மீது சர்வதேசத்தின் அதிருப்தி அதிகரிக்கிறதா?

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் இரண்டு பிரதிநிதிகள் இலங்கைக்கு வந்து சென்றுள்ள நிலையில் இலங்கை அரசாங்கம் மீண்டும் ஒரு கண்துடைப்பு நாடகத்தை அரங்கேற்றியுள்ளது. ஜனாதிபதியின் செயலகப் பிரதிநிதிகள் கடந்த வாரம் யாழ்ப்பாணத்திற்குச் சென்று வலி.வடக்கு பாதுகாப்பு வலயப் பகுதியையும்,அகதி முகாம்களையும் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

இந்த வருகையின் நோக்கமானது,தமிழ் மக்களின் பூர்வீக வாழ்விட நிலங்களை மீண்டும் உரியவர்களிடம் ஒப்படைப்பதும், அகதி முகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் மக்களை மீள்குடியேற்றுவதுமே,ஜனாதிபதி செயலக அதிகாரிகளின் விஜயத்திற்கான நோக்கங்கள் என அரசாங்கம் வெளி உலகுக்கு காட்ட முற்படுகின்றது.

இதற்குக் காரணம் தொடர்ந்தும் தமது காணிகளை விடுவித்து தம்மை தமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்ய வேண்டுமென தமிழ் மக்கள் வலியுறுத்தி வருவதை இலங்கை அரசாங்கம் செவிமடுத்து தமிழ் மக்களின் மீதான அக்கறையில்,நடவடிக்கையில் இறங்கியுள்ளதுஎன்று காட்ட முனைகிறது.

தற்போது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தின் கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில்,கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் இலங்கை தொடர்பாக அமெரிக்கா தலைமையில் பரிந்துரைக்கப்பட்டு, இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்போடு தீர்மானம் நிறைவேற்றப்பட்ட, இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் போன்றவற்றை விசாரிப்பதற்கான பொறிமுறை தொடர்பாக இலங்கை அரசாங்கம் அசமந்தப் போக்கையும், கால தாமதத்தையும் கொண்டிருப்பது தொடர்பாக அண்மையில் இலங்கை வந்திருந்த ஐ.நா. அதிகாரிகள் அதிருப்தி தெரிவித்திருந்தனர்.

கலப்பு நீதிமன்றம் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஐ.நா. குழுவின் இரண்டு பிரதிநிதிகள் தமது ஆலோசனைகள்,கருத்துக்கள் உள்ளடங்கிய 46 பக்க அறிக்கையை இலங்கை அரசிடம் கையளித்துச் சென்றுள்ளனர். எதிர்வரும் 13ஆம் திகதி மனித உரிமைகள் ஆணையகத்தின் 32ஆவது அமர்வில் அந்த அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் தெரிவித்துச் சென்றுள்ளனர்.

இந்த நிலையிலே இலங்கை அரசு நிலங்களை விடுவிப்பது, மீள்குடியேற்றம் என்பவற்றை நிறைவேற்றத் தொடங்கியுள்ளதாக ஒரு செய்தியை சர்வதேச சமூகத்திற்கு அனுப்ப முயற்சிக்கின்றது. ஆனால் மனித உரிமை ஆணையகமும், சர்வதேச சமூகமும் இலங்கை அரசிடமிருந்து எதிர்பார்ப்பதோ, இலங்கை அரசு ஏற்றுக் கொண்டபடியான பொதுநலவாய் நாடுகளின் சட்டத்தரணிகள் மற்றும் நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றத்தை அமைப்பது தொடர்பாக இலங்கை அரசாங்கத்தின் நகர்வுகளையே என்பதால் அது தொடர்பாகவே இலங்கை அரசாங்கம் தனது முன்னெடுப்புக்களைச் செய்ய வேண்டும்.

அதைவிடுத்து காணிகளை பார்வையிடுவதும்,அகதி முகாம்களை பார்வையிடுவதும் சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்தாது. மாறி மாறி ஆட்சிக்கு வரும் தென் இலங்கை அரசுகள் சொல்வது ஒன்றும், செய்வது வேறொன்றுமாக நடந்து கொள்வதாலேயே ஆரம்பத்தில் இணங்கி வருகின்ற சர்வதேச சமூகம் பின்னர் இலங்கை அரசுகளை விட்டு கடந்த காலத்தில் தூரமாகிப் போயிருக்கின்றது.

தற்போது நல்லாட்சி என்று கூறினாலும், தமிழ் மக்களுக்கு இருக்கும் நல்லாட்சி அரசாங்கம் மீதான கசப்பான அனுபவங்களில் ஒன்று, ஜனாதிபதியே நிலங்களை உரியவர்களிடம் ஒப்படைக்குமாறு கூறினாலும், அல்லது அடையாளத்திற்கு ஒரு பகுதி நிலங்களை உரியவர்களுக்கு ஒப்படைத்திருந்தாலும் படையினர் அந்த உத்தரவை மதித்து செயற்பட்டதில்லை. அதையிட்டு அரசாங்கம் வாய் திறப்பதே இல்லை. தமிழ் மக்களின் நிலங்களை மீளவும் ஒப்படைப்பது, கைதிகள் விடுதலை இவ்வாறான விடயங்களைப் பொறுத்தவரை அரசாங்கம் வேறாகவும், படையினர் வேறாகவுமே செயற்பட்டு வருகின்றனர் என்பதை ஏற்கனவே நாம் கூறியிருக்கின்றோம்.



மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால், மகிந்த ராஜபக்ஷ என்ன உத்தரவை இடுகின்றாரோ அதை படையினர் நடைமுறைப்படுத்தினார்கள். ஆனால் நல்லாட்சி படையினர் அரசுக்கு கட்டுப்பட்டு நடப்பதாகத் தெரியவில்லை. ஒருவேளை தற்போதைய அரசு இரண்டு தலைமைத்துவங்களைக் கொண்டிருப்பதால் படைகள் இருவரையும் கையாளும் தந்திரோபாயத்தைக் கொண்டு இயங்குகின்றார்களோ என்று கூட எண்ணத்தோன்றுகின்றது.

நல்லாட்சி அரசாங்கம் என்று வெளியில் கூறிக் கொண்டாலும்,பலத்த நெருக்கடிகளை எதிர்கொண்டபடியேதான் அரசாங்கம் போய்க் கொண்டிருக்கின்றது. நிதி அமைச்சர் மாற்றம், புதிய அமைச்சர்கள் நியமனம் என்று சில பிரச்சினைகளுக்கு ஜனாதிபதியும், பிரதமரும் தீர்வுகாண முடியாமல் இருக்கின்றார்கள்.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி மகிந்த ராஜபக்ஷவை தோற்கடித்து ஜனாதிபதியாக பதவியேற்ற மைத்திரிபால சிறிசேனா தனது உரையில் இன்னொரு முறை ஜனாதிபதியாக போட்டியிட மாட்டேன் என்று கூறியிருந்தார்.

ஆனால் தற்போது, அடுத்த தேர்தலிலும் மைத்திரிபால போட்டியிடுவார் என்று சுதந்திரக் கட்சியினரும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினரும் கூறிவருகின்றனர்.

அந்தக் கருத்தை ஜனாதிபதி மைத்திரிபால நிராகரிக்கவும் இல்லை. ஆனால் தொடர்ந்தும் தற்போதுள்ள ஜனாதிபதி அதிகாரங்களை தன்வசமே வைத்திருப்பதற்கும், அடுத்த தடவையும் ஜனாதிபதியாக போட்டியிடுவதற்குமான முன் தயாரிப்புக்கள் ஜனாதிபதி அல்லது அவரைச் சுற்றியுள்ளவர்களினால் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தகவல்கள் கிடைக்கின்றன.

இதற்கிடையே அடுத்ததாக தனித் தலைமையின் கீழ் ஆட்சியை அமைப்பதற்கான தேவையையும், அதற்கான திட்டங்களையும் சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் திரை மறைவில் முன்னெடுத்திருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சியானது, தனியாக ஆட்சியை அமைக்குமாக இருந்தால், அதைப் பாதுகாக்கும் பங்களிப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செய்யும் என்று ஐக்கிய தேசியக் கட்சி நம்புகின்றது.

மறுபக்கத்தில் சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தனியாக ஆட்சியமைக்க முற்படுமாக இருந்தால்,அதற்கு தற்போதைய பொது எதிரணியை இணைத்துக் கொண்டாலும், மேலும் 20 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு தேவை என்ற நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து உள்வாங்கிக் கொள்ள முடியும் என்று சுதந்திரக் கட்சி எதிர்பார்க்கின்றது.

இதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை பலப்படுத்துகின்ற மற்றும் ஒருங்கிணைக்கின்ற பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சுதந்திரக் கூட்டமைப்பின் இந்த முயற்சிகளின் பரிணாம வளர்ச்சியானது,மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக முன்னிறுத்தி ஆட்சியைக் கைகப்பற்றுவதாக இருப்பதை சுதந்திரக் கட்சியின் சில அமைச்சர்களே வெளிப்படையாக கூறுமளவுக்கு நிலைமை உள்ளது.

உள்ளக அரசியல் இழுபறிகள் திமிறிக் கொண்டு வெளிக்கிளம்புமாக இருந்தால், சர்வதேச சமூகத்தின் இலங்கை தொடர்பான திட்டங்களும் எதிர்பார்ப்புக்களும் சிதறிப்போய்விடும் என்பதால், அத்தகைய குழப்பங்களுக்கு முன்னர் இலங்கை அரசாங்கம் மீதான தமது திட்டங்களை நிறைவேற்றிக் கொள்ளவே சர்வதேச சமூகமும் முற்படும்.

இந்த நிலைமையானது, குழப்பங்களைத் தீர்த்துக் கொண்டு ஏற்றுக் கொண்ட தீர்மானங்களை நிறைவேற்ற இலங்கைக்கு இன்னும் கால அவகாசம் தேவை என்ற கேள்விக்கு வலிமை சேர்க்கும். தவிர்க்க முடியாமல் அதற்கும் சர்வதேசம் தலையாட்டும் என்று இலங்கை ஆட்சியாளர்கள் கணக்குப் பார்க்கவும் இடம் இருக்கின்றது.

-ஆதவன்-

# ஊடகவியலாளர்களின் படுகொலைக்கு நீதிகோரி கவனயீர்ப்புப் போராட்டம்







மட்டக்களப்பில் வைத்து படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர் ஐ.நடேசனின் 12 ஆவது நினைவு தினத்தினை முன்னிட்டு மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்றிலில் நேற்று முதலாம் திகதி கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நடேசனின் படுகொலை விசாரணையை மீள ஆரம்பிக்கக்கோரியும் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் விசாரணைகளை துரிதப்படுத்தக் கோரியும் ஊடக சுதந்திரத்தினை வலியுறுத்தியும் இந்த கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

2004 ஆம் ஆண்டு மே 31ஆம் திகதி திங்கட்கிழமை நடேசன்; தனது வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிளில் அலுவலகத்திற்குச் சென்று கொண்டிருந்த வேளை மட்டக்களப்பு எல்லை வீதியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைமையில் இடம்பெற்ற இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஊடகவியலாளர்கள்,மனித உரிமை செயற்பாட்டாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிககள், அரசியல் பிரதிநிதிகள், சிவில் சமூக பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## அமைச்சர் தலதாவின் யோசனை ஜனாதிபதி மைத்திரியால் நிராகரிப்பு



வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் தலதா அத்துகோரளவின் யோசனையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிராகரித்துள்ளார்.

வெளிநாட்டுக்கு வேலை வாய்ப்பு பெற்றுச் செல்லும் வீட்டுப் பணிப்பெண்களின் ஆகக் குறைந்த வயதெல்லையை 22 ஆக குறைக்கும் யோசனையை ஜனாதிபதி நிராகரித்துள்ளார்.

அமைச்சரவையில் நேறறு முன்தினம் இந்த யோசனை முன்வைக்கப்பட்ட போது ஜனாதிபதி இதனை நிராகரித்துள்ளார்.

தற்போது காணப்படும் 25 என்ற ஆகக் குறைந்த வயது எல்லையை 22 ஆக குறைப்பதற்கு அனுமதி வழங்குமாறு தலதா அத்துகோரள அமைச்சரவை பத்திரமொன்றை சமர்ப்பித்திருந்தார். எனினும் இதனை ஏற்றுக்கொள்ள முடியாது என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வயதெல்லையை குறைப்பதனால் இளம் யுவதிகள் அதிகளவில் வெளிநாட்டுக்கு வீட்டுப் பணிப் பெண்களாக செல்லக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பெண்கள் வெளிநாட்டுக்கு வேலை வாய்ப்பு பெற்றுச் செல்வதனை முடிந்தால் முற்று முழுதாக நிறுத்த வேண்டுமென தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்த நிலைப்பாட்டுக்கு மேலும் சில அமைச்சர்களும் வலுச் சேர்த்துள்ளனர்.

அரசாங்கத்தின் நிலைப்பாடும் கொள்கையும் அதுவென்றால் அதனை ஏற்றுக் கொள்வதாக தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுக்குவேலைவாயப்பு பெற்றுச் செல்லும் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்து தேசிய கொள்கை ஒன்றை உருவாக்க ஜனாதிபதி அமைச்சரவை- குழுவொன்றை



நியமித்துள்ளார்.

இந்தக் குழுவில் அமைச்சர் தலதா அத்துகோரளவும் அங்கம் வகிக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

பெண்கள் வெளிநாட்டுக்கு வேலை வாய்ப்பு பெற்றுச் செல்வதனை முற்று முழுதாக தடுத்து நிறுத்த முடியுமா? என ஆராயுமாறு ஜனாதிபதி அந்தக் குழுவினரிடம் கோரியுள்ளார். (இ-10)

## 2 மில்லியன் பெறுமதியான சந்தனக்குற்றிகளை நன்கொடையாக வழங்கியது சுங்கத் திணைக்களம்

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு இலங்கை சுங்கத் திணைக்களம் 2 மில்லியன் ரூபா மதிப்புள்ள சந்தன மரக்குற்றிகளை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்திற்கு நன்கொடையாக வழங்கியுள்ளது.

குறித்த சந்தன மரக்குற்றிகளை ஆயுர்வேத மருந்து தயாரிப்பிற்காக வழங்கியுள்ளதாக இலங்கை சுங்கப் திணைக்களப் பணிப்பாளர் சூலனந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

500 கிலோகிராம் எடையுள்ள சந்தன மரக்குற்றிகளே இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன.

குறித்த சந்தன மரக்குற்றிகள் கடந்த வருடம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து பறிமுதல் செய்யப்பட்டவை என சுங்கத் திணைக்கள பணிப்பாளர் தெரிவித்தார்.

ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் லால் சமரசிங்க, குறித்த சந்தன மரெக்குற்றிகள் ஆயுர்வேத மருந்துகள் தயாரிப்பிற்கு பயன்படுத்தப்படும் முக்கிய மூலக்கூறாகும்.

இதன்மூலம் உள் நாட்டிற்கு தேவையான ஆயுர்வேத மருந்துகளை தயாரிக்க முடியும். இந்த சந்தன மரக்குற்றிகளைக் கொண்டு காலதாமதமின்றி ஆயுர்வேத மருந்துளை தயாரிப்பதற்கு தாம் எதிர்பார்ப்பதாக தெரிவித்தார். (இ-10)

## அதிக கொத்தடிமைகள் வாழும் நாடுகளில் இந்தியா முதலிடம்

### 42 ஆவது இடத்தில் இலங்கை

உலக நாடுகளில் அதிக கொத்தடிமைகளை கொண்ட நாடுகளில் இலங்கை 42 ஆவது இடத்தினை பிடித்துள்ளது.இதன்படி இலங்கையல் சுமார் 45 ஆயிரத்து 900 கொத்தடிமைகள் வாழ்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த பட்டியலில் அதிக கொத்தடிமைகள் கொண்ட நாடாக இந்தியா பெயரிடப்பட்டுள்ள அதேவேளை, சுமார் 18 மில்லியன் கொத்தடிமைகள் இந்தியாவில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எண்ணிக்கை இந்திய சனத்தொகையில் 1.4 வீதம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வோல்க் பிரி அறக்கட்டளை வெளியிட்டுள்ள 2016 உலக அடிமைத்தன அட்டவணையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2 ஆண்டுகளுக்கு முன்னர் 167 நாடுகளில் 42 ஆயிரம் பேரிடம் 50 மொழிகள் மூலம் மேற்கொள்ளபபட்ட ஆய்வுகள் தற்போது திருத்தம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த ஆய்வுகளுக்கு அமைய அடிமைகள் 28 சதவீதம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள அதேவேளை, உலகம் முழுவதும் 4.5 கோடிக்கு அதிக மானவர்கள் நவீன அடிமைகளாக சிக்கியுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அடிமைகளாக சிக்குண்டவர்களில் மூன்றில் 2 பங்கு ஆசிய மற்றும் பசுபிக் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இவ்வறிக்கையின் பிரகாரம் உலக நாடுகள் முழுவதும் 45.8 மில்லியன் பேர் கொத்தடிமைகளாக நடத்தப்பட்டு வருகின்றனர்.

அத்துடன், ஆசியாவை பொறுத்தமட்டில் இந்தியாவிற்கு அடுத்தபடியாக சீனாவில் 30.3 இலட்சம் கொத்தடிமைகளும், பாகிஸ்தானில் 21.3 இலட்சம் கொத்தடிமைகளும், பங்களாதேஷில் 15.3 இலட்சம் கொத்தடிமைகளும், உஷ்பெகிஸ்தானில் 12.3 இலட்சம் கொத்தடிமைகளும் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில், மக்கள் தொகை அடிப்படையில் உஸபெகிஸ்தானில் 3.97 சதவீதமும் கம்போடியாவில் 1.65 சதவீதமுமாகும்.

இதேவேளை, இந்த ஆய்வில் இருந்து தென்கொரியாவில் மட்டுமே இந்த நவ்ன அடிமை எந்த வடிவிலும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

| நிலை | நாடு | சனத்தொகையில் அடிமைத் தனத்தின் சதவீதம் | நவீன அடிமைத் தனத்தில் மக்கள் எண் |
|---|---|---|---|
| 1 | இந்தியா | 1.403 | 18,354,700 |
| 2 | சீனா | 0.247 | 3,388,400 |
| 3 | பாகிஸ்தான் | 1.130 | 2,134,900 |
| 4 | பங்களாதேஷ் | 0.951 | 1,531,300 |
| 5 | உஸ்பெகிஸ்தான் | 3.973 | 1,236,600 |
| 6 | வடகொரியா | 4.373 | 1,100,000 |
| 7 | ரஷ்யா | 0.732 | 1,048,500 |
| 8 | நைஜீரியா | 0.481 | 875,500 |
| 9 | கொங்கோ | 1.130 | 873,100 |
| 10 | இந்தோனேசியா | 0.286 | 736,100 |
| 42 | இலங்கை | 0.221 | 45,900 |

# தமிழர்களின் இழந்த கல்வியை மீளப்பெற அனைவரினதும் பங்களிப்பு அவசியம்



ந.அனந்தராஜ்
முன்னாள் உலக வங்கியின் பாடசாலை மேம்பாட்டு திட்டத்திற்கான நிபுணத்துவ ஆலோசகர்.

இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் அண்மைக்காலமாக தமிழ் மொழி மூலப் பாடசாலைகளின் பொதுப்பரீட்சைப் பெறுபேறுகள் மற்றும் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள் பல்வேறு விமர்சனங்களுக்கு ஆளாகி வரும் நிலையில் இத்தகைய விமர்சனங்களில் இருந்து எவ்வாறு பாடசாலைகள் மீண்டெழ முடியும்?

➢ யாழ்.மாவட்டம் பரீட்சைப் பெறுபேற்றில் இருபத்தியேழாவது மாவட்டமாக வந்துவிட்டது

➢ கிளிநொச்சி வலயம் 96 இக்கும். தீவகம் 97 ஆவது நிலைக்கும் தள்ளப்பட்டுவிட்டன.

➢ கிழக்கு மாகாணம் எட்டாவதாகவும். வடமாகாணம் ஒன்பதாவதாகவும் உள்ளது.

➢ தமிழ்மொழிப் பாடத்திலான பெறுபேறுகளில் 21% மாணவர்கள் சித்தி பெறத்தவறி விட்டனர்.

➢ உயர்தர வகுப்பில் கணிதம். விஞ்ஞானம் ஆகிய துறைகளுக்கு மாணவர்கள் சேரும் எண்ணிக்கை வீழ்ச்சி அடைந்து கொண்டு போகின்றது.

➢ எல்லாப் பாடங்களிலும் சித்தியடையத் தவறுபவர்களின் எண்ணிக்கை மற்றைய மாவட்டங்களை விட அதிகம் என்பன போன்ற விமர்சனங்கள் அண்மைக்காலமாக கல்வியாளர்களினாலும், ஊடகங்களினாலும் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

வடமாகாணத்தின், கல்வி பொதுத் தராதர சாதாரண பரீட்சையின் பெறுபேறுகளில் 2005-2008 வரையான ஆண்டுகளில் வடமாகாணம் முதல் 5 இடங்களுக்குள் காணப்பட்டது. 2009 ஆம் ஆண்டு வடமாகாணம் 2 ஆவது இடத்திற்கு வந்துள்ள போதும். 2009 ஆம் ஆண்டிற்குப் பின் யுத்தம் முடிவடைந்த பின்னர். க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. 2014. 2015 ஆம் ஆண்டுகளில் வடமாகாணம் 9 ஆவது இடத்தில் உள்ளது.இந்த நிலையில் மாவட்ட ரீதியாகப் பார்க்கும் போது இலங்கையில் உள்ள 25 மாவட்டங்களிலும். வடமாகாணத்தில் உள்ள மாவட்டங்களே கல்வி அடைவில் மிகவும் பின் தங்கிய நிலையில் காணப்படுகின்றன.

இலங்கையில் உள்ள 98 வலயங்களில் 2015 ஆம் ஆண்டு பெறுபேறுகளில் வடமாகாணத்தில் உள்ள வலயங்கள் எல்லாமே மிகவும் பின் தங்கிய நிலையிலேயே காணப்படுவதைப் பின்வரும் அட்டவணையில் பார்க்கலாம்.

| க.பொ.த. (சா/த) பரீட்சை - 2014 | | க.பொ.த. (சா/த) பரீட்சை 2015 | |
|---|---|---|---|
| வலயம் | நிலை | வலயம் | நிலை |
| யாழ்ப்பாணம் | 21 | யாழ்ப்பாணம் | 27 |
| மன்னார் | 6 | மன்னார் | 35 |
| வவுனியா தெற்கு | 13 | வவுனியா தெற்கு | 57 |
| வடமராட்சி | 46 | வடமராட்சி | 60 |
| மடு | 53 | மடு | 61 |
| வலிகாமம் | 83 | வலிகாமம் | 84 |
| தென்மராட்சி | 62 | தென்மராட்சி | 85 |
| வவுனியா வடக்கு | 92 | வவுனியா வடக்கு | 90 |
| முல்லைத்தீவு | 84 | முல்லைத்தீவு | 93 |
| துணுக்காய் | 94 | துணுக்காய் | 94 |
| கிளிநொச்சி | 93 | கிளிநொச்சி | 96 |
| தீவகம் | 97 | தீவகம் | 97 |

| க.பொ.த. (சா/த) பரீட்சை - 2014 | | க.பொ.த. (சா/த) பரீட்சை - 2015 | |
|---|---|---|---|
| மாவட்டம் | நிலை | மாவட்டம் | நிலை |
| மன்னார் | 2 | மன்னார் | 10 |
| வவுனியா | 7 | வவுனியா | 16 |
| யாழ்ப்பாணம் | 20 | யாழ்ப்பாணம் | 21 |
| முல்லைத்தீவு | 24 | முல்லைத்தீவு | 24 |
| கிளிநொச்சி | 25 | கிளிநொச்சி | 25 |

இவ்வாறான பின்னடைவுகளுக்கு யார் காரணம்? மாணவர்களின் அக்கறையின்மையா? அல்லது பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களின் அசமந்தமா? அல்லது வலயக்கல்விப் பணிப்பாளர்கள், பிரதி மற்றும் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள். பாடரீதியாக நேரடியாகப்பாடசாலைகளுடன் தொடர்புகளை வைத்திருக்கும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களின் வழிகாட்டல் மற்றும் விளைத்திறன் மிகக மேற்பார்வைகள் இன்மையா? என்பன போன்ற வினாக்களுக்கு எத்தகைய நியாயங்களைக் கூறமுடியும்.?

பல மாதங்களுக்கு மேலாக 1AB பாடசாலை ஒன்றின் விஞ்ஞான ஆய்வு கூடத்திற்கு மாணவர்களை ஆசிரியர் அழைத்துச் செல்லாததற்கு அவர் கூறிய காரணம் வேடிக்கையாக இருந்தது. "ஆய்வு கூடத்திற்குள் நிறைய எலிகள் இருப்பதால், உபகரணங்களை வைத்து எடுக்கமுடியவில்லை." என்று கூறிவந்ததையே பாடசாலைக்கு வருகை தருகின்ற சேவைக் கால ஆசிரிய ஆலோசகர்கள் உட்பட பெற்றோர்.பழைய மாணவர்கள் மற்றும் கல்வி அதிகாரிகள் அனைவரிடமும் கூறிக் கொண்டு வந்துள்ளார். அவரது அந்த வார்த்தைகளை நம்பியவர்களாகவே தமது மேற்பார்வைகளையும் செய்து வந்திருக்கின்றனர்.

அவ்வாறான ஒரு 1 AB பாடசாலையில் 28 % மாணவர்களே விஞ்ஞான பாடத்தில் சித்தியடைந்ததால், அந்தப் பாடசாலை பாரம்பரியமாக விஞ்ஞானப் பிரிவைக் கொண்டிருந்த போதிலும். மாணவர்கள் இல்லாத காரணத்தினால். க.பொ.த.உயர்தர விஞ்ஞான வகுப்பில் மாணவர்கள் இல்லாத காரணத்தினால், அந்தப்பாடசாலையில் விஞ்ஞானப் பிரிவைத் தொடர்ந்தும் தக்கவைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதேபோன்று ஏனைய பல பாடசாலைகளில் மாணவர்களின் கற்றலுக்காகப் பயன்படுத்த வேண்டிய உபகரணங்கள்.நூலகப் புத்தகங்கள்.விளையாட்டு உபகரணங்கள் என்பன பயன்படுத்தப் படாமலேயே பூட்டி வைத்திருக்கப்பட்டிருக்கின்றன.

அதேநேரம்.அந்தப் பாடசாலைக்கு வலயக்கல்விப்பணிப்பாளர். விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர்கள். விஞ்ஞான சேவைக் கால ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள் ஆகியோர். குழு மேற்பார்வை மற்றும் வலய மட்டக் கண்காணிப்புக் குழு (ZMP) என்று எத்தனை தடவைகள் வருகை தந்திருப்பார்கள்? அவர்கள் ஆய்வுகூடம். அலுவலகங்கள், நூலகங்கள், வகுப்பறைகள் என்பவற்றின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்யாமலேயே தமது மேற்பார்வைகளை முடித்துச் சென்றிருக்கின்றார்களா? அதே போன்று ஆசிரியர்களின் சேவைக் காலப் பயிற்சிக்காகவும் பாடசாலைகளின் உள்ளகப் பயிற்சிக்காகவும் எவ்வளவு பணத்தைச் செலவிட்டு அந்த ஆசிரியர்களுக்குப் பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன?

அவற்றைவிட. தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பிவிட்டுப் பிள்ளையின் வளமான எதிர்காலத்தை நோக்கித் தவம் இருக்கின்ற பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவர்கள் கூட ஏன் இவற்றைப் பார்த்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை? அவர்களுக்குச் சரியான நேரத்தில் சரியானவற்றைச் செய்யமுடியாத அளவுக்கு வேறு ஏதாவது அச்சுறுத்தல்கள் உள்ளனவா?

2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் இலங்கைத் தமிழ் மக்களுக்கும் இந்திய,இலங்கை அரசுகளின் படைகளுக்கும் இடையிலான யுத்தம் மூண்டிருந்த காலத்தில் வடக்குக் கிழக்கு மாகாணத்தின் கல்வி அபிவிருத்தியானது மிக உயர்ந்த நிலையில் இருந்தது. ஆனால் தற்பொழுது கடந்த சில ஆண்டுகளாக வடக்கும், கிழக்கும் 8 ஆம், 9 ஆம் நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பது என்பது துர்ப்பாக்கியமானது. 8க்கும்,9க்கும் இடையில் எந்த மாகாணம் 9 ஆம் இடத்தைக் கைப்பற்றுவது என்பதில்தான் இரண்டு மாகாணங்களுக்கும் இடையில் போட்டி நிலவுகின்றது போல் தெரிகின்றது.




தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகம் வடக்கு கிழக்கின் பெரும்பான்மையான பகுதிகளில் இருந்த பொழுது.அதிபர்கள்.ஆசிரியர்கள் உட்பட அனைத்து அதிகாரிகளும், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் செயற்பட்டதால். அன்று கல்வி அபிவிருத்தி உயர்ந்த நிலையில் இருந்தது என்பதை சிங்கள மொழிபேசும் அதிகாரிகளே ஏற்றுக் கொண்டுள்ளனர். அன்று இருந்தது போல் இன்று ஏன் இல்லை என்ற ஒரு கருத்துக் கணிப்பை எடுத்த பொழுது.பின்வரும் கருத்துக்கள் பொது மக்களாலும்.பொது அமைப்புக்களாலும். பெயர் குறிப்பிட விரும்பாத கல்வி அதிகாரிகளினாலும் முன்வைக்கப்பட்டன. இங்கு தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் எழுமாற்றாகவே பெறப்பட்ட பொழுது. தெரிவு செய்யப்பட்ட கல்வித் துறைசார்ந்த அறிஞர்களிடம், "தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் குறிப்பாகப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் வடக்கு கிழக்கு மாகாணத்தின் கல்வி அபிவிருத்தியானது உச்ச நிலையில் இருந்தமைக்கான காரணங்கள் எவை?" என்ற வினாவைக் கொண்ட வினாக்கொத்து வழங்கித் திரட்டப்பட்ட தகவல்களில் பெரும்பாலானோர் தெரிவித்த கருத்துக்கள் பின்வருமாறு இருந்தது. அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் இங்கு தொகுத்து வழங்கப்படுகின்றன.அதேவேளை

> அண்மைக் காலமாகக் கல்வியாளர்களினாலும், ஊடகங்களினாலும் பிரதான பேசுபொருளாகியுள்ள வடமாகாணத்தின் கல்வித் தரமும்,அவற்றில் ஏற்பட்டுவரும் பின்னடைவுகள் தொடர்பாக நாம் மிக அவசரமாக முடிவெடுக்கவேண்டிய நிலையில் உள்ளோம். தமிழ் மாணவர்களின் கல்வியில் அக்கறை எடுத்துச் செயற்பட்டு வரும் வலம்புரிக்கு இதில் ஒரு முக்கிய வகிபாகம் உள்ளது.

அன்றைய அவர்களுடைய நிர்வாகத்தில் சிறப்பாகத் தமது கடமைகளைச் செய்த அதிபர்.ஆசிரியர்கள். கல்வி அலுவலர்களினால் தற்பொழுது. ஏன் அவ்வாறு செய்யமுடியாதுள்ளது என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளனர்.

✦ பெண்களுக்கான 100% பாதுகாப்பு இருந்தது. இது பற்றி ஒரு பெற்றோர் கருத்துக் கூறும் பொழுது. பாரதி கண்ட கனவு போல், மகாத்மா காந்தி தெரிவித்தது போல் "எப்பொழுது தன்னந்தனியளாக ஒரு பெண் நடுநிசியில் அச்சமின்றி நடந்து போகின்றாளோ, அப்பொழுது தான் இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்ததாகக் கருதமுடியும் என்பதைக் குறிப்பிட்டு, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில், நள்ளிரவில் கூட இளம் பெண்கள் சுதந்திரமாக நடமாடித் திரிந்ததை அவர் பெருமையுடன் நினைவு கூறினார். இந்தச் சூழல் கற்பதற்கான ஒரு நல்ல மனோ நிலையையும் உருவாக்கியிருந்தது.

✦ விடுதலைப் புலிகள் இருந்த போதும். கல்வி கற்பதற்கான தடைகளையோ அல்லது பாடசாலைகளின் மீதான கட்டுப்பாடுகளையோ விதிக்கவில்லை.பாடசாலைகளை சுயமாக இயங்கச் செய்வதற்கான அனைத்து வசதிகளையும் செய்திருந்தனர்.

✦ பாடசாலைகளில் கற்றலுக்கான உள்ளீடுகள் பொருளாதாரத் தடைகளினால் மட்டுப்படுத்தப் பட்ட நிலையிலும்,ஆசிரியர்களின் கற்றல்.கற்பித்தல் செயற்பாடுகள் உன்னதநிலையிலேயே இருந்தன. வரம்பு மீறிச் செயற்படுகின்ற அல் லது தமது கடமைகளைச் சரிவரச் செய்யாது காலத்தைக் கடத்து கின்ற அதிபர். ஆசிரியர்கள் மீதான கண்காணிப்பு எப்பொழுதும் இரு ந்தது.

✦ பாடசாலை நேரங்களிலும் கிழமை நாட்களில் காலையி லும் தனியார் கல்வி நிறுவன ங்கள் இயங்குவதைத் தடை செய்ததுடன். அவற்றின் செயற்பாடுகளின் மீது பலமான கட்டுப்பாடுகளையும் விதித்திருந்ததால். பாடசாலைக் கல்விக்கு அனைத்துத் தரப்பினராலும். முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது.

✦ அவர்களால் கட்டாயக் கல்வித் திட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டதனால் 5 வயது தொடக்கம் 14 வயது வரையான பிள்ளைகள் எவரும் பாடசாலை செல்லாது இருந்ததில்லை.

✦ தமிழ் மொழித்தின் போட்டிகளை நடத்தி பரிசுகளையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்கி தமிழ்மொழிக் கல்வியை ஊக்குவித்தனர்.

✦ பாடசாலைகள், கல்வித் திணைக்களங்கள் போன்றவற்றில் எவரேனும் நிதிக்கையாடல்களிலோ அல்லது இலஞ்சம்,பாலியல் போன்ற மோசடி நடவடிக்கைகளிலோ ஈடுபட முடியாத அளவுக்கு. விடுதலைப் புலிகளின் கல்விப் பிரிவு விழிப்புடன் இருந்தது. இதனால். கல்விக்காக ஒதுக்கப்படுகின்ற நிதி முழுவதும் பிள்ளைகளுக்கே பயன்படுத்தப்பட்டதுடன்.எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் பாலியல் துஷ்பிரயோகங்களோ. வாள்வெட்டுச் சம்பவங்களோ எதுவும் நடைபெறவில்லை.

இவ்வாறு ஒரு சாதகமான சூழ்நிலை நிலவிய காலத்தில் இருந்த கல்வித்தரமானது. 2009 யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதாகக் கூறப்பட்டதைத் தொடர்ந்து ஒரு பெரும் சரிவை ஏன் சந்தித்து வருகின்றது என்பதற்கான காரணங்களை அறிந்து அவற்றிற்கான பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு இன்றைய கல்விச் சமூகத்திடம் உள்ளது.

எனவே எமது பாடசாலைக் கல்வி நிர்வாக முறைமையில் வாய்ப்பாக உள்ள பலங்களையும்.கிடைக்கின்ற வாய்ப்புக்களையும். பலவீனங்களையும் அச்சுறுத்தல்களையும் பகுப்பாய்வு செய்து பார்க்கும் பொழுது சரியானவற்றைச் சரியான நேரத்தில் செய்து முடிப்பதற்குத் தடையாக உள்ள காரணிகள் ஒவ்வொருவராலும் இனங்காணப்படும். அவற்றைக்கொண்டு குறுங்காலச் செயற்றிட்டங்களை வகுத்து துரிதமான அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும்பொழுது. ஒரு பாடசாலையையோ அல்லது ஒரு வீட்டையோ அல்லது ஒரு நிறுவனத்தையோ மிகக் குறுகிய காலத்திலுள் உயர் நிலைக்குக் கொண்டு வரலாம்.

# ரஷ்யா நடத்திய வான் தாக்குதலில் அப்பாவி மக்கள் 23பேர் மரணம்

(பெய்ரூட்)

**சிரியா மீது ரஷ்ய போர் விமானங்கள் குண்டு வீச்சு தாக்குதலில் அப்பாவி பொது மக்கள் 23 பேர் பலியானதாக தகவல் வெளியாகியுள்ளது.**



சிரியாவில் கடந்த 5 ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நடந்து வந்தது. இதில் 2 இலட்சத்து 80 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொலலப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், அமெரிக்கா, ரஷ்யாவின் கூட்டு முயற்சியில் கடந்த பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி முதல் யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்துள்ளது. இருந்தபோதும், அங்கு அல்கொய்தா தீவிரவாத இயக்கத்தின் ஆதரவு பெற்ற அல்நுஸ்ரா முன்னணியினர் ஆதிக்கம் செலுத்தி வருகிற பகுதிகளில் இந்த யுத்த நிறுத்தம் கிடையாது. இந்த நிலையில், அந்த அல்நுஸ்ரா முன்னணியினர் வசம் உள்ள இத்லிப் மாகாணத்தின் தலைநகரான இத்லிப் நகரில், அவர்களை குறிவைத்து நேற்று முன்தினம் அதிகாலையில் ரஷ்ய போர் விமானங்கள் ஆக்ரோஷமாக குண்டுவீச்சு நடத்தின.




இந்த குண்டுவீச்சில் அப்பாவி பொதுமக்கள் 23 பேர் கொல்லப்பட்டனர். ஏராளமானோர் படுகாயம் அடைந்தனர்.

சிரியாவில போர் நிறுததம் அமுலுக்கு வந்த பின்னர் நடத்தப்பட்ட மிகப்பெரிய வான்தாக்குதல் இதுதான் என மனித உரிமைகளுக்கான சிரியா கண்காணிப்பகத்தின் தலைவர் ரமி அப்துல் கூறினார். இதற்கிடையே ர்ஷ்யா நடத்திய தாக்குதலில் 60 பேர் கொல்லப்பட்டதாகவும், சுமார் 200 பேர் படுகாயம் அடைந்ததாகவும் துருக்கி கூறியுள்ளது. (இ-10)

## விகாரையிலிருந்து 137 புலிகள் மீட்பு



(பாங்கொக்)

தாய்லாந்திலுள்ள பௌத்த விகாரையொன்றில் பிக்குகள் சட்டவிரோதமான முறையில் மிருகங்களை வளர்த்த குற்றத்தைப் புரிந்ததனால் அங்கிருந்த 137 புலிகளை தாய்லாந்து வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

இது குறித்து தாய்லாந்து வனவிலங்கு பாதுகாப்பு அலுவலகத்தின் இயக்குநர் தெரிவிக்கையில்,

மூன்று புலிகள் தற்போது அங்கிருந்து மீட்கப்பட்டு அரச அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படும் அறுவை சிகிச்சைகளுக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளன.

குறித்த விலங்குகள் நாட்டிலுள்ள மூன்று வெவ்வேறு அரச விலங்கு புகலிடங்களுக்கு கொண்டுச் செல்லப்படவுள்ளன. இதேவேளை, குறித்த விகாரையானது சுற்றுலாப் பயணிகளை அதிகம் ஈர்க்கும் பிரபலமான இடம் என்பதனால் இவர்கள் அப்பகுதியை மிருகக்காட்சி சாலையாக மாற்ற முயற்சித்துள்ளனர்.

எனினும், அரசானது குறித்த விலங்குகளை பாதுகாப்பதற்காக அவ்விடத்திலிருந்து மீட்க தீர்மானித்துள்ளது.

மேலும் இவர்கள் விலங்குகளை உரிய முறையில் பராமரிக்காததாலும் வியாபார நோக்கத்திற்காக அவர்களது கட்டுப்பாடுகளை மீறி செயற்பட்டதாலும் விலங்கு உரிமை ஆர்வலர்கள் குறித்த விகாரையை கடுமையாக விமர்சித்து வருகின்றனர். (இ-10)



## டெக்சாஸில் வரலாறு காணாத கடும் வெள்ளம்- மக்கள் அவதி



டெக்சாஸில் கடந்த நூறு ஆண்டுகளுக்கு பின்னர் நிலவிவரும் அசாதாரண காலநிலையால் கடும் வெள்ளத்தில் இதுவரை சுமார் ஆறு பேர் உயிரிழந்துள்ள நிலையில், Swollen Brazos ஆற்றுப் பகுதியை அண்மித்த பகுதிகளில் உள்ள மக்களை உடனடியாக வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

மழை வீழ்ச்சி அதிகரித்து Swollen Brazos ஆற்றின் நீர்மட்டம் கடந்த 103 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு உயர்வடைந்து வருவதாக அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் இவ்வாறாக நீர்மட்டம் உயர்ந்து வருகின்றமையை தாம் இதற்கு முன்னர் ஒருபோதும் அவதானித்திருக்கவில்லை என அவசரகால முகாமைத்துவ அலுவலக பணிப்பாளர் தெரிவித்தார்.

கடந்த 24 மணிநேரங்களில் மாத்திரம் மழை வெள்ளத்தினால் வாகனங்களுக்குள்ளும், வீடுகளிலும் சிக்கித் தவித்த பலர் பாதுகாப்பாக மீட்கப்பட்ட அதேவேளை, சுமார் ஆறு பேர்வரை துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், அனர்த்த எச்சரிக்கை மிகுந்த பகுதிகளிலிருந்து மக்களை வெளியேற அறிவுறுத்தப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்காக தற்காலிக தங்குமிட வசதிகளை அமெரிக்க செஞ்சிலுவை சங்கத்தினர் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## ஐரோப்பிய நாடுகளுக்கு அமெரிக்கா எச்சரிக்கை


(வோஷிங்டன்)

பிரான்ஸில் நடைபெறவுள்ள யூரோ 2016 காற்பந்து போட்டிகளை இலக்காகக் கொண்டு தீவிரவாதிகள் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருக்கலாம் என அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது. தாக்குதலுக்கான சாத்தியக் கூறுகள் காணப்படுவதாக எச்சரிக்கை விடுத்துள்ள அதேவேளை, ஐரோப்பாவிற்கு விஜயம் செய்யும் அமெரிக்க பிரஜைகளுக்கு பயண எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

கோடைக் காலங்களில் பாரியளவிலான சுற்றுலா பயணிகள் ஐரோப்பாவிற்கு பயணித்து வருகின்ற நிலையில், இக்காலப்பகுதி தீவிரவாதிகளின் பாரிய இலக்காக காணப்படுவதாக வெளியுறவுத்துறை எச்சரித்துள்ளது. அதேவேளை, யூரோ 2016 காற்பந்து சம்பியன்ஷிப் போட்டிகள் எதிர்வரும் ஜூன் 10 ஆம் திகதி முதல் ஜூலை 10 ஆம் திகதி ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளில் இடம் பெறவுள்ளன.

இதன்போது இம்முறை சுமார் ஒரு மில்லியன் வெளிநாட்டு ரசிகர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில், ஐரோப்பா முழுவதும் தீவிரவாதத் தாக்குதல்கள் இடம் பெறக்கூடிய ஆபத்துக்கள் இருப்பதாக தெரிவித்து தமது பிரஜைகளுக்கு அமெரிக்க வெளியுறவுத்துறை பயண எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## வைரம் பதித்த முதலை தோல் கைப்பை ரூ.2 கோடிக்கு ஏலம்



ஹொங்காங்கில் உள்ள கிறிஸ்டி மையத்தில் கைப்பை ஒன்று அண்மையில் ஏலம் விடப்பட்டது. அது இமாலயன் நிலோடிகஸ் இன முதலை தோலினால் தயாரிக்கப்பட்டது.

அதில் வைர கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. அந்த கைப்பையை பலர் ஏலம் கேட்டனர்.இறுதியில் அந்த கைப்பை ரூ.2 கோடிக்கு (3 இலட்சம் டொலர்) ஏலம் போனது. அதை விலைக்கு வாங்கியவர் யார் என்ற விபரம் வெளியிடப்படவில்லை.

இந்த கைப்பை ரூ. ஒரு கோடியே 32 இலட்சம் வரை ஏலம் போகும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது ரூ.2 கோடிக்கு ஏலம் எடுக் கப்பட்டுள்ளது.

கையினால் தயாரிக்கப் ட்டுள்ள இந்த கைப்பையின் பூட்டு, கொக்கி போன்றவை 18 கரட் தங்கத்தினால் தயாரிக்கப் பட்டவை.இதற்கு முன்பு ஹொங்காங்கில் ஒரு கைப்பை ரூ. ஒரு கோடியே 47 இலட்சத்துக்கு ஏலம் போய் இருந்தது. அந்த சாதனையை இந்தக் கைப்பை முறியடித்தது. (இ-10)

# 50 ஆயிரம் பொது மக்கள் மனித கேடயமாக ஐ.எஸ்ஸிடம்

## அதிர்ச்சித் தகவல் வெளியீடு



(பக்தாத்)


**உலக நாடுகளுக்கு அச்சுறுத்தல் விடுத்துவரும் ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள் 50 ஆயிரம் பொதுமக்களை மனித கேடயமாக பயன்படுத்தி வருவதாக ஐ.நா. அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளது.**

ஈராக்கில் பல பகுதிகள் ஐ.எஸ். தீவிரவாதிகள் வசம் உள்ளது. அங்கு தனிநாடு அமைத்துள்ளனர். அவற்றை அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் உதவியுடன் ஈராக் இராணுவம் மீட்டு வருகிறது. மொசூல் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகள் மீட்கப்பட்டு விட்டன. மொசூலுக்கு அடுத்தபடியாக 2ஆவது பெரிய நகரமான பலூஜாவை ஐ.எஸ். தீவிரவாதிகளிடம் இருந்து மீட்க ஈராக் இராணுவம் அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளது. அந்த நகரை சுற்றி ராணுவம் முற்றுகையிட்டு தாக்குதல் நடத்தி வருகிறது. இவர்களுக்கு அமெரிக்காவின் நட்பு நாடுகள் உதவுகின்றன.

எனவே அவர்களின் தாக்குதலை தாக்குப்பிடிக்க முடியாத தீவிரவாதிகள் அங்கு வாழும் பொது மக்களை மனித கேடயமாக முன் நிறுத்தியுள்ளனர். இதனால் பதில் தாக்குதல் நடத்த முடியாமல் இராணுவம் திணறுகிறது. அதை அறிந்து ஏராளமான பொதுமக்கள் பலூஜாவை விட்டு வெளியேறி வருகிறார்கள். அங்கிருந்து இதுவரை 4 ஆயிரம் பேர் மட்டுமே வெளியே தப்பி வந்துள்ளனர்.

மேலும் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அங்கு சிக்கி தவிப்பதாக ஐ.நா. தெரிவித்துள்ளது. அவர்களுக்கு மிக குறைந்த அளவிலேயே உணவு, தண்ணீர் மற்றும் மருந்துகள் இருப்பதாகவும் கூறியுள்ளது. (இ-10)

# பொலிவிய தொழிற்சாலை மூடல்; கலவரமாகிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்



அரசினால் முன்னெடுக்கப்பட்டுவரும் பொலிவியாவின் மிகப் பெரிய ஆடை தொழிற்சாலை மூடப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து பொலிவியாவின் லாபாஸ் நகரில் நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே பெரும் மோதல் ஏற்பட்டுள்ளது.

அரசின் என்டெக்ஸ் தேசிய ஆடை தொழிற்சாலை இம்மாத ஆரம்பம் முதல் மூடப்படுவதாக ஜனாதிபதியினால் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து சுமார் 800 இற்கும் அதிகமானவர்கள் வேலை வாய்ப்பை இழந்தனர்.

இந்நிலையில், இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் லாபாஸ் பகுதியை சேர்ந்த மேலும் 80 நிறுவனங்களை சேர்ந்த ஊழியர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

பிரதான வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை கலைக்கும் வகையில் கலகம் அடக்கும் பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப்புகைத் தாக்குதல் முன்னெடுத்துள்ளனர்.

இதனால் அங்கு பெரும் பதற்றம் நிலவியுள்ளது.

பொலிவியாவானது கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் அமெரிக்காவின் சந்தைப் பங்கை இழந்த நிலையில், குறித்த தொழிற்சாலை பெரும் நெருக்கடிகளுக்கு உள்ளாகி வந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# கனரக வாகனம் வீடுகளில் மோதியதில் 6 பேர் மரணம்

உத்தர பிரதேச மாநிலத்தின் தலைநகரில் நேற்று புதன்கிழமை காலை கனரக வாகனம் ஒன்று கட்டுப்பாட்டை இழந்ததில் இரண்டு வீடுகளை இடித்துத் தள்ளியுள்ளது. இதில், 5 சிறுவர்கள் உட்பட 6 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

லக்னோ நகரில், மண் மூட்டைகளை ஏற்றிச் சென்ற கனரக வாகனம் ஒன்றே தனது கட்டுப்பாட்டை இழந்து தலைகீழாக கவிழ்ந்ததில் அருகில் இருந்த இரண்டு வீடுகளும் விபத்திற்கு உள்ளானது. விபத்து இடம்பெற்றதை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், பாதிக்கப்பட்டவர்களை உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர். இந்த நிலையில், ஏற்கனவே 6 பேர் உயிரிழந்துள்ள நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் மேலும் ஒரு சிறுவனின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

# பிரதமர் மோடிக்கு எதிரான பேஸ்புக் பதிவிற்கு "லைக்"

## ஐ.ஏ.எஸ்.அதிகாரிக்கு அரசு நோட்டீஸ்

(டில்லி)

முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு குறித்து பேஸபுக்கில் புகழ்ந்து பதிவு செய்ததற்காக அண்மையில் பணியிட மாற்றம் செய்யப்பட்ட மத்திய பிரதேசத்தின் மூத்த ஐ.ஏ.எஸ் அதிகாரிக்கு தற்போது மோடிக்கு எதிரான கருத்துக்கு லைக் செய்ததாக கூறி நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 23 ஆம் திகதி பிரதமர் மோடிக்கு எதிராக பேஸ்புக்கில் மக்கள் புரட்சி என்ற பெயரில் ஒரு கட்டுரை உலவி வந்துள்ளது.

இந்த கட்டுரைக்கு ஐ.ஏ.எஸ் அதிகாரியான அஜய் சிங் கங்வார் விருப்பம் தெரிவித்ததோடு மட்டுமல்லால், பின்னூட்ட கருத்தும் தெரிவித்துள்ளார். இதையடுத்து, மின்னஞ்சல் மூலமாக அஜய் சிங் கங்வாருக்கு நேற்று முன்தினம் மத்திய பிரதேச அரசு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

ஆனால், ஐ.ஏ.எஸ் அதிகாரி கங்வார் இந்த குற்றச்சாட்டை மறுத்துள்ளார். பிரதமருக்கு எதிரான எந்த கருத்துக்கும் தான் விருப்பமோ, கருத்தோ தெரிவிக்கவில்லை என்று தெரிவித்தார்.

மேலும், ஒருவேளை நான் பிரதமருக்கு எதிரான கருத்துக்கு விருப்பம் தெரிவித்து இருந்தாலும், ஏன் இவ்வளவு காலதாமதமாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது என கேள்வி எழுப்பிய அவர், எனது பேஸ்புக் பக்கத்தின் டைம் லைனில் நான் மேற்கூறியவாறு எந்த கருத்துக்கும் லைக் செய்ததாக எந்த தகவலும் இடம்பெறவில்லை என்பதை எனது விளக்க நோட்டீஸில் கேட்க உள்ளேன்" என்று தெரிவித்தார். (இ-10)

# கறுப்புப்பணம் வைத்திருப்போர் இனி நிம்மதியாகத் தூங்கலாம்

(டில்லி)

உள்நாட்டில் கறுப்புப் பணம் பதுக்கி வைத்திருப்பவர்கள், அதுதொடர்பான தகவல்களை புதன்கிழமை முதல் தாமாக முன்வந்து வெளியிட்டு சட்டரீதியான நடவடிக்கைகளைத் தவிர்த்துக் கொள்ளலாம் என்று இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்த முறையின் கீழ் வருமான வரி மற்றும் அபராதமாக மொத்தத் தொகையில் 45 சதவீதம் மட்டும் செலுத்தினால் போதுமானது.

கறுப்புப் பணத்தை பதுக்கி வைத்திருப்பவர்களுக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்க வகை செய்யும் மசோதாவை மத்திய அரசு கடந்த ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியது.


இந்நிலையில், தாமாக முன்வந்து கறுப்புப் பண விபரங்களை அளிப்பவர்களுக்கு சட்டரீதியான நடவடிக்கைகளில் இருந்து விலக்கு அளிக்கப்படும் என்றும் மொத்தத் தொகையில் இருந்து 45 சதவீதம் மட்டும் வரி மற்றும் அபராதமாக செலுத்தினால் போதும் என்றும் நிகழ் நிதியாண்டுக்கான பட்ஜெட் அறிக்கையில் மத்திய அரசு அறிவித்தது.

அதன்படி, கறுப்புப் பண விபரங்களைத் தெரிவிப்பதற்கான கால அவகாசம் நேற்று புதன்கிழமை ஜூன் 1 தொடங்கியது. 4 மாதங்களுக் குள் அதாவது, வரும் நவம்பர் மாதத்துக்குள் கறுப்புப் பண விபரங்களைத் தெரிவிப்பவர்கள் மீது வழக்குகள் பதியப்பட மாட்டாது.

இதுதொடர்பாக மத்திய நேரடி வரிவிதிப்பு வாரியம் அண்மையில் சுற்றறிக்கை அனுப்பியதுடன், இந்த விவகாரம் குறித்து சில விளக்கங்களையும் வெளியிட்டது. இந்தத் திட்டம் குறித்து மத்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லி கடந்த திங்கட்கிழமை கூறுகையில், "கறுப்புப் பணத்தைப் பதுக்கி வரி ஏய்ப்பு செய்பவர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு நிம்மதியான தூக்கத்தைப் பெறலாம்" என்று கூறியது குறிப்பிடத்தக்கது. (இ-10)




# குரங்கு அறிஞர்!



ஒரு அறிஞர் ஆராய்ச்சி நூல் ஒன்று எழுதுவதற்காக அமைதியான இடத்தைத் தேடிக் கொண்டிருந்தார். அவர் அறியாமல், அரக்கர்கள் இருந்த பள்ளத்தாக்கை தன் இடமாகத் தேர்ந்தெடுத்தார். கோபமடைந்த ஒரு அரக்கன் அவரைப் பார்த்துக் கேட்டான்.

"யார் நீ? இந்த அமைதியான பள்ளத்தாக்கை கெடுக்க வந்தாயா?" என்றான்.

"தயவு செய்து என்னை மன்னித்து விடு. நான் ஒரு அறிஞன். அமைதியான இடத்தைத் தேடிக் கொண்டிருந்தேன். அதனால், இங்கு வந்தேன்!" என்றார்.

"இதற்கு ஒரு விலை நீ கொடுக்க வேண்டும். நான் உன்னைக் குரங்காக மாற்றி விடுவேன். அதுதான் உனக்குத் தண்டனை!" என்று அந்த அரக்கன் கூறினான்.

அடுத்த கணம், அந்தக் அறிஞர் குரங்காக மாறிவிட்டார். அவர் விம்மி விம்மி அழுதார். ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்திற்குத் தாவிக் கொண்டிருந்தார். குரங்குகளைப் போல் பழங்களைத் தின்று வந்தார்.

அவர் நகரத்தை அடைந்தார். அங்கு ஒரு கப்பல் பாக்தாத் பட்டணத்திற்குப் புறப்பட இருந்தது. அவர் அதில் தாவி ஏறினார். அதிலிருந்த பயணிகள் கூச்சலிட ஆரம்பித்தனர்.

"குரங்கை வெளியே அனுப்புங்கள் கொன்றுவிடுங்கள்!" என்று கத்தினர்.

கப்பலின் தலைவன் அந்த விலங்கிற்காக வருத்தப்பட்டுச் சொன்னார்.

"வேண்டாம். அதுவும் நம்முடன் வரட்டும். யாருக்கும் அது தொந்தரவு தராதவாறு நான் பார்த்துக் கொள்கிறேன்!"

அந்தக் குரங்கு கப்பல் தலைவனுக்கு நன்றி உடையவனாய் இருந்தது. பாக்தாத்தில் ஒரு செய்தி பரவி இருந்தது. அரசருக்கு ஆலோசனை கூறுபவர் இறந்துவிட்டதாகவும், அரசர் அந்த இடத்திற்குத் தகுந்த ஆளைத் தேர்ந்தெடுக்க விரும்புவதாகவும் அறிவித்திருந்தார். இப்பதவியை விரும்புவோர் ஏதேனும் ஒரு செய்தியைத் தகுந்த முறையில் எழுதி அனுப்பலாம். அவற்றுள் எது மிகவும் நன்றாக உள்ளதோ, அதை எழுதியவர் ஆலோசகராகத் தேர்ந்தெடுக்கப் படுவார் என்றும் அறிவிக்கப்பட்டது.

அந்தக் குரங்கு அறிஞரும் செய்தியை எழுதினார். அரசருடைய சேவகர்களும், மற்றவர்களும் நகைத்தனர். "இங்கே வேடிக்கையைப் பார். இந்தக் குரங்கு அரசருக்கு ஆலோசகராகப் போகிறதாம்!" என்று கேலி செய்தனர். ஆனால், எல்லாச் செய்திகளும் அரசரிடம் எடுத்துச் செல்லப் பட்டன. அரசர் எல்லாவற்றையும் படித்தார். அந்தக் குரங்கின் செய்தி மிகவும் நன்றாக இருந்தது.

அந்தக் குரங்கை நேர்முகத் தேர்விற்காக அரசர் வரச் சொன்னார். அக்குரங்கு நல்ல கம்பீரமாக உடையணிந்து குதிரைமேல் ஏறி, பாக்தாத் தெருக்களில் ஊர்வலமாக வந்து அரசரைச் சந்தித்தது. அரசவையில் அதனிடம் நிறைய கேள்விகள் கேட்கப்பட்டன. அது எல்லாக் கேள்விகளுக்கும் அறிவுப்பூர்வமான சரியான விடைகளைக் கூறியது. அரசருக்கு அதை மிகவும் பிடித்து விட்டது. ஆனால், மந்திரிகள் தடுத்தனர்.

"எப்போதும் அதனால் பேச முடியாது. எப் படி ஒரு குரங்கு தலைமை ஆலோசகர் ஆகமுடியும்?" என்றனர்.

அரசர் தீர்மானமாக இருந்ததால் அவர் குரங்கையே தலைமை ஆலோசகராக நியமித்தார். அவருடைய புதல்வி, இளவரசி இந்தக் குரங்கு உண்மையில் குரங்கு அன்று. ஏதோ அரக்கர்களின் மாயத்தால் இவ்வாறு மாற்றப்பட்டுள்ளது என்பதை அறிந்தாள். அரக்கர்களின் மந்திர வித்தைகள் போன்றவற்றை அவள் படித்துள்ளாள். அந்த மந்திரத்தால் குரங்குத்தன்மை மாறும்படி செய்தாள். அறிஞர் தன் பழைய நிலையை அடைந்தார்.

அவர் இளவரசிக்கு நன்றி கூறினார். பல ஆண்டுகள் அங்குத் தங்கி நன்றியறிதலோடு அரசருக்குத் தகுந்த ஆலோசனைகளை வழங்கினார்.

## 06.2016 02 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1615 - பிரெஞ்சு கத்தோலிக்க மதப்பரப்புனர்களின் முதற்தொகுதியினர் கனடாவின் கியூபெக் நகரை அடைந்தனர்.
- 1896 - மார்க்கோனி தான் புதிதாகக் கண்டுபிடித்த வானொலிக்கான காப்புரிமத்தைப் பெற்றார்.
- 1924 - ஐக்கிய அமெரிக்காவில் பிறந்த அனைத்து பழங்குடிகளுக்கும் அமெரிக்கக் குடியுரிமை வழங்கும் சட்டமூலத்தை ஜனாதிபதி கால்வின் கூலிட்ஜ் அறிமுகப்படுத்தினார்.
- 1946 - இத்தாலியில் முடியாட்சியை குடியரசாக மாற்றும் முடிவுக்கு மக்கள் பெருமளவு ஆதரித்து வாக்களித்தனர். இத்தாலியின் மன்னன் நாட்டை விட்டு வெளியேறினான்.
- 1953 - இரண்டாம் எலிசபெத் இங்கிலாந்தின் அரசியாக முடிசூட்டு விழா முதற்தடவையாக தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பானது.
- 1965 - வியட்நாம் போர்: முதலாவது தொகுதி அவுஸ்திரேலியத் துருப்புகள் தெற்கு வியட்நாமை அடைந்தது.
- 1966 - நாசாவின் சேர்வெயர் 1 விண்கலம் சந்திரனில் இறங்கியது. சந்திரனில் மெதுவாக இறங்கிய முதலாவது அமெரிக்க விண்கலம் இதுவாகும்.
- 1992 - டென்மார்க் மக்கள் மாஸ்ட்ரிக்ட் உடன்பாட்டுக்கு எதிர்த்து வாக்களித்தனர்.
- 1999 - பூட்டானில் முதற் தடவையாக தொலைக்காட்சி அறிமுகப்படுத்தப்பட்டது.
- 2003 - வேறொரு கோளுக்கான (செவ்வாய்) மார்ஸ் எக்ஸ்பிரஸ் என்ற தனது முதலாவது விண்கலத்தை ஐரோப்பிய ஆய்வு மையம் ஈசா கசக்ஸ்தானில் இருந்து ஏவியது.

### பிறப்புகள்

- 1942 - டென்மார்க் சண், ஈழத்து திரைப்பட இசையமைப்பாளர்.
- 1943 - இளையராஜா, இந்திய இசையமைப்பாளர்.
- 1956 - மணிரத்னம், தமிழ் இயக்குனர்.
- 1965 - ஸ்டீவ் வா மற்றும் மார்க் வா, ஆஸ்திரேலிய துடுப்பாட்டக்காரர்கள்.

### இறப்புகள்

- 1842 - பி. கந்தப்பிள்ளை, (ஆராய்ச்சிக் கந்தர்), யாழ்ப்பாணப் புலவர், வைத்தியர், நாவல ரின் தந்தை.
- 1882 - கரிபால்டி, நவீன இத்தாலியை உருவாக்கியவர். (பி. 1807)
- 1981 - தாவீது அடிகள், யாழ்ப்பாணத் தமிழறிஞர். (பி. 1907)
- 2014 - துரைசாமி சைமன் லூர்துசாமி, கத்தோலிக்கத் திருச்சபையின் கர்தினால (பி. 1924)
- 2015 - சி. ஜெயபாரதி, மலேசியத் தமிழறிஞர் (பி. 1941)

## தாவீது அடிகள் யாழ்ப்பாணத் தமிழறிஞர்




கலாநிதி தாவீது அடிகள் என அழைக்கப்படும் வண. சிங்கராயர் தாவீது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழறிஞர். சொற்பிறப்பியல்' ஆய்வாளர். பன்மொழி வித்தகர். யாழ்ப்பாணம் தும்பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட தாவீது அடிகள் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆரம்ப, மற்றும் இடைநிலைக் கல்வியைக் கற்று பின்னர் லண்டன் மெட்ரிக்குலேஷன் சோதனையில் சித்தி அடைந்து அதன் பின் லண்டன் பல்கலைக்கழக இளங்கலைமாணிப் பரீட்சையில் தோற்றி சிறப்புத்தரத்தில் சித்தியடைந்தார். புனித பேர்னாட் குருத்துவக் கல்லூரியில் சேர்ந்து அங்கு குருத்துவக் கல்வியை முடித்த பின் 1931 டிசெம்பர் 19 இல் கொழும்பு பேராயரினால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு அப்போஸ்தரிக்க பணியாளனாக குருத்துவப் பணியை ஆரம்பித்தார். தன் தந்தையார் படிப்பித்த யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரிலேயே 1936 தொடக்கம் 1967 ஆசிரியராகப் பணியாற்றினார்.நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் உந்துதலால் சமஸ்கிருத மொழியைக் கற்று புலமை அடைந்து அதில் முதுகலைமாணிப் பட்டத்தினை லண்டன் பல்கலைக் கழகத்தில் பெற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து கீழைத்தேசத்தில் முக்கியமாக வாழும் மொழிகளையும் மேலைத்தேசத்தில் முக்கிய வாழும் மொழிகளையும் கற்கத் தொடங்கினார். அதனைத் தொடர்ந்து தமிழ் மொழியை மையமாக வைத்து மற்றைய மொழிகளோடு ஒப்பீடு ஆய்வு செய்து, சுவாமி ஞானப்பிரகாசர் ஆரம்பித்து வைத்த ஒப்பீட்டுச் சொற்பிறப்பியல் அகராதிகளைப் பின்பற்றி தானும் ஒப்பீட்டுச் சொற்பிறப்பியல் அகராதிகளை 1970 ஆம் ஆண்டு தொடக்கம் பல பாகங்களாக வெளியிட்டுள்ளார். அவற்றை விடத் தனி நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். அவற்றுள் ஒன்று "We stand for..." என்பதாகும். ஆசிரியப் பணியில் இருந்து ஓய்வு பெற்றபின் தன் வாழ்க்கையில் இறுதிக் காலத்தில் தான் கற்பித்த பத்திரியார் கல்லூரியிலேயே மேல்மாடியில் ஓர் அறையில் தங்கி இருந்தார். 1981 மே 31-ஜூன் 1 நள்ளிரவில் யாழ்ப்பாணப் பொது நூலகம் எரியூட்டப்பட்ட செய்தியைக் கேள்வியுற்ற பின் அடிகளார் உறக்கத்திற்குச் சென்றார். நித்திரைக்குச் சென்ற அவர் அடுத்தநாள் 1981 ஜூன் 2 விடியற்காலை காலமானார். நூலகம் எரியூட்டப்பட்ட செய்தியைக் கேட்ட அதிர்ச்சியினாலேயே அடிகளார் உயிர் நீத்தார் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

# என்னை பதவியிலிருந்து நீக்க முதலமைச்சரினால் முடியாது

## கிழக்கு ஆளுநர் தெரிவிப்பு

(கொழும்பு)



என்னை ஆளுநர் பதவியிலி ருந்து நீக்குவதற்கு முதலமைச்சரினால் முடியாது என கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண ஆளுநர் பதவியிலிருந்து தம்மை நீக்குவதற்கு மாகாண முதலமைச்சர் நசீட் அஹமட்டிற்கு எவ்வித அதிகாரமும் கிடையாது.

என்னைப் பற்றி என்னை விட அதிகாரம் குறைந்தவர்களினால் தீர்மானம் எடுக்க முடியாது.

ஆளுநர் பதவிக்கு மேல் அதிகாரம் படைத்த ஜனாதிபதியே இது குறித்து தீர்மானிக்க வேண்டும்.

கிழக்கு மாகாண முதலமைச்சருக்கு கருத்து வெளியிடும் சுதந்திரம் உண்டு. எனினும் குற்றச்சாட்டுக்களை நான் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், ஏறாவூரில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கிழக்கு மாகாண ஆளுநரின் நடவடிக்கைகளை முதலமைச்சர் கடுமையாக விமர்சனம் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# கொழும்பிலுள்ள சட்டவிரோத வீடுகள் அனைத்தும் அகற்றப்படும்-அரசாங்கம்

(கொழும்பு)

கடந்த காலத்தில் அநாவசியமாக வீடுகளை அமைத்துக் கொடுத்து வடிகாலமைப்பு முறைமைகளை சீர்குலைத்தமையே கொழும்பில் வெள்ளம் ஏற்பட்டதுடன் அதிகளவில் பிரதேசங்கள் பாதிக்கப்பட்டமைக்கு காரணமாகும். கொழும்பில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள சகல வீடுகளையும் உடனடியாக அப்புறப்படுத்தும் நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ளும் என அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செய்தியாளர் சந்திப்பு கட்சி தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அனர்த்தங்கள் ஏற்படுவதை முன்கூட்டியே அறிய முடியாது. எனினும் அனர்த்தங்களை தடுக்கும் மாற்று வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுக்க வேண்டும். இப்போது வெள்ளம் மற்றும் மண்சரிவில் பாதிக்கப்பட்ட பகுதிகளின் குப்பைகளை அகற்றும் நடவடிக்கையும், நீர் நிலைகளையும் ஏரிகளையும் கால்வாய்களையும் புனரமைக்கும் வேலைத்திட்டங்களையும் அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

அதற்காக சகல பிரதேச சபைகளின் உதவிகளையும் நாம் கோரியுள்ளோம். நாட்டில் அனைத்து பிரதேச சபைகளில் இருந்தும் துப்புரவுப் பணிகளுக்கான உபகரணங்களை பெற்றுவருகின்றோம். மனிதாபிமான முறையில் சேவை செய்வதற்கான மனித வளத்தையும் பெற்று வருகின்றோம்.

கொழும்பு பகுதியில் மீள் புனர்நிர்மாண பணிகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக கொலன்னாவை பகுதியே வெள்ள அனர்த்தத்தில் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

ஆகவே கொலன்னாவை பகுதியில் ஏற்பட்டுள்ள அனர்த்த பாதிப்புகளுக்கு மாற்று நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

கொழும்பில் வெள்ளம் ஏற்பட்ட நிலையில் அதிகளவில் கொலன்னாவை பிரதேசம் பாதிக்கப்பட்டமைக்கு அநாவசிய வீடமைப்பு முறைமைகளே காரணமாகும்.

கடந்த காலத்தில் அநாவசியமாக வீடுகளை அமைத்துக் கொடுத்து வடிகாலமைப்பு முறைமைகளை தடுத்தமையே இந்தளவு சேதங்கள் ஏற்பட காரணமாகும்.

அப்பகுதியில் 20 அடி அகலத்தில் இருந்த கால்வாய் இப்போது 5அடி அகலம் வரையில்மட்டுமே உள்ளது. ஏனைய பகுதிகள் மண் நிரப்பப்பட்டு அநாவசிய குடியேற்றங்களை உருவாக்கியுள்ளனர்.

ஆகவே சட்ட விரோதமாக அமைக்கப்பட்டுள்ள சகல வீடுகளையும் உடனடியாக அப்புறப்படுத்தும் நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ளும்.



மேலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்துவது குறித்து அதிகளவில் அரசாங்கம் அக்கறை காட்டி வருகின்றது.

எனினும் இப்போது வரையில் புதிய முறைமை குறித்து முழுமையாக ஆராயப்படவில்லை.

எவ்வாறு இருப்பினும் அடுத்த ஆண்டு முதற் காலாண்டு பகுதிக்குள் தேர்தலை நடத்த முடியும் என்ற நிலையில் தான் நாம் செயற்பட்டு வருகின்றோம்.

அந்தத் தேவையும் எமக்கு உள்ளது. ஆகவே அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் சரியாக கையாளும் என்றார். (இ-10)

# மேலும் உதவிப் பொருட்களை பங்களாதேஷ் அனுப்பியுள்ளது

இலங்கையில் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவும் வகையில் மற்றும் ஒரு தொகுதி உதவி பொருட்களை பங்களாதேஷ் அனுப்பி வைத்துள்ளது.

பங்களாதேஷ் கடற்படைக்கு சொந்தமான பி.என். எஸ் பங்கபந்து என்ற கப்பலின் மூலம் இந்த உதவிப்பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் பிற்பகல் சிட்டகொங் கடற்படை தளத்திலிருந்து பயணித்துள்ள குறித்த கப்பல் எதிர்வரும் ஐந்தாம் திகதி கொழும்பு துறைமுகத்தினை வந்தடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிர்காப்பு மருந்துகள், நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள், குடிநீர், கூடாரங்கள், உணவுப் பொருட்கள், மின்பிறப்பாக்கிகள் என சுமார் 105 தொன் எடையுடைய உதவிப் பொருட்கள் இவ்வாறு இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கடந்த 27 ஆம் திகதி பங்களாதேஷ் விமானப் படையினர் முதற் கட்ட உதவிப் பொருட்களை கொழும்புக்கு ஏற்றி வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## இன்று ஒரு தகவல்

# சூழ்நிலையுணர்தல்

அவசரம் தெரியாமல் சாவகாசமாய் நடந்து கொள்வது;

பரபரப்பை உணராமல் மெத்தனமாய் இருப்பது;

மகிழ்ச்சியான சூழ்நிலையை உணராமல் அபத்தமாயும் அபசகுனமாயும் பேசுவது;

துன்பச் சூழ்நிலையை உணராமல் இன்புற்று இருப்பது;

இல்லாதவற்றை வேண்டுமென்று வற்புறுத்துவது;

இருப்பவற்றையே மென்மேலும் கொடுத்து அடக்குவது;

ஆபத்தை உணராமல் அசட்டையாய் இருப்பது;

பாதுகாப்பை உணராமல் பயப்பட்டுச் சாவது;

இப்படித் தங்கள் சூழ்நிலையை உணராமல் தங்களுக்குத் தாங்களே நட்டத்தை ஏற்படுத்திக் கொள்பவர்களும் வாய்ப்பை நழுவ விடுபவர்களையும் கூட பாவம் இவர்கள்! எனப் பரிதாபப்பட்டனர்.

ஆனால், இவர்கள் மற்றவர்களின் மேற்கூறிய சூழ்நிலையையும் மனநிலையையும் உணராமல் அவர்கள் வெறுக்கும் வகையில் நடந்து கொள்கிறார்களே.

இதையேனும் மாற்றிக்கொள்ள வேண்டும். காரணம் மற்றவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தச் செய்யும் உரிமை இவர்களுக்கு இல்லை.

திருமண வீட்டில் தாலியறுப்புப் பற்றியும் விவாகரத்துப் பற்றியும் வாழாவெட்டியைப் பற்றியும் வழுக்கி விழுந்தவர்கள் பற்றியும் பேசுபவர்கள் தங்கள் சுபாவத்தை மாற்றிக் கொள்ளட்டும்.

இழவு வீட்டில் தன் பிரஸ்தாபங்களைப் பற்றியும் அரட்டை அடித்தும் பேசுபவர்கள் தயவு செய்து அங்குள்ள சோகத்தின் சாரலில் சிறிதேனும் நனையட்டும்.

மற்றவர்களுக்கு எரிச்சலாய் வரும் போது அதைச் சொல் மூலமோ செயல் மூலமோ தூண்டும் படியான செயலை நாம் செய்யத்தான் வேண்டுமோ என ஒருமுறையேனும் பரிசீலனை செய்யட்டும்.

எப்போதும் தங்களைப் பற்றியே எண்ணிக்கொண்டு இருப்பவர்களுக்கும் மற்றவர்களைப் பற்றிக் கவலைப் படாதவர்களுக்கும் தான் சூழ்நிலை உணர்வது என்பது இயலாததாக இருக்கிறது. இந்த இருமாயைகளையும் இவர்கள் அகற்றிக் கொள்ளட்டும்.

மற்றவர்களுடைய சொல்லையும் நடவடிக்கையையும் கூர்ந்து கவனிக்கும் இயல்பை நாம் அவசியம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

மற்றவர்களின் கண்கள் ஆயிரம் செய்திகளைத் தெரிவிக்கக் கூடியவை. அவற்றையும நாம் கூடுதலான விழிப்புடன் பார்க்க வேண்டும்.

சூழ்நிலையை உணர்ந்து அதற்கு ஏற்ப மற்றவர்களிடம் நடந்து கொள்பவர்களும் அதற்கு ஏற்பத் தங்களை மாற்றிக் கொள்பவர்களும் பாராட்டப்படுவதோடு எல்லோராலும் விரும்பப்படவும் செய்கிறார்கள்.

லேனா தமிழ்வாணன்

# அனைவருக்கும் வீடு பிரதமர் உறுதியளிப்பு

கொழும்பு நகரில் வாழ்ந்த அப்பாவி மக்கள் கடந்த ஆட்சியின் போது விரட்டியடிக்கப் பட்டனர். இவ்வாறு விரட்டியடிக்கப்பட்ட அனைவருக்கும் வீடுகளை பெற்றுகொடுப்போம். அத்துடன் தற்போதைக்கு குடிசைகளில் வாழ்பவர்களுக்கு காணி உறுதிப்பத்திரத்தை போன்று பெறுமதிமிக்க பதிவு சான்றிதழை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அத்துடன் நாட்டின் வீடில்லா பிரச்சினையை தீர்க்கும் நோக்குடன் வீடமைப்புடன் தொடர்புடைய அமைச்சர்களை விரைவில் சந்திப்பதற்கு திட்டமிட்டுள்ளேன். இதன் பின்னர் புதிய வீடமைப்பு திட்டமொன்றை வகுப்போம். மேலும தற்போதுள்ள பழைய கட்டடங்கள் மற்றும் வீடுகளை உடைத்து நவீனமயப்படுத்தவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு ரோயல் கல்லூரியின் நீச்சல் வீரரான நினைவிழந்து பாதிக்கப்பட்டுள்ள சசங்க அல்விஸ் என்ற மாணவனின் குடும்பத்தினருக்கு 35 இலட்சம் ரூபா பெறுமதியான வீடு இலவசமாக வீடு நிர்மாணத்துறை அமைச்சினால் வழங்கப்பட்டது. இந்நிகழ்வு நேற்று முன்தினம் அலரி மாளிகையில் நடைபெற்றது. இதன்போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-10)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-01.06.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 145.48 | 149.24 |
| பிரிட்டன் | பவுண்ட் | 210.14 | 217.20 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 160.94 | 167.00 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 145.62 | 151.08 |
| கனடா | டொலர் | 110.77 | 114.99 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 105.10 | 109.01 |
| சிங்கப்பூர் | டொலர் | 105.23 | 108.04 |
| இந்தியா | ரூபா | 2.1723 | ------- |
| சீனா | யுவான் | 22.1449 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 387.1280 |
| குவைத் | டினார் | 482.7752 |
| ஓமான் | ரியால் | 379.0793 |
| கட்டார் | ரியால் | 40.0948 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.9193 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.7362 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 220 | 320 | 200 | 240 | 400 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 120 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 400 | 300 | 500 | 300 | 400 | 400 |
| தக்காளி | 200 | 160 | 200 | 180 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 50 | 60 | 60 | 80 | 70 |
| கோவா | 100 | 120 | 160 | 180 | 160 | 160 |
| கரட் | 120 | 150 | 200 | 140 | 200 | 140 |
| பூசணி | 60 | 50 | 60 | 50 | 80 | 50 |
| புடோல் | 140 | 100 | 120 | 120 | 120 | 100 |
| வாழைக்காய் | 70 | 50 | 60 | 50 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 150 | 150 | 140 | 170 | 200 | 100 |
| பெரிய வெங்காயம் | 120 | 70 | 100 | 80 | 100 | 100 |
| பாகற்காய் | 240 | 150 | 350 | 200 | 160 | 150 |
| வெண்டிக்காய் | 220 | 150 | 200 | 140 | 120 | 150 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 120 | 100 | 160 | 120 |
| பயற்றங்காய் | 200 | 220 | 240 | 200 | 160 | 200 |
| லீக்ஸ் | 160 | 180 | 200 | 200 | 200 | 200 |
| பீற்றூட் | 120 | 110 | — | 70 | 200 | 150 |
| கறிமிளகாய் | 260 | 200 | 240 | 220 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 150 | 120-200 | 140 | 200 | 150 |
| போஞ்சி | 280 | — | 280 | 320 | 300 | 300 |
| கத்தரிதம்புள்ள | 240 | 170 | 300 | 220 | 200 | 350 |
| கீரை - 1பிடி | 50 | 50 | 50 | 30 | 50 | 40 |
| தேசிக்காய் | 300 | 200 | 300 | 350 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 15-25 | 50 | 20 | 20-25 | 40 |
| இராசவள்ளி | 160 | 150 | 180 | 160 | 200 | 160 |
| வெங்காயப்பூ | 300 | — | 280 | — | — | 200 |
| முள்ளங்கி | 80 | — | 120 | 100 | 120 | 150 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 30 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | — | 60 | 100 | 100 | 70 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## தற்கொலைப்படை தாக்குதலில் 2 போர்க்கப்பல்கள் மூழ்கடிப்பு 194

எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சி பொலநறுவை, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் கூடுதல் வாக்குகள் பெற்றது.

### தனி மெஜாரிட்டி இல்லை

ஆனால் தனித்து ஆட்சி அமைக்கக்கூடிய அளவுக்கு எந்தக் கட்சிக்கும் தனி மெஜாரிட்டி கிடைக்கவில்லை.

தொகுதிகளின் அடிப்படையில் சந்திரிகாவின் மக்கள் கூட்டணி அதிக இடங்களைப் பெற்று தனிப்பெரும் கட்சியாகத் திகழ்ந்தது. மொத்தம் உள்ள 225 இடங்களில் அந்தக் கூட்டணிக்கு 109 இடங்களும் ஐக்கிய தேசிய கட்சிக்கு 90 இடங்களும் ஜனதா விமுக்தி பெரமுன கட்சிக்கு 10 இடங்களும் கிடைத்துள்ளன. மற்ற கட்சிகளுக்கு 16 இடங்கள் கிடைத்தன.

தனித்து ஆட்சி அமைப்பதற்கு 113 உறுப்பினர்களின் ஆதரவு தேவை. ஆனால் அந்த அளவுக்கு சந்திரிகாவின் மக்கள் கூட்டணிக்கோ அல்லது ஐக்கிய தேசிய கட்சிக்கோ போதிய இடங்கள் கிடைக்கவில்லை.

இதனால் அடுத்து ஆட்சி அமைப்பது யார் என்பதில் இழுபறியான சூழ்நிலை ஏற்பட்டது.

ஆட்சி அமைக்க இன்னும் 4 உறுப்பினர்களின் ஆதரவே தேவைப்பட்டதால் பிற கட்சிகளின் ஆதரவுடன் மந்திரி சபை அமைக்கும் முயற்சியில் சந்திரிகா ஈடுபட்டார். அதே நேரத்தில் ஐக்கிய தேசிய கட்சியும் ஆட்சி அமைக்க சிறிய கட்சிகளின் உதவியை நாடியது.

### மெஜாரிட்டி கிடைத்தது

ஆனால் ஆளும் மக்கள் கூட்டணிக்கு 116 எம்.பி.க்களின் ஆதரவு இருப்பதாக அதன் செய்தித் தொடர்பாடல் ஸ்ரீபதி சூர்யராச்சி கூறினார். இதன் மூலம் தனி மெஜாரிட்டி பெற்று விட்டோம் என்றும் அவர் தெரிவித்தார்.

ஈழமக்கள் ஜனநாயக கட்சி, தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணி ஆகிய கட்சிகளின் ஆதரவைப் பெற ஆளும் மக்கள் கூட்டணி தீவிர முயற்சியில் ஈடுபட்டது.

ஜனாதிபதி சந்திரிகாவின் ஆளும் மக்கள் கூட்டணிக்கு ஆட்சி அமைப்பதற்கு தலா 4 உறுப்பினர்களைக் கொண்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியும் தேசிய ஐக்கிய கட்சியும் ஆதரவு தெரிவித்தன. மேலும் ஒரு சுயேட்சை உறுப்பினரும் ஆதரவு தெரிவித்தார். இதனால் மக்கள் கூட்டணியின் பலம் 114 ஆக உயர்ந்து ஆட்சி அமைக்க மெஜாரிட்டி கிடைத்தது.

இதைத் தொடர்ந்து புதிய அரசு அமைக்கும் படி மக்கள் கூட்டணிக்கு ஜனாதிபதி சந்திரிகா அழைப்பு விடுத்தார்.

### பதவி ஏற்றார்

அந்த அழைப்பை ஏற்று மக்கள் கூட்டணி புதிய அரசை அமைத்தது. மக்கள் கூட்டணியைச் சேர்ந்த அப்போதைய பிரதமர் ரத்னஸ்ரீ விக்கிரமநாயக்க மீண்டும் பிரதமராகப் பதவி ஏற்றார். அவருக்கு ஜனாதிபதி சந்திரிகா பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

சந்திரிகாவின் டெம்பிள் டிரீஸ் இல்லத்தில் பதவி ஏற்பு விழா எளிமையாக நடந்தது.

பிரதமராக மீண்டும் பதவி ஏற்ற ரத்னஸ்ரீ விக்கிரம நாயக்கருக்கு 67 வயது. இவர் ஜனாதிபதி சந்திரிகாவின் நம்பிக்கைக்குரியவர் ஆவார்.

முன்பு பிரதமராக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்க உடல் நலக்குறைவின் காரணமாக ஒகஸ்ட் மாதம் பதவி விலக நேர்ந்தபோது அவருக்குப்பதிலாக ரத்னஸ்ரீ விக்கிரமநாயக்க, சந்திரிகாவின் ஆதரவுடன் புதிய பிரதமராக தேர்ந்து எடுக்கப்பட்டார்.

திருகோணமலை துறைமுகம் மீது விடுதலைப்புலிகளின் தற்கொலைப்படையினர் திடீர் தாக்குதல் நடத்தினார்கள். இதில் 2 போர்க்கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. ஒரு ஹெலிகொப்டரும் சுட்டு வீழ்த்தப்பட்டது.

கிழக்குக் கடற்கரைப் பகுதியில் திருகோணமலைத் துறைமுகம் அமைந்துள்ளது.

சிங்கள இராணுவத்தின் இருதயம்போல செயற்பட்டு வரும் இந்தத் துறைமுகத்தில் முப்படைகளும் முகாம் அமைத்துள்ளன. கடற்படையின் மிகப் பெரிய தளமாகவும் இத் துறைமுகம் இயங்கி வருகின்றது.

### விடுதலைப்புலிகள் திடீர் தாக்குதல்

இராணுவத்திற்கு அடிக்கடி அதிர்ச்சி வைத்தியம் அளிக்கும் விடுதலைப்புலிகளின் தற்கொலைப்படையினர் 23.10.2000 அன்று திருகோணமலை துறைமுகத்தின் மீது அதிரடித் தாக்குதல் நடத்திச் சிங்கள கடற் படையை நிலை குலைய வைத்தனர்.

இந்திய நேரப்படி அதிகாலை 5.30 மணிக்கு இந்தத் தாக்குதல் தொடங்கியது.

### கடற்புலி படகுகள்

விடுதலைப்புலிகளின் கடற்படையைச் சேர்ந்த 4 படகுகள் வெடிகுண்டுகளை நிரப்பிக் கொண்டு திருகோணமலை துறைமுகத்தில் நுழைய முயன்றன.

அப்போது அங்கே காவலுக்கு இருந்த கடற்படை காவலர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பயங்கர துப்பாக்கிச் சண்டை நடந்தது. கடற்படையினர் பீரங்கியால் சரமாரியாகக் குண்டு வீசினார்கள். அதற்குப் பதிலடியாக விடுதலைப் புலிகள் பீரங்கிக் குண்டுகளை வீசி கடற்படை முகாம்களைத் தகர்த்தனர்.






(தொடரும்)

# குற்றவாளிகளை தப்பிக்கவிடும் பொலிஸ் நிதிமோசடிப் பிரிவினர்

## அமைச்சர் சொய்சா குற்றச்சாட்டு

(கொழும்பு)

**பொலிஸ் நிதிமோசடிப் பிரிவினர் குற்றவாளிகளைத் தப்பிக்க விட்டுள்ளதாக அமைச்சர் விஜயமுனி சொய்சா பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளார்.**



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சர் விஜயமுனி சொய்சா. பொலிஸ் நிதிமோசடிப் பிரிவு எய்தவர்கள் இருக்க அம்புகளை பிடித்து விசாரிக்கின்றது.


குற்றச் செயல்களை செய்யுமாறு ஏவிய அரசியல்வாதிகளை விட்டு. அதனை மேற்கொண்ட அரசாங்க ஊழியர்களை பிடித்து விசாரித்துக் கொண்டிருக்கின்றது. அரசியல்வாதிகளை பிடித்து தண்டிப்பதற்கு இதுவரை நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அதுவும் விசாரணைக்குப் போகும் அனைவரும் போன வேகத்தில் திரும்பி வந்து கொண்டிருக்கின்றார்கள்.

இதன் மூலம் பொலிஸ் நிதிமோசடிப் பிரிவு குற்றவாளிகளை தப்புவித்துக் கொண்டிருப்பதை உணர முடிகின்றது.

அரசாங்க அதிகாரிகளுக்குத் தவறான அழுத்தங்களை வழங்கிய அரசியல்வாதிகள் கைது செய்யப்பட வேண்டும். தண்டிக்கப்பட வேண்டும். அரசாங்க அதிகாரிகள் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்ட உடன் அவர்கள் குற்றவாளிகளாகி விடுவதில்லை.

அவர்களுக்கு பொது நிர்வாக அமைச்சு அல்லது பொதுச் சேவை ஆணைக்குழு ஆகியவற்றினால் பொறுப்புகள் அல்லது பதவிகளை வழங்க முடியும் என்றும் அமைச்சர் விஜயமுனி சொய்சா மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

## மகிந்தவைத் தொடர்ந்து ராஜிதவின் குடும்ப ஆட்சி



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் குடும்ப ஆட்சியை வேரோடு அழித்த போதும் தற்போதுள்ள சுகாதார அமைச்சரின் குடும்ப ஆட்சியை அழிக்க முடியாதுள்ளது. தனது மனைவி மற்றும் மகனின் பேச்சுக்கு தலையாட்டுபவராக சுகாதார அமைச்சர் இருப்பாராக இருந்தால் குறித்த அமைச்சை அவரின் மனைவியிடம் கொடுத்து விட்டு போகலாம் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும் தொழிற்சங்க போராட்டத்தை மேற்கொண்டு பொது மக்களை நிர்க்கதிக்குள்ளாக்கும் எந்த நோக்கமும் எமக்கில்லை. இதனாலேயே வெள்ள அனர்த்தங்களில் சிக்குண்ட மாவட்டங்களில் நாம் எவ்விதமான தொழிற்சங்க நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

இவ்வாறான நிலையில் சுகாதார அமைச்சராக இருந்து கொண்டு அவ்வமைச்சின் பணிப்பாளரினூடாக கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளம் ஏற்படவில்லை எனவும் முடிந்தால் அம்மாவட்டத்தில் தொழிற்சங்க போராட்டத்தை மேற்கொண்டு பாருங்கள் என்றும் எமக்கு சவால் விடுக்கின்றமை பெரும் அநாகரிமான செயலாகும் எனவும் அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது. வெள்ளப்பாதிப்பு ஏற்பட்ட பிரதேசங்களையே அடையாளம் காண முடியாத அமைச்சரும் அவருக்கு வாலாட்டி பின்செல்லுபவர்களினாலும் சுகாதார சேவை அழிவடைவது உறுதியாகும்.

எனவே அதனை பாதுகாக்கவே நாம் தற்போது போராடி வருகின்றோம். இந்த போராட்டத்தை ஒரு நாள் பணிப்பகிஷ்கரிப்பாக நீடிப்பது தொடர்பிலும் விரைவில் முடிவெடுப்போம் என சங்கத்தின் செயளாளர் வைத்தியர் நவீன்சொய்சா தெரிவித்தார்.

தொழில்சார் நிபுணர்கள் அமைப்பின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-10)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 738

Search for people, places and things — Nagendram Home

சிந்து



சிவா

ஒரு நள்ளிரவில் டெலிபோன்
மணி ஒலித்தது
கணவன்:-போன் எனக்கா இருந்தா
நான் இல்லைன்னு சொல்லிடு
மனைவி:-அவரு வீட்டில இருக்காரு
கணவன்:-அடியே என்னடி லூசா நீ
இல்லைன்னு சொல்ல சொன்னேன்ல
மனைவி:-யோவ் பேசாம படுய்யா
போன் வந்தது எனக்கு

பரன்




ஜசிகரன்



கீத்து



புனிதமான... அன்பை....
மற்றவருக்கு கொடுத்துப்பார்.....!!
உனக்குள்ளிருக்கும்....
துக்கம்..... முழுதாக
மறைந்து விடும்...!!

சர்மிலா



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கடனில் மூழ்கிய நாடு!

இலங்கையை 2004ஆம் ஆண்டு சுனாமி தாக்கிய பின்னர் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம், மண்சரிவு இயற்கை அழிவுகளால் இலட்சக் கணக்கானோர் பாதிக்கப்பட்டனர். கொழும்பிலும், அண்டிய பகுதிகளிலும் மற்றும் மலையகத்திலும் வெள்ளத்தாலும், மண்சரிவுகளாலும் நூற்றுக்கணக்கான வீடுகள் அழிந்தன. இதனால் நான்கு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் தமது உறவினர், நண்பர்களின் வீடுகளில் தங்க வைக்கப்பட்டனர்.

அரநாயக்காவில் மட்டும் ஒரு கிராமமே மண்சரிவினுள் புதையுண்டது. இவ்வாறு இயற்கை தனது சீற்றத்தை வெளிப்படுத்திவிட்டு மெதுவாக அமைதி கொள்ள மக்களின் இயல்பு வாழ்க்கை தற்போது வழமைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் நாடும் மக்களும் பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இதில் சுற்றுப்புறத்தை சுத்தப்படுத்துதல், சுகாதாரம், குடிநீர் என்பன முக்கிய இடம் பெறுகின்றன. அத்துடன் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு பதிலாக தற்காலிகமான, நிரந்தரமான வீடுகளை அமைப்பதையும் அலட்சியப் படுத்திவிட முடியாது.

இயற்கை அழிவுகளை தடுத்துவிட முடியாதென்றாலும் பெரும்பாலான அழிவுகளுக்கு மனித தவறுகளே காரணமாக அமைவதால் இந்த அழிவுகள் மீண்டும் நிகழாத படிக்கு புதிய அபிவிருத்தித் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியது கட்டாயமாகும். தமது தீராத பேராசையால் மக்களின் இயல்பு வாழ்க்கையை சிக்கலுக்குள் தள்ளிவிட்ட அரசியல்வாதிகளின் பொறுப்பற்ற நடவடிக்கைகளையும் நிராகரித்துவிட முடியாது.

நாட்டில் குறைந்த வருவாய் பெறும் சனத்தொகையினர் அடிப்படை வசதிகள் தானும் இல்லாத நிலையில் குடிசைகளிலும், பாதுகாப்பற்ற வீடுகளிலும் ஒருபுறம் வாழ்ந்து கொண்டிருக்க, மறுபுறம் மின்சார உற்பத்திக்கான தேவை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. நூற்றாண்டுகால பழைமை வாய்ந்த குடிநீர் குழாய்கள் துருப்பிடித்த நிலையிலிருக்கின்றன.

இவற்றை எல்லாம் கவனத்தில் கொண்டு புனரமைப்பு செய்வதை விட்டு விட்டு மக்களின் வரிப்பணத்தை அப்படியே சுருட்டி வெளிநாட்டு வங்கிக் கணக்குகளில் வைப்பிலிட்டும், சொகுசு வாழ்க்கை வாழ்ந்தும் மற்றும் பல ஊழல்களிலும் சம்பந்தப்பட்ட கடந்த அரசாங்கத்தின் பகல் கொள்ளைகள் இயற்கைக்கே பொறுக்கவில்லையோ என்னவோ!



மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்க வேண்டியது கட்டாயம். அதேநேரம் பாதிக்கப்பட்ட தமது வீடுகளை மக்கள் தாமாகவே புனரமைத்துக் கொள்வது என்பது மிகச் சிரமமான காரியம் என்பதையும் அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும். கடந்த கால அரசாங்கத்தின் நிதி நிர்வாக சீர்கேடால் நாட்டின் பொருளாதார சுமையை தற்போது மக்கள் தமது தோள்களில் சுமந்து கொண்டிருக்கின்றனர். இன்றைய நிலையில் வேறு வழியில்லாததால் பதவியில் உள்ள அரசாங்கமும் பெறுமதி கூட்டப்பட்ட வரி மற்றும் சுங்கவரிகள் போன்றவற்றை அதிகரித்திருப்பதும் மக்களின் சுமையை மேலும் அழுத்தத்தான் செய்யும்.

எனவே இந்த நிலைமையின் பின்னணியில் அரசாங்கம் முடிந்தளவு செலவுகளை குறைக்கும் நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும். அமைச்சர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கிறது. அது உடனடியாக குறைக்கப்பட வேண்டும். செலவினங்களைக் கட்டுப்படுத்துவது என்ற விடயத்தில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்களுக்கான மேலதிக கொடுப்பனவுகள் மீதும் கவனம் செலுத்தவேண்டும்.



அரசாங்க செலவில் ஆய்வு நோக்கங்களுக்காக அரசியல்வாதிகளை வெளிநாடுகளுக்கு அனுப்ப வேண்டிய தேவையில்லை. எமது வெளிநாட்டு தூதரகங்கள் அதைக் கையாளட்டும். கடந்த காலத்தில் எத்தனையோ அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் அதிகாரப்பகிர்வு சம்பந்தமான ஆய்வுகளுக்காக வெளிநாடுகளுக்கு சென்றிருந்தனர்.

இந்தப் பயணங்களால் குறிப்பிட்டுச் சொல்லும்படி எந்தப் பலனும் விளையவில்லை. வெளிநாடுகளில் இருக்கும்போது அதிகாரப்பகிர்வு மாதிரிகளைப் புகழ்ந்து பேசுவார்கள். நாட்டுக்கு திரும்பி வந்ததும் அத்தகைய அதிகாரப்பகிர்வினால் நாடு பிளவுபடும். அவை வெளிநாடுகளின் சூழ்ச்சி என்று மேடையேறி முழங்குவார்கள்.

பணிப்பெண்களாலும், மலையகத் தேயிலைத் தோட்டங்களில் சிரமப்பட்டு தொழில் செய்வோராலும் ஈட்டித்தரப்படும் பணம் கடந்த ஒன்றரை தசாப்தத்துக்கும் மேற்பட்ட கால எல்லையின் போது பட்ட அரச கடனை அடைப்பதற்கே இப்போது பயன்படுத்தப்படுகிறது. 2000ஆம் ஆண்டு 9 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த வெளிநாட்டுக் கடன் 2005ஆம் ஆண்டு 11.3 பில்லியன்களாக எகிறியது. இந்தக் காலப்பகுதியை 2010 முதல் 2015 வரையான காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது 10 மடங்குகளாக வெளிநாட்டுக் கடன் அதிகரித்திருந்தது. அதாவது 23.6 பில்லியன் அதிகரிப்பு. வெளிநாட்டுக் கடன் அதிகரிக்கும் அளவு அதிர்ச்சியளிப்பதாக இருக்கிறது. இந்த விலை தொடருமானால் கிரீஸ் நாட்டின் நிலைக்குத்தான் இலங்கையும் வந்துவிடுமென ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அப்படியொரு அதல பாதாளத்துக்குள் நாடு விழும் வரை காத்திருக்காது எமது கடனை மீள ஒழுங்கமைக்குமாறு சர்வதேச உதவி வழங்கும் நாடுகளுக்கும், நிதி நிறுவனங்களுக்கும் நாம் கூற வேண்டும். இல்லையென்றால் அது எமக்கு பாதகமாகவே முடியும்.

கடனை மீளச் செலுத்துவதற்கு குறைந்தது ஐந்து வருடங்களாவது கால எல்லை கேட்க வேண்டும். அதன்மூலம் மீதப்படுத்தக்கூடிய அந்நிய செலாவணியை உற்பத்தி மூலகத்துக்கு செலவிட முடியும். நாடு மீண்டும் ஜனநாயகப் பாதையில் பயணிப்பதை வெளிநாடுகள் மெச்சுகின்றன. எனவே கொடுத்த கடனை மீளப்பெறும் முயற்சிகளில் அந்த நாடுகள் தளர்வான போக்கை கடைப்பிடிக்க வேண்டிய தேவையை நாம் எடுத்துக்கூறவேண்டும். இல்லையென்றால் மலர்ந்திருக்கும் ஜனநாயகம் மரணித்துவிடக்கூடிய வாய்ப்பிருக்கிறது.

ஏகாதிபத்தியவாதிகளுக்கும் அவர்களுடைய சூழ்ச்சிகளுக்கும் எதிராக உரத்த குரலில் சீறுகின்ற 'மகிந்த அணி' ஒன்றை மனதில் கொள்ள வேண்டும். பேச்சுவார்த்தை மூலம் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பது ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சி அல்ல. மாறாக இன்றும் சிறிது காலத்தில் மீள முடியாத கடனில் மூழ்கிவிட்டால் ஏகாதிபதித்தியவாதிகளே இந்த நாட்டை விழுங்கிவிடுவார்கள்.

கடனை மீளச் செலுத்த கால அவகாசம் கேட்பது தெய்வ நிந்தனை அல்ல. ஆனால் அது கட்டாயமாகும் என்பதையும் நிதி நிர்வாகிகளும் அவர்களுடைய அரசியல் வழிகாட்டிகளும் உணர்ந்து கொள்ள வேண்டும். இந்த நாட்டில் வாழும் மக்கள் பூமியில் தரித்திரர்களாக மாறுவதற்கு இடமளிக்கக்கூடாது என்பது தான் அவர்களுடைய பிரதான கடமையாக இருக்கட்டும்.

**சி.சந்திரசிறி**

## 100 வீடுகளுடன் சீன - இலங்கை

# நட்புறவுக் கிராமத்தை உருவாக்குகிறது சீனா

(கொழும்பு)

**அண்மைய இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக, இலங்கை - சீன நட்புறவுக் கிராமத்தில் 100 வீடுகளை அமைத்துக் கொடுக்கவுள்ளதாக சீனா அறிவித்துள்ளது.**

சீன அரசாங்கம் விமானம் மூலம் அனுப்பிய அவசர உதவிப்பொருட்களை கட்டுநாயக்க விமான நிலையத்தில், அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பாவிடம் கையளித்த பின்னர், இந்த அறி



விப்பை வெளியிட்டுள்ளார் இலங்கைக்கான சீனத் தூதுவர் யி ஷியான்லியாங்.


“சீன-இலங்கை நட்புறவுக் கிராமத்தில், இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 1.5 மில்லியன டொலர் செலவில், சீனா 100 வீடுகளை அமைத்துக் கொடுக்கும். இலங்கைக்கு நாம் சிறந்த வகையில் உதவு வோம்.

இரண்டு நாடுகளும் பல ஆண்டுகளாக நெருக்கமான உறவுகளை பேணி வருகின்றன.” என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விமானத்தில் சீனா அனுப்பியுள்ள 15 மில்லியன் யுவான் (2.28 மில்லியன் டொலர்) பெறுமதியான உதவிப் பொருட்களில், 3000 கூடாரங்கள், மடிக்கும் கட்டில்கள் மற்றும் உதவிப் பொருட்கள் உள்ளடங்கியுள்ளன. (இ-10)

# வாக்குரிமையை தவிர ஏனைய அனைத்து உரிமைகளும் இரட்டைக் குடியுரிமை பெற்றோருக்கு உண்டு

## எஸ்.பி.நாவின்ன தெரிவிப்பு



வாக்குரிமையை தவிர ஏனைய அனைத்து உரிமைகளும் இரட்டைக் குடியுரிமை பெற்றோருக்கு உண்டு என அமைச்சர் எஸ்.பி. நாவின்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற இரட்டைக் குடியுரிமை வழங்கும் நிகழ்வில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்தார்.

கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்களுக்காக அமெரிக்கா, பிரிட்டன், கனடா, பிரான்ஸ், இத்தாலி, அவுஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து, நியூசிலாந்து மற்றும் சுவீடன் உள்ளிட்ட நாடுகளுக்கு சென்றவர்களுக்கே இரட்டைக் குடியுரிமை வழங்கப்படுகின்றது.

இலங்கைக்கு வந்து இவர்களில் ஒரு மாத காலத்திற்கு மேல் தங்கியிருக்க முடியாத சூழ்நிலை காணப்பட்டது.

கடந்த அரசாங்கம் இரட்டைக் குடியுரிமை வழங்கும் நடைமுறையை இடைநிறுத்தியிருந்தது.

எனினும், தற்போதைய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டதன் பின்னர் மீளவும் இரட்டைக் குடியுரிமை வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இரட்டைக்குடியுரிமை பெற்றுக் கொண்டவர்கள் இலங்கையில் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிக்க சந்தர்ப்பம் உண்டு என அவர மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

# ஐரோப்பிய ஒன்றியத்தின் திட்டத்தினை மீளமைப்பது குறித்து கலந்துரையாடல்

இலங்கையின் அபிவிருத்தி தொடர்பான ஐரோப்பிய ஒன்றியத்தின் திட்டத்தை மீளமைப்பது குறித்து, அரசாங்கத்துடன் நெருக்கமான கலந்துரையாடல்கள் இடம் பெற்று வருவதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இலங்கை ஐரோப்பிய ஒன்றிய கூட்டு ஆணைக் குழுவின் செயற்குழு கூட்டம் நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது.

இலங்கை அரசாங்கத்தின் கிராமிய அபிவிருத்திக்கு உதவுவதற்கு அப்பால், இலங்கை அரசாங்கத்தின் நல்லிணக்க செயற்பாடுகள், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் யோசனைகளை நடை முறைப்படுத்தல், நீதியையும் பொறுப்புக்கூறலையும் உறுதிப்படுத்தல் என்ற அமசங்களில் புதிய மீளமைபபு திட்டத்தின்படி ஐரோப்பிய ஒன்றியம், இலங்கைக்கு உதவி செய்யவுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தெற்கு மற்றும் தென்கிழக்காசிய வலயப் பிரதானியால் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# வரி அதிகரிப்பு தற்காலிகமானது பிரதி அமைச்சர் அசோக் தெரிவிப்பு

(கொழும்பு)

வாகனங்கள் மீதான வரி அதிகரிப்பு தற்காலிகமான ஒன்றென போக்குவரத்து பிரதி அமைச்சர் அசோக் அபேசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் பொதுமக்களை அசௌகரியத்துக்கு உள்ளாக்குவது அரசின் நோக்கம் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

ஹற்றனில் உள்ள இலங்கை போக்குவரத்து சபையின் அலுவலக பணிகளை மேற்பார்வை செய்ய நேற்று முன்தினம் வருகை தந்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



அத்துடன் கடந்த கால அரசாங்கத்தின் செயற்பாடே தற்போதைய வரி அதிகரிப்புக்கான காரணம் என்றும் பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (இ-10)

# செய்தித்துளிகள்

## குப்பைகளை அகற்றும் பணிகளில் இராணுவம்

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிரம்பியுள்ள குப்பைகளை அகற்றும் பணிகளில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக மேற்கு பிராந்திய கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார். அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவுடன் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போது அரசாங்கத்தினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைய இந்த தீர்மானத்தை எடுத்ததாக அவர் கூறியுள்ளார்.

இதனடிப்படையில் கொழும்பு உள்ளிட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சகல மாவட்டங்களிலும் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் இந்த துப்புரவு நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என மேற்கு பிராந்திய கட்டளை தளபதி தெரிவித்தார். (இ-10)

## மின்னல் தாக்கியதில் உபகரணங்கள் சேதம்

திம்புளை பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பத்தனை பொரஸ்டிப் தோட்டத்தில் ஏற்பட்ட மின்னல் தாக்கத்தில் பதினைந்து குடியிருப்புகளிலிருந்த மின் உபகரணங்கள் சேதமாகியுள்ளதாக பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

மலையகத்தில் நேற்று முன்தினம் இடியுடன் கூடிய மழை பெய்ந்துள்ளது. பத்தனை பிரதேசத்தில் நண்பகல் 12 மணியளவில் மின்னல் தாக்கியுள்ளது .இதனால் யாருக்கும் பாதிப்புகள் இல்லாத போதும் பல குடியிருப்புகளில் மின்னல் தாக்கத்தினால் மின்சார வழு திடீரென அதிகரித்ததன் காரணத்தால் பல வீடுகளில் தொலைகாட்சி, குளிர்சாதனப்பெட்டி மற்றும் சமையல் உபகரணங்கள் என்பன சேதமானதாகவும் சேத விபரம் தொடர்பில் விசாரணை நடைபெறுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-10)

## ஆதிவாசிகளின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கு தவறும் அதிகாரிகள்

இந்த நாட்டில் வாழும் ஆதிவாசிகள் மிகவும் சிரமத்தின் மத்தியில் வாழ்ந்துவருவதாக ரத்துகுல ஆதிவாசிகளின் தலைவர் சுதா வன்னில எத்தோ தெரிவித்துள்ளார்.

தமது இனத்திற்கான சமுர்த்தி கொடுப்பனவுகள் கூட கிரமமான முறையில்வழங்கப்படுவதில்லை என்று அவர் குற்றம் சாட்டியுள்ளார். அத்துடன் ஆதிவாசிகளின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய எந்தவொரு அதிகாரிகளும் தம்மிடம் வருவதில்லை என்றும் சுதா வன்னில எத்தோ குற்றஞ் சுமத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## அங்கொட மலையில் சரிந்து வரும் கற்கள்

வரக்காப்பொல நகரின் அருகில் உள்ள அங்கொட மலையில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த மலையிலுள்ள அதிகளவான கற்கள் நேற்றுக் காலை முதல் சரிந்து வருவதாக பிரதேசவாசிகள் குறிப்பிட்டுள்ளனர். இதன் காரணமாக மலையடிவாரத்தில் வசித்த மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## காதலனுடன் சென்ற யுவதி தற்கொலை

தனது காதலனுடன் சென்ற 21 வயதான யுவதி நேற்றுக்காலை தற்கொலை செய்து கொண்டுள் ளார். அவரின் சடலத்தை பொறுப்பேற்க பெற்றோர் மறுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீரிகம பிரதேசத்தை சேர்ந்த அந்த யுவதி வீட்டை விட்டு தப்பி சென்று தனது காதலனால் கட்டுநாயக்க பிரதேசத்தில் பெற்று கொடுக்கப்பட்ட விடுதியொன்றில் தங்கியிருந்த போதே தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

குறித்த யுவதியின் சடலத்தை பொறுப்பேற்க காதலன் முன்வந்த போதும் அவருக்கு சடலத்தை பொறுப்பேற்கும் உரிமை இல்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த யுவதியின் சடலத்தை அரசாங்க செலவில் புதைக்க நீர்கொழும்பு மேலதிக நீதவானால் உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## கொலைக்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன

குருநாகல் மாவட்டம், பன்னல-வெட்டகயாவ பிரதேசத்தில் கடந்த 29 ஆம் திகதி இடம்பெற்ற இரட்டைக் கொலைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களை பொலிஸார் நேற்று முன்தினமிரவு மீட்டுள்ளனர். அத்துடன் சந்தேக நபர்கள் பயன்படுத்தியதாகக் கருதப்படும் இரண்டு மோட்டார்வண்டிகளையும் பன்னல பொலிஸார் மீட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். ட. 56 வகை துப்பாக்கி, 29 துப்பாக்கி ரவைகள் மற்றும் கொலைக்குப் பயன்படுத்தியதாகக் கருதப்படும் மேலும் பல பொருட்கள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-10)

# தமிழ் சினிமா வரலாறு

173

## பராசக்திக்கு தடை போடும் முயற்சி தோல்வி!

**தடை செய்யும்படி தந்தி**

பராசக்திக்குத் தடை விதிக்க வேண்டும் என்பதை ஒரு இயக்கமாக சிலர் நடத்திக்கொண்டிருந்தனர்.


தடை விதிக்கக் கோரி தலைமை தணிக்கை அதிகாரிக்குத் தந்திகள் குவிந்தன.

அப்போது தணிக்கைக் குழுவின் தலைமை அதிகாரியாக ஸ்டாலின் சீனிவாசன் இருந்தார். இவர் மணிக்கொடி என்ற இலக்கியப் பத்திரிகையை நடத்தி புதுமைப்பித்தன் போன்ற முற்போக்கு எழுத்தாளர்கள் புகழ்பெறக் காரணமாக இருந்தவர். அவர் ஸ்டாலினைப் போன்ற மீசை வைத்திருந்ததால் ஸ்டாலின் சீனிவாசன் என்று அழைக்கப்பட்டார்.

அவர் பராசக்தி படத்தைப் பார்த்தார். சாதாரணமாகப் பார்க்கவில்லை. கண்ணில் விளக்கெண்ணெய்யை விட்டுக் கொண்டு பார்ப்பது என்பார்களே அந்த மாதிரி பார்த்தார்.

கடைசியாக அவர் வழங்கிய தீர்ப்பு: பராசக்தியில் அட்சேபகரமான காட்சி எதுவும் இல்லை. எனவே படத்திற்கு தடை விதிக்கவோ காட்சிகளை வெட்டவோ வேண்டிய அவசியம் இல்லை.

இப்படி அறிவித்த தணிக்கை அதிகாரி படம் நன்றாக இருப்பதாகவும் பாராட்டினார்.



"பராசக்தி"யை தயாரித்த பி.ஏ.பெருமாள் முதலியாருடன் சிவாஜிகணேசன்

பராசக்தி பற்றி பத்திரிகைகளில் நடந்த விவாதமும் அதற்கு தடை வரலாம் என்ற எதிர்பார்ப்பும் பராசக்திக்கு பெரிய விளம்பரமாக அமைந்தது. எனவே தியேட்டர்களில் முன்னிலும் அதிக கூட்டம் சேர்ந்தது. தினமும் ஹவுஸ் புல்தான்.

**கோவிலா? போலிப் பூசாரியின் கூடாரமா?**

படத்தின் கிளைமாக்ஸ் பராசக்தி கோவிலிலேயே சிவாஜியின் தங்கையாக நடிக்கும் ஸ்ரீரஞ்சனியை பலாத்காரம் செய்யமுயலும் காட்சியாகும்.

நடந்ததை அறிந்த சிவாஜி பூசாரியை பழிவாங்க பராசக்தி சிலைக்கு பின்னால் பதுங்கியிருப்பார்.

நீ தீர்க்காயுசா இருப்பே என்று ஒரு பக்தனிடம் பூசாரி கூறும் போது, எய் பூசாரி! முதலில் உன் ஜாதகத்தை கணித்துக் கொள் என்ற குரல் அசரீரி மாதிரி கேட்கும். சிவாஜியின் குரல்தான் அது!

பூசாரி:-யார் அம்பாளா பேசுவது?

சிவாஜியின் குரல்:-அம்பாள் எந்தக் காலத்திலைடா பேசினாள்?

பூசாரி:-தாயே! பராசக்தி!

சிவாஜி (வெளியே வந்து) இந்த பராசக்தி உனக்குத் தாய். என் தங்கை கல்யாணி உனக்கு தாசி! அப்படித் தானே! மானங் கெட்டவனே!

பூசாரி:- அப்பனே! இது என்ன விபரீதம்?

சிவாஜி:-விபரீதம் வராது என்று எண்ணித்தானே என் தங்கையோடு விளையாடி இருக்கிறாய்?

பூசாரி (பராசக்தி சிலையைப் பார்த்து):- தாயே, பராசக்தி!

சிவாஜி:-அது பேசாது. பேசமுடியும் என்றால், நீ என் தங்கையின் கற்பை சூறையாடத் துணிந்தபோது அடே பூசாரி! அறிவு கெட்ட அற்பனே! நில் என்று தடுத்திருக்கும். உன்னிடம் சிக்கிய போது இந்த பராசக்தியை என் தங்கை ஆயிரம் முறை அழைத்தாளாமே! ஓடி வந்து அபயம் அளித்தாளா?

பூசாரி (கூட்டத்தைப் பார்த்து):- பக்த கோடிகளே! பார்த்துக் கொண்டு இருக்கிறீர்களே!

(தொடரும்)

# சிங்கள மக்களை திருப்திப்படுத்துவதற்காக முஸ்லிம்களை காவு கொடுக்கும் ஹக்கீம்

கடந்த வாரம் சம்பூரில் கடற்படை அதிகாரி ஒருவரை வசைபாடியதாக கூறப்படும் சம்பவத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அஹமட் நடந்துகொண்ட விதத்தை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற வைபவமொன்றின் பின் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

கிண்ணியாவில் நடைபெற்ற பொது நிகழ்வு ஒன்றில் ஹக்கீம் உரையாற்றும் போது முதலமைச்சர் எவ்விதமான முன் நிபந்தனையும் இன்றி குறித்த கடற்படை அதிகாரியிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும் பகிரங்கமாக சொல்லி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸை பிரதிநிதித்துவப்படுத்தும் கிழக்கு மாகாண முதலமைச்சர், சம்பூர் கடற்படையின் கட்டளையிடும் அதிகாரி கப்டன் ரஞ்சித் பிரேமரத்னவை கடந்த 20ஆம் திகதி பகிரங்கமாக திட்டியுள்ளார்.

குறித்த சம்பவம் நடந்து சுமார் ஒரு வாரத்தின் பின்னர் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் முதன்முதலாக இதுபற்றி கருத்து தெரிவித்துள்ளதானது, சிங்கள மக்களையும் சிங்கள அரசையும் திருப்திப்படுத்திவிட்டு, கிழக்கு மக்களையும் முதலமைச்சரையும் சிங்கள மக்களிடத்தில் பலிக்கடா கொடுக்கும் செயலாக அமையாதா? இதுவொரு காவு கொடுக்கும் செயலாக அமையாதா?

அரசுக்குள் கிழக்கு முதலமைச்சர் விடயம் பெரிய விடயமாக பார்க்கப்படவில்லை. ஆனால் மகிந்த அணியும் இனவாதிகளும இந்த சம்பவத்தை பெரிதாக்கி விட்டார்கள்.

இந்த நிலையில் சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி என்று ஹக்கீம் தெரிவித்துளளா இந்தக் கண்டனத்தின் மூலமாக ஹக்கீம் யானை அடிக்கும் முன்பே, தானே அடித்துக் கொல்லுவது போன்று கருத்து தெரிவித்துள்ளார்.

ஹக்கீமின் இந்தக் கருத்தினால் சிங்கள மக்கள் சந்தோசப்பட்டிருப்பார்கள். இதன் மூலம் முதலமைச்சரை ஹக்கீம் ஓரங்கட்டப் பார்க்கின்றார் என்பது ஊர்ஜிதமாகின்றது.

மேலும் இந்த சம்பவம் குறித்து முதலமைச்சருக்கு எதிராக தொடர்ந்தும் விசாரணைகள் மேற்கொள்ளபபடுவதாகவும் அமைச்சர் ரவூப் ஹககீம் இதன்போது தெரிவித்துள்ளார்.

முதல்வரை கழற்றும் சந்தர்ப்பம் ஒன்றை எதிர்பார்த்திருந்திருந்த ஹக்கீமுக்கு மென்று சாப்பிட முதல்வர் அவல் கொடுத்த கதையாக மாறிவிட்டது.

**ஹக்கீம் மன்னிப்பு கேட்பது பொருத்தமானது**

ஒரு கட்சியின் தலைவர் என்ற வகையில் விடயத்தை பெரிதாக்க விடக்கூடாது என்ற எண்ணம், நோக்கம் இருந்தால் ஹக்கீம் ஏன் பொதுமேடைகளில் இந்த விடயத்தை விமர்சனம் செய்து வர வேண்டும்.



ஒரு உண்மையான, பக்குவமான தலைவன் என்றால் அரசின் உயர் மட்டத்தை அணுகி சம்பந்தப்பட்ட கடற்படை அதிகாரியை நேரில சந்தித்து முதலமைச்சர் சார்பாக அந்தக் கட்சியின் தலைவர் என்கின்ற வகையில் நான் மன்னிப்புக் கோருகின்றேன் என்று சொல்லி விடயத்தை முடித்திருக்கலாம்.

அப்போது ஹக்கீம் நாடு முழுவதும் உயர்ந்த இடத்தைப் பிடித்திருப்பார். அதை விட்டு முதலமைச்சருக்கும் ஹக்கீமுக்கும் இருக்கும் பனிப்போரை, புகைச்சலை ஹக்கீம் சந்தர்ப்பம் பார்த்து மேடை மேடையாக விமர்சித்து வருகின்றார்.

ஹக்கீம் தனது கட்சியின் உயர்பீடத்தைக் கூட்டி முதல்வரையும் அழைத்து இந்த விடயத்தை அலசி ஆராய்ந்து அரசுக்கு தங்கள் நிலைப்பாட்டை சொல்லியிருக்கலாம்.

ஜனாதிபதி. பிரதமரிடம் அடுத்த கட்ட நகர்வு பற்றி பேசியிருக்கலாம். எதுவுமே இல்லாமல் தன் இஷ்டப்படி போகும் ஊரெல்லாம் தனது கட்சிக்காரனை பௌத்த பிக்குகள் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று சொல்லி வருவது போன்று ஹக்கீம் நடந்து கொள்வது என்பது ஒரு கட்சித் தலைமைக்கு நல்ல விடயமாகப்படவில்லை.

பௌத்த பிக்குகளையும் சிங்கள மக்களையும் படைகளையும் அரசையும் திருப்திப்படுத்தும் நோக்கோடு முதல்வரை பணிய வைக்கவுமே ஹக்கீம் இதை தெருத்தெருவாக பரப்புரை செய்து வருகின்றார். இந்த மன்னிப்பு விடயத்தில் கிழக்கு முதல்வரை ஹக்கீம் பணிய வைப்பதன் மூலமாக எதிர்காலத்தில் அடுத்து வரும் முதல்வர்களை படைகள் மதிக்குமா? ஒரு சாதாரண சிப்பாய் கூட மதிக்காத ஒரு கேவலமான பதவியாக முதல்வர் பதவி பார்க்கப்படாதா?

கடந்த காலங்களில் தன்னைக் கேட்காமல் மகிந்தரிடம் பஷீர் சேகுதாவூத் அமைச்சர் பதவி பெற்றுவிட்டார் என்று ஹக்கீம் குருநாகல் தொட்டு புத்தளம் வரை பஷீர் சேகுதாவூத்தை தெரு மேடைகளில் வசை பாடி .கண்டனம் தெரிவித்து பஷீரின் அமைச்சை நக்கல் நையாண்டி பண்ணி வந்தார்.

ஒரு உள்வீட்டுப் பிரச்சினையை வீட்டுக்குள் தீர்த்து வைக்கத் தெரியாது தெரிவில் நின்று மார் தட்டுவது என்பது ஹக்கீமுக்கு கைவந்த கலை.

**ஹக்கீம் பயந்து விட்டார**

முதல்வர் நஷீர் கிழக்கில் மிக வேகமாக செய்து வரும் மக்கள் நலத் திட்டங்கள் மற்றும் முன்னெடுப்புக்கள் பற்றி ஹக்கீம் பயந்து விட்டார்.

முதல்வர் நசீரின் அரசியல் வளர்ச்சி கண்டு ஹக்கீம் தனது தலைவர் பதவிக்கு ஆபத்து வந்து விடும் என்று பயந்து விட்டார். அதனால் ஒரு சந்தர்ப்பத்தை பார்த்து முதல்வரை மாற்றும் எண்ணத்தில் இருந்த ஹக்கீமுக்கு முதல்வர் நஷீர ஒரு கூர்மையான கத்தியை ஹக்கீம் கையில் கொடுத்துள்ளார்.

ஹக்கீம் இந்த விடயத்தை சுலபமாக தீர்க்கக்கூடிய பல வழிகள் உள்ளன . ஆனால் ஹக்கீம் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நஷீரை கவிழ்க்கும் எண்ணத்தில் இருந்தால் மிக ஆபத்தான ஒரு பாதையை நோக்கிய பயணமாகும்.

ஆனாலும் ஹக்கீம் கையில் நஷீர் அஹமத் கொடுத்துள்ள கூர்மையான கத்தி ஹக்கீமையும் பதம் பார்க்கும் என்பதை மறந்து ஹக்கீம் கண்ட மாதிரி கண்டனம் தெரிவித்து வருவது ஆபத்தானது .

நடக்க நடக்கத்தான் ஊர் வந்து சேரும். அதுபோல நல்ல செயல்களைச் செய்வதற்கு அனுமதியுங்கள். -ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வாக்காளர்களாக உங்களை பதிவு செய்து கொள்ளுங்கள்

மூத்த குடிகளில் தமிழ்க் குடியும் ஒன்று. இதற்கு செம்மொழியாக பிரகடனப்படுத்தப்பட்ட தமிழ் மொழி சான்றாகும்.

இவ்வாறு மூத்த குடியாகிய தமிழினத்தின் பண்பாடுகள், நாகரிகங்கள் என்பன மிகப் பழமையானவை. எனினும் கால ஓட்டத்துக்கு ஏற்ப தமிழினம் தன்னை வளர்த்துக் கொள்ளவில்லை என்பது நிறுதிட்டமான உண்மை.

இந்நிலைமை தொடர்வது மிகவும் வேதனைக்குரியது. நமக்கு என்ன என்ற போக்கும் எதிலும் அக்கறை அற்ற நிலைமையும் பொறுப்புக்களை உணர்ந்து கொள்ளாமையும் எங்களின் எதிர்கால ஆரோக்கியத்துக்கு பாதகமாக அமைந்திருப்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

ஆக, ஒட்டுமொத்தத்தில் தமிழினத்தின் சுயநலப் போக்கு எங்களுக்கான உரிமைகள் பலவற்றை இழப்பதற்கு காரணமாயிற்று.

குறிப்பாக வாக்காளர் பதிவு என்ற விடயத்தில் நாம் கவனம் செலுத்துவது மிக மிகக் குறைவு. வாக்காளர்களாக பதிவு செய்யும் போதுதான் எமக்கான வாக்குரிமையை நாம் பெற முடியும் என்பதை மறந்து விடுகின்றோம்.

எதையும் அந்தந்த நேரத்தில் செய்வது என்பதில் எங்களிடம் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. உடனுக்கு உடன் வேலையைச் செய்து முடித்தல் என்பதில் ஏற்படுகின்ற அசமந்தம் எங்களுக்கான கிடைப்பனவுகளை இல்லாமல் செய்கின்றது அல்லது மிகுந்த அலைச்சலை ஏற்படுத்தி அதன் பின்னர் கிடைப்பதாக அமைகின்றது.

இதனால் மனித மணித்தியாலங்களின் வீணடிப்பு, பொருளாதார சமூக காரணிகளால் பாதகமான தாக்கங்களை தருகின்றன.

எனவே எதையும் உடனுக்கு உடன் செய்து முடிப்பது, எதிலும் கவனம் செலுத்துவது, கவனம் செலுத்துகின்ற விடயங்களை உன்னிப்பாக கவனிப்பது என்ற திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

குறிப்பாக இத் திறன்களை மாணவர் மத்தியில் ஏற்படுத்தும்போது அது எதிர்காலத்தில் மிக சாதகமான விளைவுகளைத் தரும்.

அதேநேரம் மக்கள் மத்தியிலும் பொது விடயங்கள் மற்றும் சமூகம் சார்ந்த கருமங்கள் தொடர்பில் அக்கறைப்பாட்டை ஏற்படுத்த செய்வது கட்டாயமானதாகும்.

இதில் மிகவும் முக்கியமானது வாக்காளர்களாக பதிவு செய்து கொள்வதாகும். வாக்காளர்களாக பதிவு கொள்வதன் மூலம் வாக்களிக்கின்ற உரிமை; எங்களுக்கான பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை; சனத்தொகையை அடிப்படையாகக் கொண்ட நிதி ஒதுக்கீடு எனப் பல விடயங்களில் நன்மை பெற முடிகின்றது.

இது மட்டுமன்றி இதற்கு மேலாக வாக்காளர் பதிவு என்பது வேலைவாய்ப்பு, கல்வியியல் கல்லூரிகளில் படிப்பை மேற்கொள்ளுதல் போன்றவற்றுக்கும் அவசியமாக இருப்பதால் , வாக்காளர்களாகப் பதிவு செய்தல் என்பது கட்டாயமானதாகும்.

இவ்வாறு வாக்காளர்களாக பதிவு செய்வதை மக்கள் மத்தியில் ஆர்வப்படுத்துவதற்கு நடைபெறுகின்ற தேர்தல்கள் நீதியாக, நேர்மையாக இருப்பதும் அவசியம் என்பதால்,

தேர்தல் அதிகாரிகள்; தேர்தல் கடமைகளில் ஈடுபடுவோர்; வாக்குகளை எண்ணுவோர்; அவற்றைப் பதிவு செய்வோர் என அனைத்துத் தரப்பினரும் **நெஞ்சுக்கு நீதியாக** நடக்க வேண்டும்.

அப்போதுதான் வாக்களிப்பது, வாக்குரிமை என்பன தொடர்பில் மக்கள் நம்பிக்கை கொண்டு அது தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்துவர்.

எனவே எல்லாச் சூழலும் நேர்மையாக இயங்க வேண்டும் என்பது மிகவும் கட்டாயமானதாகும்.

### முதலீடுகள் அதிகரித்த போதிலும்

# யாழ்.மாவட்ட கல்வித்துறையில் முன்னேற்றம் காணப்படவில்லை

## யாழ்.பல்கலை. முன்னாள் துணைவேந்தர் ஆதங்கம்

யாழ்.மாவட்டத்தில் கல்விக்கான முதலீடுகள் அதிகரித்த போதிலும் கல்வித்துறையில் முன்னேற்றம் காணப்படவில்லை. எனவே கல்வியை மேம்படுத்த சகல தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும் என யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்று முன்தினம் யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

எமது பிரதேசத்தில் கல்வித்துறை மிக முக்கியமானதொன்று. கடந்த க.பொ.த சாதாரணதர பரீட்சை பெறுபேறுகளில் எமது மாவட்டம் 9 ஆவது இடத்தில் உள்ளது. இது மிகவும் கவலைக்குரிய விடயம். எனவே இப் பிரச்சினையை சரிசெய்வதற்கு சகல பிரிவினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

விஞ்ஞான கல்வி நிலை தற்போது எமது பிரதேசத்தில் தாழ்ந்த நிலையில் உள்ளது. கணித விஞ்ஞான பாடத்தில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு போதியளவு விண்ணப்பம் கிடைக்கவில்லை.

கணித விஞ்ஞான ஆசிரியர்களை பெற்றுக்கொள்ள எமது மாவட்டத்தை நம்பித்தான் ஏனைய மாவட்டத்தவர்கள் இருக்கின்றார்கள். விஞ்ஞான கல்வியின் வளர்ச்சிக்கு நல்ல முயற்சி வேண்டும். கல்விக்கான வளங்கள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளன. ஆனால் பெறுபேறுகள் குறைவாகவுள்ளது. அதற்கான காரணங்களை கண்டுபிடித்து திருத்தம் செய்யாத காரணத்தால் தான் கல்வித்துறை வீழ்ச்சியடைந்துள்ளது. ஆனால் தனி ஒரு தரப்பில் மாத்திரம் பிழை கூற முடியாது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீடத்தில் சகோதர இனம் பெரும்பான்மையாக உள்ளது.எமது இனம் குறைவடைந்துள்ளது. இது தொடர்ந்தால் அதிக வீழ்ச்சி அடைவதற்கான வாய்ப்புள்ளது. அதே போல தொழில்நுட்ப பாடங்களுக்கு விண்ணப்பிப்பதற்கும் ஆட்கள் இல்லை. எனவே இப் பிரச்சினையை விரைவில் தீர்ப்பதற்கு அரசியல்வாதிகள, கல்வித்துறையில் உள்ள நிர்வாகிகள் மற்றும் பெற்றோர் இணைந்து கல்வியை மேம்படுத்த முயற்சி செய்ய வேண்டும்.

போதியளவு முதலீடுகளை கல்விக்காக பலரும் செலவிடுகிறார்கள். ஆனால் முன்னேற்றம் இல்லை. இதுவரையில் எமது மாவட்டத்தில் கல்வித்துறையில் பெரியளவான மாற்றம் எவையும் இடம்பெறவில்லை. இது கவலைக்குரிய விடயமாக உள்ளது என தெரிவித்தார்.

இதனையடுத்து இணைத் தலைவர்களில் ஒருவரான யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கருத்து தெரிவிக்கையில்,

இந்த விடயம் மிக முக்கிய மாக கவனத்தில் எடுக்க வேண்டிய ஒரு விடயம்.

பெற்றோர்,ஆசிரியர்கள் மற்றும் கல்வித்துறையை சார்ந்தவர்கள் ஒன்றிணைந்து ஒவ்வொரு பாடசாலையிலும் உயர்தர வகுப்புக்கு செல்ல வேண்டிய மாணவர்கள் எந்தத் துறையில் விருப்பமாக உள்ளனர், என்ன பாடத்துக்கு தகுந்தவர்களாக இருக்கின்றார்கள் என கொள்கை ரீதியல் தெரிவு செய்ய வேண்டும். அப்படியான திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முயற்சி செய்துள்ளோம். அவை அரசின் கொள்கைத்திட்டத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

குறித்த பிள்ளை எந்த பாடத்துக்கு செல்ல வேண்டும் என பெற்றோர்,மாணவர்கள் ஆசிரியர்களுடனான ஒரு கலந்தாய்வு மேற்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட வேண்டும்.

அவ்வாறான ஒரு திட்டத்தை அனைத்து பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்த மாகாண சபை நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். இந்த திட்டத்தை நாம் பாராளுமன்றம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு கொண்டு சென்று திட்டங்களை மேலும் நடைமுறைப்படுத்த நடவடிக்கைகளை எடுப்போம் என அவர் தெரிவித்தார். (இ-9)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை 8 மணியிலிருந்து 5.30 மணிவரை வவுனியா பிரதேசத்தில் ஆதி விநாயகர் கோவிலடி, வைரவப் புளியங்குளம், ஓமந்தையிலிருந்து புளியங்குளம் வரை மின்தடைப்படும்.(இ-9)

## ஆற்றுகை நிகழ்வு


வடக்கு தெற்கு பல்கலைக்கழக ஆங்கில இலக்கிய துறையினர் இணைந்து அளிக்கும் ஆற்றுகை நிகழ்வு நாளை மறுதினம் 4 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். இந்நிகழ்வில் களனி மற்றும் யாழ்ப்பாண பல்கலைக் கழக ஆங்கில இலக்கிய மாணவர்கள் பங்கேற்கவுள்ளனர். (இ)

## பொதுக்கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வர்த்தக சமூக அபிவிருத்தி சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும். இதற்கு சங்க கட்டுப்பாட்டுப் பகுதியன் வணிகர்கள் தவறாது சமூகம தருமாறு கிளிநொச்சி வர்த்தக சமூக அபிவிருத்திச் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (இ-277)

## சத்திய தரிசனம்



### தியானத்தில் ஆழ்ந்து விடுங்கள்

❖ உங்கள் கடமைகளையும் தர்மங்களையும் ஆண்டவனுக்கு ஆராதனையாக அர்ப்ப ணித்து தொண்டாற்ற வேண்டும். நீங்கள் வெளியிடும் ஒவ்வொரு மூச்சும் ஐயன் திருவடிகளுக்குச் சமர்ப்பிக்கும் சுகந்த மலராக எண்ணி அர்ப்பணிக்க வேண்டும். இறைவன் அளித்த ஆயுட்காலத்தைப் பயனுள்ளதாக்க வேண்டும். எத்துயர்வரினும் தெய்வத்தின் மீது நம்பிக்கை இழக்கலாகாது.

❖ தியானத்தினால் நீங்கள் மனித குல ஒற்றுமையையும் தெய்வத்தின் எல்லையற்ற சக்தி எங்கும் பரவியிருப்பதையும் உணர்வதுடன் அதிலேயே ஆழ்ந்துவிடலாம். உங்களது அன்றாட வாழ்க்கை அனுபவத்தில் ஒரு பெரிய கவலை தோன்றியதும் அதுவரை உங்களைப் பற்றியிருந்த சிறிய கவலைகளை அது ஒடுக்கிவிடுவதை உணர்ந்திருப்பீர்கள். உங்கள் மனதில் தெய்வத்தைப் பற்றிய சிந்தனையே நிறைந்திருந்தால் தெய்வத்திற்காகவே நீங்கள் முழுமனதுடன் எப்போதும் இடைவிடாது ஏங்கிக் கொண்டிருந்தால் மற்ற அற்ப ஆசைகளும் சாதனைகளும் தோல்விகளும் கூட உங்களை பாதிக்கமாட்டா. அவை யாவும் உங்கள் கவனத்திலிருந்து நீங்கிவிடும். தெய்வ சிந்தனை என்ற வெள்ளத்தில் மூழ்கி விரைவிலேயே தெய்வத்தை உணர்தல் எனும் பேரானந்தப் பெருங்கடலில் மூழ்கும் நிலையை அடைவீர்கள்.

❖ என் மர்மத்தை எவரும் புரிந்து கொள்ளமுடியாது. நீங்கள் செய்யக் கூடிய தலைசிறந்த காரியம் இதில் மூழ்கிப் போவதுதான். வாதம் செய்து பயனில்லை. மூழ்கி ஆழத்தை அறி. உண்டு சுவையை அறி. அப்போதே நீ என்னைப் பற்றி உன் இதயம் திருப்தி கொள்ளும் வரை அலசிப் பேசலாம்.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### கோயிலுக்குள் வேக வேகமாக வலம் வரக்கூடாது ஏன் தெரியுமா?


ஒரு நிறைமாத கர்ப்பிணி, எப்படி பவ்யமாக நடப்பாளோ, அந்தளவு வேகத்தில் தான் பிரகாரத்தை வலம் வர வேண்டும்.கோயில்களில் மூலவர் பிரார்த்தனை முடிந்ததும், பிரகார வலம் வந்து வணங்குவது வழக்கம். சிலர், வேலைக்குப் போக வேண்டும், என்ற நோக்கத்தில், வேக வேகமாக கோயிலை வலம் வருவார்கள்.

சிலர் ஒரு கையால் நமஸ்கரித்து விட்டு, அல்லது வாயருகே கையைக் கொண்டு வந்து முத்தம் கொடுப்பது போல் பாவனை செய்து விட்டு வேகமாக கோயிலைக் கடப்பார்கள். இவையெல்லாம் சாஸ்திரப்படி தவறு.

ஒரு நிறைமாத கர்ப்பிணி, எப்படி பவ்யமாக நடப்பாளோ, அந்தளவு வேகத்தில் தான் பிரகாரத்தை வலம் வர வேண்டும். அப்போது, அந்த தெய்வத்தின் நினைவு மட்டுமே இருக்க வேண்டும். கதை பேசிக்கொண்டும், சேட்டைகள் செய்தபடியும் கோயிலை வலம் வரக் கூடாது.

குழந்தைகள் சப்தம் செய்தால், அவர்களுக்கு பக்குவமாக எடுத்துச்சொல்லி, அமைதிப்படுத்த வேண்டும். இவ்வாறு வலம் வருவதால், முன் ஜென்ம பாவங்கள் எல்லாம் விலகி விடும்.

# சமநிலை தவிர்ப்பு உதையில் சென்.அன்ரனீஸ் வெற்றி



உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் 25.05.2016 அன்று நடைபெற்ற இரண்டாவது





போட்டியானது பாசையூர் சென்.அன்ரனீஸ் வி.க இற்கும் யாழ்.ஐக்கியம் வி.க. இடையிலான உதைபந்தாட்ட சமராக அமைந்தது.

போட்டியின் ஆரம்பம் முதல் கோலினை பெற இரு அணியினரும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் பின் கள வீரர்களின் சிறப்பான ஆட்டம் காரணமாக கோல் பெறுதல் தடுக்கப்பட்டது. போட்டியின் இரண்டாவது பாதி ஆட்டத்தின் 5 ஆவது நிமிடத்தில் கிடைக்கப்பெற்ற அரிய வாய்ப்பினை சென்.அன்ரனீஸ் கலிஸ்ரர் கோலாக மாற்றினார். தொடர்ந்து பதிலுக்கு இரண்டாவது பாதி ஆட்டத்தின் 10 ஆவது நிமிடத்தில் யாழ். ஐக்கியம் அமனியா கோலினை அடித்து மீண்டும் சமன் செய்தார்.

தொடர்ந்த ஆட்டத்தில் இரு அணிகளும் கோலினை பெற முயற்சி மேற்கொண்ட போதும் பின் கள வீரர்களால் தடுக்கப்பட ஆட்ட நேர முடிவில் 1:1 என சமநிலையானது.

சமநிலை தவிர்ப்புக்காக போட்டி சமநிலை தவிர்ப்பு உதைக்கு தள்ளப்பட வழங்கப்பட்ட 5 சமநிலை தவிர்ப்பு உதையில் 4:4 என மீண்டும் சமநிலையானது. தொடர்ந்து தலா ஒவ்வொரு மேலதிக உதைகளாக வழங்கப்பட 9 ஆவது உதையில் யாழ். ஐக்கியம் வீரர் கோல் கம்பத்தின் வெளியில் அடிக்க சென்.அன்ரனீஸ் 9 ஆவது உதையில் கோலினை அடித்து வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக சென்.அன்ரனீஸ் வி.க வீரர் கலிஸ்ரர் தெரிவு செய்யப்பட்டு அவருக்கான பணப்பரிசு மற்றும் பதக்கத்தினை முல்லைத்தீவு பொது சுகாதார பரிசோதகர் ம.நந்தகுமார் வழங்கி கௌரவித்தார். (கு)

# இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் உபதலைவராக மனோகரன் தெரிவு



யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் தலைவரான கிருஷ்ணபிள்ளை மனோகரன் இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் உப தலைவராக கடந்த 24 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சிறு வயதிலிருந்தே கரப்பந்தாட்டத்தில் ஈடுபாடு கொண்ட மனோகரன் சிறந்த கரப்பந்தாட்ட வீரர் ஆவார். 1969 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 20 வருடங்கள் யாழ். மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொண்டு விளையாடி யாழ்.மாவட்டத்திற்கு பெருமை சேர்த்த வீரராவார். யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தில் பத்து வருடங்களாக செயலாளராகப் பணியாற்றி கடந்த 5 வருடங்களாக தலைவராகவும் பணியாற்றி வருகின்றார்.

இலங்கை கடற்கரை கரப்பந்தாட்ட உதவி இணைச்செயலாளராகவும் வடமாகாண இணைப்பாளராகவும் பணியாற்றி வரும் மனோகரன் இலங்கை கரப்பந்தாட்ட அணிக்கு முகாமையாளராக தாய்லாந்து சென்று வந்த பெருமைக்குரியவராகவும் திகழ்கின்றார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (கு)

# J.P.L. வெற்றிக்கிண்ணம்; நியூஸ்ரார் முதலாவது வெற்றி

J.P.L. வெற்றிக் கிண்ணத்திற்காக யு.ஆர்.பவுண்டேசன் 4 ஆவது ஆண்டாக நடத்தி வரும் 20 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியின் முதலாவது சுற்றில் 5 ஆவது தகுதிகாண் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இப்போட்டியில் நியூஸ்ரார் அணி யங்ஸ்ரார் அணியை 50 ஓட்டங்களால் வெற்றிபெற்று தனது முதலாவது வெற்றியை பதிவு செய்துள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸ்ரார் அணி 20 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 185 ஓட்டங்களைப் பெற்றது.

தீபன்-42, சயந்தன்-15, மோகன்-26, கஜேந்திரா-28, மோகனதீபன்-31, சிந்து-20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் குமுதன்-01, ஜனாளன்-01, ஜனக்ஸ்-01, துசி-01, முகுந்தன்-01, குகதாசன்-02 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் அணி 20 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது. இப்போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் தொடர்ந்து 7 வருடங்களாக நடத்திவரும் தரவரிசைப் பட்டியலுக்கு நியூஸ்ரார் அணி 4.95 புள்ளிகளையும் யங்ஸ்ரார் அணி 2.05 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டன. (கு)

# வதிரி பொம்மர்ஸை வீழ்த்தியது மயிலங்காடு ஞானமுருகன் அணி





ஹென்ரீசியன் சவால் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இரண்டாவது சுற்றின் விலகல் முறையிலான ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

25.05.2016 அன்று நடைபெற்ற போட்டியில் வதிரி பொம்மர்ஸ் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணிமோதியது.

ஆட்டத்தின் முதல் பாதியில் சுமித், ஜெகன் ஆகியோர் கோலடிக்க முன்னிலை பெற்றது ஞானமுருகன் அணி.

கடந்த போட்டியில் ஹற்றிக் கோலடித்து அசத்திய பொம்மர்ஸ் அணி வீரர் சாரங்கன் இப்போட்டியில் ஏமாற்றமளித்தார்.

மேலும் இரண்டாவது பாதியில் மூன்று கோல்களை அடித்து அசத்திய ஞானமுருகன் அணி 5:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று லீக் சுற்றுக்கு முன்னேறியது.

# இன்றைய போட்டிகள்

அராலி வடக்கு திருமகள் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்டத்திலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையே உதைபந்தாட்ட போட்டியை அராலி வடக்கு மடத்தடி திருமகள் விளையாட்டு கழக மைதானத்தில் நடத்துகின்றது.

இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் பாசையூர் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மகாத்மா விளையாட்டுக்கழகமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் குடத்தனை சென். பீற்றர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அராலி அண்ணா விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது.

♦♦♦♦♦♦♦♦♦♦♦♦

இளவாலை ஹென்றிஸ் இளைஞர் விளையாட்டுக்கழகம் ஹென்றிசியன் சவால் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியினை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடத்துகின்றது. இன்று வியாழக்கிழமை பிற்பகல் 6.45 மணிக்கு நடைபெறும் போட்டியில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து முல்லைத்தீவு சென்.யூட் விளையாட்டுக்கழகமும் இரவு 8.15 மணிக்கு நடைபெறும் போட்டியில் சென்.ஜோசப் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஞானமுருகன் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (கு)




நடப்பு வடருத்திற்குரிய பாடசாலை அணிகளுக்கிடையிலான 19 வயது கிரிக்கெட் தொடரில் யா/ உடுப்பிட்டி அ.மி.கல்லூரி அணியினர் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தினைப் பெற்று தேசிய மட்டப்போட்டிக்கு தெரிவாகியுள்ளனர். அவ் அணியினரைப் படத்தில் காணலாம்.

## மீள்குடியேற்ற...

ஒக்லேன்ட் நிறுவகத்தில் வெளியிடப்பட்ட 16 பக்கங்களை கொண்ட அறிக்கை ஒன்றில், 2015ஆம் ஆண்டு நவம்பர் வரையில் 11 ஆயிரத்து 500 குடும்பங்களை சேர்ந்த 38 ஆயிரத்து 500 பேர் இடம்பெயர்ந்த நிலையில் வாழ்ந்து வந்தனர். இவர்களில் பலர் உறவினர்கள் நண்பர்களின் வீடுகளில் வாழ்ந்துவருகின்றனர். இந்நிலையில் மைத்திரிபால சிறிசேன அரசாங்கம், மீள்குடியேற்றத்தை கையாளும் விதம், பிழையானது என்று கூறியுள்ள கலிபோர்னியா அமைப்பு, உறுதியளித்தப்படி எத்தனை காணிகள் மீளவழங்கப்பட்டன. எத்தனை பேர் மீள்குடியேற்றப்பட்டார்கள் என்ற விடயங்களை அறிந்துக்கொள்ள முடியாதுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளது.

சம்பூரில் கடற்படையினர் தாம் பிடித்து வைத்திருந்த காணிகளை விடுவித்தபோதும் இராணுவத்தினர் அங்கு புதிய முகாமை அமைந்துள்ளனர். இது ஏற்கெனவே பாதுகாப்பு அச்சுறுத்தலில் உள்ள மக்களுக்கு மீண்டும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாக இந்நிறுவகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை அடிப்படை வசதிகள் கட்டியெழுப்பப்படாத நிலையில் மீள்குடியேற்றம் சவால்களுக்கு உட்பட்டுள்ளது. அங்குள்ள நிலங்கள் பயிர்ச்செய்கைக்கு தயார்செய்யப்படவில்லை. போரின் போது இடம்பெற்ற எறிகனை வீச்சுக்களால் காணிகளை விட்டு வெளியேறி சென்றவர்களின் காணிகளது உரித்துக்களில் தெளிவான தன்மை இல்லை. எனவே இலங்கை அரசாங்கத்தின் தற்போதைய நடைமுறை அதிர்ச்சியை தருகிறது என்று ஒக்லேன்ட் நிறுவகம் தெரிவித்துள்ளது.

எனவே இது தொடர்பில் நீதியான பொறிமுறை அமைக்கப்பட்டு உரியவர்களுக்கு காணிகள் வழங்கப்பட வேண்டும். இடம்பெயர்ந்தவர்களுக்கு மீண்டும் உரித்துடன் காணிகள் திருப்பித்தரப்படுவதற்கு அமைப்புக்களும், தலைவர்களும் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தவேண்டும் என்றும் ஒக்லேன்ட் நிறுவகம் கோரிக்கை விடுத்துள்ளது. (செ-12)

## வாக்காளர்...

அதை ஒவ்வொரு பிரதேச செயலருக்கும் அறிவித்துள்ளேன். படிவங்களை கொடுப்பது மட்டுமல்லாமல் அவற்றை நிரப்பி பெற்றுக் கொள்ளவும் வேண்டும் அது கிராம சேவக்ரகளின் கடமை.

எனவே தகுதியுள்ள அனைவரும் வாக்காளர்களாக பதிவு செய்து கொள்ள வேண்டும் என யாழ் அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## ஒற்றையாட்சிக்குள்...

சபையின் யோசனையில் முன் மொழியப்பட்டிருந்தது.

தமிழ் மக்களின் இறைமை அங்கீகரிக்கப்பட்டு, முழுமையான சமஷ்டி முறை அவசியம் என தமிழ் மக்கள் பேரவையும் தமது யோசனையில் கூறியிருந்தது. இவை அனைத்தும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையில், ஒற்றையாட்சியுடன் கூடிய சமஷ்டி முறையை தமிழ் மக்கள் விரும்புவதாக மக்கள் கருத்தறியும் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சுமார் 300 பக்கங்களை உள்ளடக்கிய குறித்த அறிக்கையானது மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்டுள்ளதோடு, நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம் இந்த அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசின் தன்மை, அதிகாரப் பகிர்வு, நாட்டின் தேசியக் கொடி, மொழி உரிமைகள் மற்றும் மதத்தின் பங்களிப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் நாடளாவிய ரீதியில் பொதுமக்களிடம் கருத்துகள் கேட்டறியப்பட்டு குறித்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தரணி லால் விஜேநாயக்க தலைமையிலான 18 பேர் அடங்கிய குழு அனைத்து மாவட்டங்களையும் பிரதிபலிக்கும் வகையில் சமார் 4ஆயிரம் முன்மொழிவுகள மற்றும் ஆலோசனைகளை உள்ளடக்கியதாக இந்த அறிக்கையை தயாரித்துள்ளது.

எனினும் பொதுவாக தமிழ் மக்களால் முன்வைக்கப்பட்ட சமஷ்டி தீர்வு தொடர்பில் இந்த அறிக்கையினூடாக அரசின் தன்மை தொடர்பான பரிந்துரையில் மாறுபட்ட ஆலோசனைகள் காணப்படுவதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குழுவானது தனது அறிக்கையில் அதிகாரப் பகிர்வு தொடர்பில் பரிந்துரை செய்துள்ளதோடு, சமஷ்டி தொடர்பில் எவ்வித விடயங்களையும் தெரிவிக்கவில்லை.

கடந்த கால பிரிவினைகளை குறைப்பதற்கு அவசியமான தேவைகளையும் தேசத்தின் ஐக்கியத்தையும் முன்னேற்ற வேண்டுமென்பதை அங்கீகரித்து, ஆட்சிமுறை நிறுவனங்களை வலுப்படுத்தி பரந்த அதிகாரப்பகிர்வை உறுதிசெய்ய வேண்டுமெனவும் அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தொடர்பான பொதுமக்கள் கருத்தறியும் குழுவின் அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## சுவிஸ்குமார் தப்பியது எப்படி? அடுத்த வழக்கில் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பாடசாலை மாணவி கொலை வழக்கின் சந்தேக நபரான சுவிஸ்குமார் என்று அழைக்கப்படும் மகாலிங்கம் சசிக்குமார் எவ்வாறு கொழும்புக்கு தப்பி சென்றார், மீண்டும் எவ்வாறு கைது செய்யப்பட்டார் என்பது தொடர்பிலான விசாரணை அறிக்கையை அடுத்த வழக்கு தவணையின் போது மன்றில் சமர்ப்பிப்பதாக குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவு பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்து உள்ளனர்.

அத்துடன் தொடர்ந்து பன்னிரண்டு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 15-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை பதில் நீதவான் கருப்பையா ஜீவராணி உத்தரவிட்டார். புங்குடுதீவு பாடசாலை மாணவி கொலை வழக்கு நேற்றைய தினம் புதன்கிழமை ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் பதில் நீதவான் கருப்பையா ஜீவராணி முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதன்போது மாணவி கொலை வழக்கு தொடர்பில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு உள்ள பன்னிரண்டு சந்தேக நபர்களும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். கடந்த வழக்கு தவணையின் போது நீதிமன்றினால் கோரப்பட்ட அறிக்கைகள் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதனால் அடுத்த தவணையில் அறிக்கைகளை சமர்ப்பிப்பதாக குற்ற தடுப்பு புலனாய்வு பிரிவு பொலிஸார் நீதவானிடம் தெரிவித்தனர்.

அதனை தொடர்ந்து பன்னிரண்டு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 15-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை பதில் நீதவான் கருப்பையா ஜீவராணி உத்தரவிட்டார். மேலும் கடந்த மாதத்தில் புங்குடுதீவு பாடசாலை மாணவி வித்தியாவின் தாயார் சந்தேக நபர்களின் உறவினர்களினால் அச்சுறுத்தப்பட்டார்.

இவ்விடயம் தொடர்பான வழக்கு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் இன்று வியாழக்கிழமை மன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (செ-4)

## மாடு குறுக்கே பாய்ந்து விபத்து; சிகிச்சை பலனின்றி குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

முள்ளியவளை, குமுழமுனைப் பகுதியில் மாடு குறுக்கே பாய்ந்து படிரக மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் படுகாயங்களுக்கு உள்ளான குடும்பஸ்தர் ஒரு மாதங்களின் பின்னர் நேற்று முன்தினம் இரவு யாழ் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

முள்ளியவளை பொன்நகர் முதலாம் வட்டாரத்தினை சேர்ந்த ஆறுமுகம் ரமணகுமார் வயது(34) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த மாதம் முதலாம் திகதி நெல் மூடைகளை ஏற்றிக்கொண்டு படிரக சிறிய மோட்டார் சைக்களில் சென்று கொண்டிருந்தபோது எதிரே மாடு குறுக்கிட்டதில் மோட்டார் சைக்கிளில் இருந்து தூக்கி வீசப்பட்ட நிலையில் தலையில் பலத்த காயங்களுக்கு உள்ளாகியிருந்தார்.

ஊடனடியாக மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர் பின்னர் 04 ஆம் திகதி யாழ் போதனா வைத்தியசாலையின் அதிதீவிர விபத்து சிகிச்சை பிரிவில் மேலதிக சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தார். ஒரு மாதகாலமாக சிகிச்சை பெற்று வந்த மேற்படி நபர் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (செ-9)

## சட்ட விரோத ஆயுத ஒப்படைப்பு; கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

சட்டவிரோத ஆயுதங்களை கையளிப்பதற்கான கால எல்லை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் ஜயநாத் ஜயவீர தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சட்டவிரோத துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்களை கையளிப்பதற்காக கடந்த ஏப்ரல் 25 ஆம் திகதி முதல் மே மாதம் 16 ஆம் திகதி வரை காலம் வழங்கப்பட்டிருந்தது.

இக்காலப்பகுதியில் 501 சட்டவிரோத துப்பாக்கிகள் தம்மிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தக்காலத்துக்குள் அனைத்து சட்டவிரோத துப்பாக்கிகளையும் கையளிக்க முடியாது என்பதால் மேலும் காலத்தை நீடிப்பதற்கு தாம் தீர்மானித்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதேவேளை மே 30 ஆம் திகதி முதல் யூன் 14 ஆம் திகதிவரை கையளிக்காத ஏனைய துப்பாக்கிகளையும் கையளிக்குமாறு தாம் கேட்டுக்கொள்வதாக அவர் கூறியுள்ளார்.

இக்காலத்துக்குள் துப்பாக்கிகளை கையளிப்பவர்களுக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாது எனவும், அருகிலுள்ள பொலிஸ் நிலையங்கள், பிரதேச, மாவட்ட காரியாலயங்களில் துப்பாக்கிகளை கையளிக்குமாறு அவர் குறிப்பிட்டார். (செ-12)

## மக்கள் கருத்தறியும் குழுவின் அறிக்கை சபாநாயகரிடம் கையளிப்பு

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பாக மக்கள் கருத்தறியும் குழு நேற்று புதன்கிழமை தனது அறிக்கையை சபாநாய்கர் கரு ஜயசூரியவிடம் கையளித்துள்ளது.

இதற்கான நிகழ்வு நாடாளுமன்ற கட்டிடத் தொகுதியிலுள்ள சபாநாயகரின் அலுவலகத்தில் நேற்று பகல் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட சபாநாயகர், நாடாளுமன்றத்திலுள்ள அனைவரது ஒத்துழைப்புகளுக்கு மத்தியில் இந்த நாட்டிற்கு தேவையானதும் தற்காலத்திற்கு ஏற்றதுமான சிறந்த அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டார்.

இதேவேளை புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பாக மக்கள் கருத்தறியும் குழுவின் தலைவர் சட்டத்தரணி லால் விஜேநாயக்க தனது குழுவின் அறிக்கையை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## ஜனாதிபதியின் நிகழ்வில் தீ!

(கொழும்பு)

அம்பாந்தோட்டையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்கேற்ற ஹோட்டல் அங்குரார்ப்பண நிகழ்வில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை மிரிஜ்ஜவில ஷங்கரிலா ஹோட்டல் நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. ஜனாதிபதி உள்ளிட்ட முக்கிய பிரபுக்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

இந்த ஹோட்டலில் நேற்றிரவு நடைபெற்ற வாண வேடிக்கை நிகழ்வின் போது, அருகாமையில் வைக்கோல்களினால் அமைக்கப்பட்ட காட்சிக் கூடமொன்றின் கூரை தீப்பற்றிக் கொண்டது. இதனால் குறித்த காட்சிக்



கூடம் தீக்கிரையாகியுள்ளது.

எனினும் ஹோட்டலுக்கு எந்தவித சேதங்களும் ஏற்படவில்லை எனவும், எவருக்கும் காயங்களோ உயிர்ச் சேதமோ ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (செ-12)

## இரு இலங்கை அகதிகள் தமிழகத்தில் மரணம்

(சென்னை)

தமிழகத்தின் பவானிசாகரில் இலங்கை அகதிகள் முகாமில் வசித்து வந்த இருவர் வீதி விபத்தொன்றில் உயிரிழந்துள்ளனர்.

ரவி (35), திலகன் (31) எனும் இரு இளைஞர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தமிழக ஊடகம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

நிறப்பூச்சு வேலை செய்து வரும் இவர்கள் நேற்று முன்தினம் மதியம் ஒரே இரு சக்கர வாகனத்தில் பவானிசாகர் வந்து கொண்டிருந்த போது, சத்தியமங்கலம்- மேட்டுப்பாளையம் வீதியில் சீரங்கராயன் கரடு அருகே வைத்து, எதிரே வந்த வான் இவர்கள் மீது மோதியது.

இதில் திலகன் சம்பவ இடத்திலேயே பலியானார். மருத்துவமனைக்கு செல்லும் வழியில் ரவியும் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, சம்பவத்துடன் தொடர்புடைய வான் சாரதியை பவானிசாகர் பொலிஸார் கைது செய்துள்ளதாக தெரியவந்துள்ளது. (செ-12)

# பகிரதி முருகேசு...

பட்டார்.

கடந்த 02.03.2015 ஆம் திகதி பிரான்ஸுக்குச் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு தனது 8 வயது மகளுடன் வந்திருந்த பகிரதி முருகேசு பயங்கரவாதத் தடைப்பிரிவுப் பொலிஸாரினால்கைது செய்யப்பட்ட பொழுது தாயைப் பிரிய மறுத்த பிரான்ஸ் நாட்டின் குடியுரிமையைக் கொண்ட பகிரதியின் ஒரே மகளும் பயங்கரவாதத் தடைப் பொலிஸாரினால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

பின்னர் சந்தேக நபரான பகிரதி முருகேசுவுக்கு எதிராக விசாரணையை நடத்திய பயங்கரவாதத் தடைப்பிரிவு பொலிஸார் விசாரணையின் முதல் அறிக்கையை கொழும்பு நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்தனர்.

அந்த அறிக்கையில் சந்தேக நபரான பகிரதி முருகேசு 1991ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து ஆயுதப் பயிற்சிகள் பெற்ற பின்னர் 1996ஆம் ஆண்டு மகளிர் கடற்புலிகளின் தலைவியாகச் செயற்பட்டதாகவும் பின்னர் நாட்டைவிட்டு வெளியேறி பிரான்ஸ நாட்டிற்கு சென்று பின்னர் இலங்கைக்கு வந்து மீண்டும் பிரான்ஸ் நாட்டிற்கு செல்ல கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு வந்த வேளையில் கைது செய்யப்பட்டு விசாரணைகள் நடைபெறுவதாக முதல அறிக்கையும் மேலதிக விசாரணை அறிக்கைகளையும் தாக்கல் செய்தனர்.

சந்தேகநபர் சார்பில் முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராசா தனது வாதத்தில் 02.03.2015ஆம் திகதி கைது செய்யப்பட்ட பகிரதி முருகேசுவுக்கு எதிராக விசாரணைகளை நடத்திய பயங்கரவாதத் தடைப் பிரிவு பொலிஸார் சந்தேக நபர் மீது பாரதூரமான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அறிக்கைகளை மட்டும தாக்கல் செய்தனர்.

அறிக்கைகளை சான்றாகக் கொண்டு வழக்குத் தாக்கல் செய்ய முடியாது.

மேலும் மேல்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய போதிய சான்றுகள் காணப்படின் வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும் அல்லது பிரான்ஸ் நாட்டை வசிப்பிடமாகக் கொண்ட சந்தேகநபரான பகிரதி முருகேசு விடுதலை செய்யப்படவேண்டும்.

பிரான்ஸ் நாட்டின் குடியுரிமையைக் கொண்ட பகிரதி முருகேசுவின் ஒரே மகள் அவரது தாயார் கைது செய்யப்பட்டதிலிருந்து கடந்த 15 மாதங்களாக தனது பிறந்த நாட்டிற்கு செல்ல முடியாததினால் கல்வியை தொடரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இந்த விடயங்களை கவனத்தில் கொண்டு சந்தேக நபருக்கு எதிராக மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய போதிய சான்றுகள் உள்ளனவா என பயங்கரவாதத் தடைப் பொலிஸார் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையை பெற்று சட்டமா அதிபரின் நிலைப்பாட்டை இந்த நீதிமன்றிற்கு அறிவிக்க வேண்டும் என தனது வாதத்தை முன்வைத்தார்.

அந்தவேளையில் சட்டமா அதிபரின் ஆலோசனைப் பெற்று சட்டமா அதிபரின் நிலைப்பாட்டை நீதிமன்றிற்கு தெரிவிப்பதாக பொலிசார் தெரிவித்திருந்த நிலையில் நேற்று புதன்கிழமை இந்த வழக்கு நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட வேளையில் சட்டமா அதிபரினால் சந்தேகநபரை விடுதலை செய்ய எடுக்கப்பட்ட முடிவின் பிரதியை பொலிசார் நீதிமன்றில் சமர்ப்பித்ததையடுத்து கொழும்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி திருமதி அருணு ஆட்டிகல பகிரதி முருகேசுவை விடுதலை செய்தார்.

சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணிகளான செல்வராஜா துஷ்யந்தன், நளினி இலங்கோவன் அனுசரணையில் சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராசா ஆகியோர் முன்னிலை யாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-12)

# வாக்காளர்...

கொண்டு விசேட உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எமது மாவட்டத்தில் உள்ள 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும்வாக்களிக்க தகுதியுள்ளவர்கள். வாக்களிப்பது அவர்களின் சொந்த விருப்பம். ஆனால் வாக்காளர்களாக பதிவு செய்வது கட்டாயம் ஆகும். அவ்வாறு பதிவு செய்யாவிட்டால் எமது மாவட்டத்துக்கு தான் இழப்புகள் ஏற்படும்.

வாக்காளராக பதிவு செய்யப்படாவிட்டால் பல்வேறு விதமான பாதிப்புகளை எதிர்கொள்ள வேணடிய நிலை ஏற்படும். அதன் முக்கியத்துவம் கருதி அனைவரும் செயற்படவேண்டும்.

வாக்கு உரிமை என்பது உங்களது பலம். அது ஜனநாயக ரீதியில சிறப்பாக நடைபெறும் போது முக்கியத்துவம் பெறுகிறது.

அதேபோல் தேர்தல் நேர்மையானமுறையில் நடைபெற்றால் தான் வாக்கின் பலம் உறுதியானதாக இருக்கும். மாவட்டத்துக்கு வரும் ஒதுக்கீடுகள் அனைத்தும் வாக்காளர்களின் எண்ணிக்கையில் தான் தங்கியுள்ளது.

தேர்தல் சிறப்பாக நடை பெற காலத்துக்கு காலம் தேர்தல் ஆணையாளர் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

கடந்த காலங்களில் மக்கள் பயமின்றி வாக்களிக்க பல விழிப்புணர்வுகளை செய்திருந்தார்கள்.

அத்துடன் வாக்காளர் படிவங்களை கிராமசேவகர்கள்தான் வீடு வீடாக சென்று வழங்கவேண்டும்.

ஆனால் சிலகிராம சேவகர்கள் அவ்வாறு செய்வதில்லை என முறைப்பாடுகள் எமக்கு கிடைத்துள்ளன.

23ஆம் பக்கம் பார்க்க....

# பிணை பெற்ற...

ஒருவரும், மேலும் ஏழு பேரும் குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீள் உருவாக்கத்திற்கு உதவி புரிந்ததாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள மூன்று சந்தேகநபர்கள் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களுடன்ஏற்கெனவே தடுத்து வைக்கப்பட்டிருந்த 15 கைதிகளும் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன் பிரகாரம், 18 பேரையும் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் அருணி ஆட்டிகல உத்தரவிட்டுள்ளார். (செ-12)

# 200 ஏக்கர்...

நிலையில் மேலும் அப்பகுதியில் 200 ஏக்கர் காணி விடுவிக்கப்படவுள்ளது.

அந்தவகையில் வசாவிளான் மகா வித்தியாலயத்துக்கு பின்புறமாக குரும்பசிட்டி ஊடாக தெல்லிப்பழையை வந்தடையும் பகுதிகளில் உள்ள 120 ஏக்கர் காணியும்மாவிட்டபுரத்தில் அமைந்துள்ள இராணுவகாவலரண் அகற்றப்படுமிடத்து அதை சுற்றியுள்ள 80 ஏக்கர் காணியும் இராணுவத்தினரால் 2 வாரங்களில் விடுவிக்கப்படவுள்ளன.

கடந்த 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம தொடக்கம் நவம்பர் மாதம் வரையில் தெல்லிப்பழை பகுதியில் 658 ஏக்கரும், கோப்பாய் வளலாய் பகுதியில் 400 ஏக்கரும் விடுவிக்கப்பட்டிருந்தது.

2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தெல்லிப்பழை பிரதேசத்தில் 479.7 ஏக்கரும் கோப்பாய் வளலாய் பகுதியில் 25 ஏக்கரும் இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை 6 ஆயிரத்து 581.04 ஏக்கர் பொதுமக்களின் காணிகள் இராணுவம் கடற்படை மற்றும் பொலிஸாரின்பாவனையில் இதுவரை உள்ளதுடன் 172 வீடுகளும் கையகப்படுத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (செ-9)

# பாதிக்கப்பட்டவரின் மனநிலையை...

நடவடிக்கை எடுக்கப்படுவதையும் அதற்கு நேர்வே அரசாங்கம் முழுமையான உதவி செய்து வருவதையும் தெரிவித்த அவர் இங்குள்ள நிலைமை தொடர்பாக என்னுடைய கருத்துக்களை கேட்பதற்காக வந்துள்ளதாக தெரிவித்தார்.

நல்லிணக்கம் சம்மந்தமான தீர்மானம் எடுக்கப்படுவது உண்மை. அவ்வாறு எடுக்கப்படும் தீர்வு கொழும்பில் இருந்து எடுக்கப்படுவதுடன், எம்முன் கலந்தாலோசித்து எந்த தீர்மானமும் எடுக்கப்படுவதில்லை என்றும் நான் தெரிவித்தேன்.

ஒரு நல்லிணக்கத்திற்கான விடயம் பாதிக்கபட்டவர்களையும் பாதிப்புக்கு உள்ளாக்கியவர்களையும் ஒருங்கிணைத்து பேசும் போது பாதிக்கபட்டவர்களின் மனோ நிலை, எதிர்பாரப்பு வேண்டுதல்களை அறிந்து தான் நல்லிணக்கத்தை கொண்டு வரமுடியும்.

அவ்வாறு இல்லாமல் கொழும்பில் இருந்துகொண்டு நல்லிணக்கத்திற்கு நாங்கள் இதைசெய்கிறோம் அதைசெய்கின்றோம் என்றால் அவ்வாறான நடவடிக்கைகள் நல்லிணக்கத்தை கொண்டுவராது என்ற எனது கருத்தை தெரிவித்தேன்.

உதாரணமாக இன்றைய (நேற்று) பத்திரிகையில் வெளிவந்த செய்தி மயி லிட்டியைவிடுவிக்க இராணுவம் கடும் எதிர்ப்பு என்பதை எடுத்துக் காட்டி பலவருடகாலமாக தங்களது வாழ்வாரத்தை இழந்து மயிலிட்டி மக்கள் காத்துகொண்டிருக்கும் போது மயிலிட்டியை விடுவிக்காதது பெரும் தவறானசெயல் என குறிப்பிட்டேன்.

வடக்கில் இருக்கும் மயிலிட்டி நாட்டுக்கு தேவைபடும் கிட்டத்தட்ட 3 இல் ஒரு பங்கு மீன் தேவையை கொடுத்து வந்ததாகவும் அப்பேர்பட்ட இடத்தை மூடி வைப்பதை எடுத்துக்கூறியிருந்தேன்.

இன்று போர் முடிந்து 7 வருடங்கள் ஆகிவிட்டன. அதனை ஒரு காரணமாகக் காட்டி மயிலிட்டியை விடுவிக்காமல் இருப்பது ஒரு பிழையானசெயல்என்றும்இவ்வாறு தான் மற்றைய இடங்களிலும் ஏதோ ஒன்றை நொண்டி சாட்டாக சொல்லி எமது காணிகளை விடுவிக்காமல் இருக்கின்றனர்.

இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறினேன். அவர் தனக்கு இதைப்பற்றி தெரியும் என்று பதிலளித்து இருந்தார். தங்களால் முடிந்தவரை இரு தரப்பிடத்தினும் சுமுகமான நல்லிணக்கத்தை கொண்டுவர கூடிய சுற்றாடலை உருவாக்க கடமைப்பட்டவர்கள் என்றும் இதற்கான நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதிமொழி அளிததார்கள்.

எல்லோரும் சேர்ந்து இவ் நல்லிணக்கத்திற்கு எவ்வாறு செயற்திட்டம் முன்னெடுக்கவேண்டும் என்றசம்பந்தமாக.நடவடிக்கை எடுக்க நாங்கள உடந்தையாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் ஒருவிடயத்தை குறிப்பிட்டு இருந்தேன். சிங்களமக்கள் மததியில் சமஷடி என்பது பிரிவினை என்றும் இது பிரிவினை உணடாக்கும் என்றும் கருத்துகாணப்படுகிறது.

எங்களால் முடிந்தவரை சிங்கள மக்களுக்கு இதைபற்றி தெரிய படுத்துவோம் என்றும் கூறினேன். இது சம்பந்தமாக சிங்கள தலைவர்களோடு பேசுவதாக அவர் கூறினார் என முதலமைசசர் மேலும் தெரிவித்தார். (செ-4,7,9)

# தமிழில் தேசியகீதம்...

துள்ளது. களனி புகுதியைச் சேர்ந்த மூவரால் குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த சுதந்திர தின நிகழ்வின் போது தமிழில் தேசிய கீதம் பாட அமைச்சரவை எடுத்த முடிவு, அரசியல மைப்புக்கு எதிரான செயற்பாடு எனவும் அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை மூலம் அமைச்சரவை அரசியலமைப்பை மீறியுள்ளதாக தீர்ப்பளிக்குமாறும் உயர்நீதிமன்றத்திடம் மனுதாரரால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (செ-12)


CCTV துறையில்
வல்லுனர் ஆவதற்கு இதோ
ஓர் அரிய வாய்ப்பு



9th Batch start on :- 11.06.2016
100% தொழில் சார்
செயன்முறை பயிற்சிநெறி
வேலைவாய்ப்பு உத்தரவாதம் *
(*Conditions apply)
(C-4774)
iCS EDUCATION
77, மணிக்கூட்டு கோபுர வீதி
யாழ்ப்பாணம்
(பெருமாள் கோவில் அருகாமையில்)
076-7013060 , 021-7306000

உடனடி
வேலைவாய்ப்பு
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்



புத்தக மற்றும் ஸ்ரேசனரி வியாபாரத்தில்
அனுபவமுள்ள/பழகவிரும்பும் ஆண்/பெண்
இருபாலாரும் எதிர்பார்க்கப்படுகின்றனர்.
● சிட்டை எழுதுநர் ● விற்பனைப் பிரதிநிதிகள்
(கணனி அறிவு விரும்பத்தக்கது)
வியாழக்கிழமை முதல் செவ்வாய்க்கிழமை வரை
காலை 9 மணிமுதல் 5 மணிவரை நேரில் சமுகம் தரவும்
"ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்"
இல.212, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். Email:acdil@ymail.com
(C-4777)

af ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்
பிரெஞ்சு மொழி



● பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ் இயங்குகிறது.தலைமை நிறுவனம் FRANCE இல் உள்ளது.
● எமது CERTIFICATES & INTERNATIONAL DIPLOMA ( DELF A1) பெற்றால் பிரான்ஸில் உள்ள கட்டாய பரீட்சை தேவையில்லை.
● இலவசம் படிக்கும் பாடங்களின் PHOTOCOPIES, படித்ததற்கான LETTRE, VISA FORM நிரப்புதல் CD, BOOKS பாவனை...
● யாழ், வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு செல்கிறார்கள்



ஆரம்பம் விரைவில், உடன் அழைத்துப் பதியவும்.
021 222 8093 61, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
(4826)

வரணி சுட்டிபுரம் கண்ணகை அம்மன் ஆலயம்
12ஆம் திருவிழா உற்சவம் (03.06.2016)
மு.ப. 9.00 மணி - அபிஷேகம்
மு.ப. 10.00 தவில் கச்சேரி
மு.ப. 11.00 வசந்த மண்டப பூஜையை அடுத்து சுவாமி உள்வீதி வலம் வருதல்
அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூசை நடைபெறும்
பி.ப 02.00 அறப்பணி அங்குரார்ப்பணம்
பி.ப 03.00 சிறப்புப் பட்டிமன்றம்
தென்னிந்திய திரைப்பட நடிகர்
முனைவர் கு.ஞானசம்பந்தன் தலைமையில்
வாழ்க்கை என்பது இனிய பூந்தோட்டமே? நெடிய போராட்டமே?
பேராசிரியர் தி.வேல்நம்பி திரு. ந.விஜயசுந்தரம்
திரு. ச.லலீசன் திரு. இ.சர்வேஸ்வரா



(C-4767)
பி.ப. 05.30 - தவில் கச்சேரி
பி.ப. 06.30 - வசந்த மண்டப பூஜை ஆரம்பமாகி உள்வீதி வலம் வந்ததையடுத்து மங்கள வாத்தியங்கள் ஒலிக்க அம்பாள் வடலிச் சப்பரத்தில் எழுந்தருளி வெளியுலா வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பார்.
12ஆம் திருவிழா உபயகாரர்கள் அனைவரும் வாரீர்!!! அன்னை அருள் பெறீர்!!!


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி கல்விப்பிரிவு

# தரம்-5 மாணவர்களுக்கான
# புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-13

பகுதி-II

## தமிழ்க் கல்விக் கழகம்

நேரம்:- 1 மணி 15 நிமிடங்கள்

01) பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

மலை மலையாய் அலை எழுந்து
வரும் கடலைப் பாரும்
வந்த அலை வெள்ளியைப் போல
வாரி நுரை வீசும்

அலை கடலில் கப்பல்களும்
அணி அணியாய் போகும்
அலை மறையப்புகை பரப்பி
அணி அணியாய் போகும்.

1. அலை கடலில் பயணிப்பது எது?........................................
2. பெயராகவும் வினையாகவும் வரும் சொல்லை பாடலில் இருந்து எழுதுக?........................................
3. பாடலில் இடம் பெறும் அடுக்கு மொழியினை எழுதுக?........................................
4. பாடலில் உள்ள உவமைத் தொடரை எழுதுக?........................................
5. மலை மலையாய் எழுவது எது?........................................
6. புகை பரப்புவது எது?........................................
7. ஒத்த சொற்களை பாடலில் இருந்து எழுதுக?

திரை:........................................ ஆழி:........................................

02) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களை இணைத்து எழுதுக.

பாலன் கோயிலுக்குச் சென்றான்.
பீற்றர் தேவாலயத்திற்குச் சென்றான்

........................................

03) நூல் பற்றி நூலாசிரியர் எழுதும் உரை என்பதன் தனிச் சொல்........................................

04) பூ விழுந்தது என்பதனைப் பன்மையாக எழுதுக........................................

05) எண்பதாம் ஆண்டு இறுதியில் எடுக்கப்படும் விழா........................................

06) குறியீடுகளை உரிய வகையில் இடுக.

1.மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன ஐம்பொறிகளாகும்

........................................

2.அறம் செய விரும்பு என ஔவையார் கூறினார்.

........................................

07) பழமொழிகளைப் பூர்த்தி செய்க.


1. கங்கையில் மூழ்கினாலும்........................................
2. உண்ணாச் சொத்து........................................

08) படத்தினைப் பார்த்து வாக்கியம் எழுதுக.



........................................

09) படங்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை எழுதுக.


........................................


........................................


........................................

10) ஆங்கிலத்தில் எழுதுக?

i. எனது பெயர் ராஜா.................................................................

ii. தயவு செய்து உங்கள் பாதத்தை துடைக்கவும்.................................................

11) கீழுள்ள சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக?

1.கெசல் கஸ.................................................................

2.தேபொன்ன.................................................................

12) சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழில் எழுதுக.

1.இலைக்கஞ்சி.................................................................

2.நான் குளிக்கிறேன்.................................................................

13) கணனியின் பயன்கள் என்ற தலைப்பில் ஐந்து சொற்களுக்கு குறையாத சரியான எழுவாய், பயனிலைகளுடன் கூடிய மூன்று வாக்கியம் எழுதுக?

.................................................................

.................................................................

.................................................................

14) பின்வரும் கணிதப் பிரசின்னங்களைத் தீர்க்குக.

1. | 5 | 3 | 9 | 0 | இவ் இலக்கங்களால் உருவாக்க கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக?

.................................................................

2.எண்பதாயிரத்து நானூற்று அறுபத்தெட்டு இதனை எண்களில் எழுதுக?

.................................................................

3. 22001 இதனைச் சொற்களில் எழுதுக?

.................................................................

4. வெற்றுப் பெட்டி ஒன்றின் நிறை 850g அதனுள் 450g நிறை கொண்ட 12 பால் மா பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன எனின் தற்போது பெட்டியின் மொத்த நிறை யாது?

.................................................................

5.3m நீளமான றிபனில் இருந்து 30cm அளவுள்ள எத்தனை துண்டுகள் வெட்ட முடியும்?.................

6. 2014 ஆம் ஆண்டு தை மாதம் 1ஆம் திகதி திங்கட்கிழமை எனின் அவ் வருடத்தில் உள்ள திங்கட்கிழமைகளின் எண்ணிக்கை யாது?.................................................................

7. | 10.10h | கடிகாரம் காட்டும் நேரம் உண்மை நேரத்திலும் 35 நிமிடம் தாமதம் எனின் உண்மை நேரம் யாது?

.................................................................

8.05/03/2016 இல் ஆரம்பமான கண்காட்சியொன்று 12/03/2016 இல் முடிவடைந்தது எனின் கண்காட்சி நடைபெற்ற நாட்கள் எத்தனை?.................................................................

9. 3 மாம்பழங்களின் விலை ரூபா 48 எனின்7 மாம்பழங்களின் விலை யாது?.................................

10.எண் ஒன்றினை நினைத்தேன் அதனை 5 இனால் பெருக்கி 10 இனைக் கூட்டி 2 இனைக் கழித்த போது கிடைத்த விடை 38 எனின் நான் நினைத்த எண் எது?.................................................................

11.1kg கேக் 5 பேர் உண்பதற்கு போதுமானது எனின் 22 பேர் உண்பதற்கு தேவையான கேக்கின் அளவு யாது?

.................................................................

12. 240m நீளமான பாதை ஒன்றிற்கு 4m இடைவெளியில் தூண்கள் போட வேண்டும் எனின் தேவையான தூண்களின் எண்ணிக்கை யாது?..........................................................................

13.கமலின் வயது 12 வருடங்கள் 8 மாதங்களாகும். விஷ்ணுவின் வயது 8 வருடங்கள் 4 மாதங்களாகும். இருவரது வயதுகளினதும் கூட்டுத் தொகை யாது?..........................................................................

14.அஜந்தியின் வீட்டிலிருந்து பாடசாலை 24km தூரத்தில் உள்ளது. அவன் 4/6 பங்கு தூரத்தை புகையிரதத்தில் செல்வான் எனின் அவள் புகையிரதத்தில் பயணம் செய்யும் தூரத்தின் அளவு யாது?..........................

15.டோனியின் பென்சிலின் நீளம் 6cm 8mm எனின் அதனை mm இல் எழுதுக..........................................

15) சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1.சூரிய ஒளியில் காணப்படும் விற்றமின் எது?

1.A 2.B 3.D 4.C

2.  உருவில் காட்டப்பட்டுள்ள சூரிய நமஸ்கார படிநிலை குறிப்பது

1) 3 ஆம் படி 2) 5 ஆம் படி 3) 2 ஆம் படி 4) 7 ஆம் படி

3.கொட்டியார விரிகுடாவில் கடலுடன் சேரும் ஆறு

1. களனி கங்கை 2.தெதுறுஓயா 3.கல்ஓயா 4.மகாவலி கங்கை

4.  உருவில் காட்டப்பட்டுள்ள பூவின் பெயர்

1.ரோஜா 2.செவ்வந்தி 3.செவ்வரத்தை 4.சூரியகாந்தி

5.நீரின் மூலம் பரவலடையும் நோய்

1.மஞ்சள்காமாலை 2.டெங்கு 3.பிளேக் 4.மலேரியா

6.பால்மா தொழிற்சாலை காணப்படும் இடம்

1.அநுராதபுரம் 2.அம்பேவெல 3.திருகோணமலை 4.மன்னார்

7.அடிப்படைத் தையல் வகையில் அடங்குவது

1.சங்கிலித்தையல் 2.வெட்டுக்குத்து தையல்
3.விஸ்வம் தையல் 4.கம்பளித்தையல்

8.சிவப்பு+நீலம் ஆகிய நிறங்களைக் கலப்பதன் மூலம் பெறப்படும் துணைவர்ணம்

1.மஞ்சள் 2.ஊதா 3.பச்சை 4.செம்மஞ்சள்

9.  இவ் உருவில் காட்டப்படும் விளையாட்டில் ஒரு குழுவில் விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை

1) 11 2) 12 3) 7 4) 6

10.தோலினால் சுவாசிக்கும் பிராணி

1.மண்புழு 2.கறையான் 3.மீன் 4.தவளை

11.உள்நாட்டுப் பதிவுத் தபாலின் பெறுமதி

1.ரூபா 30.00 2.ரூபா40.00 3. ரூபா 35.00 4.ரூபா 10.00

12.கம்மாலையில் நெருப்பு எரியக் காற்றை வழங்கும் உபகரணம்

1.காற்றாடி 2.விசிறி 3. துருத்தி 4. ஊதுகுழல்

13.அலுமினியப் பாத்திரத்தில் இட்டு பாதுகாக்கக் கூடாத பொருள்

1.மிளகாய் 2.அச்சாறு 3.சீனி 4.தேயிலை

14.கடதாசிக் கழிவுகளை இடும் குப்பைக் கூடையின் நிறம்

1.மஞ்சள் 2.நீலம் 3.பச்சை 4.சிவப்பு

15.விஞ்ஞானப் புனைகதை எழுத்தாளராக விளங்கியவர்

1.D.P.ஜயதிலக்க 2.ஆனந்தகுமாரசுவாமி 3.ஆதர் சி.கிளாக் 4.C.W.W.கன்னங்கரா

16.அரச இலட்சினையில் தூய்மையைக் குறிக்கும் அடையாளம்

1.நிறைகலசம் 2.மலரிதழ் 3.நெற்கதிர் 4.சூரிய சந்திரன்

17.முதன்முதலில் திட்டமிட்ட நகரத்தை அமைத்த மன்னன்

1.தாதுசேனன் 2.மகாசேனன் 3.பண்டுகாபயன் 4.எல்லாளன்

18.பறவையினங்களில் ஆண் பறவை அடைகாக்கும் பறவை

1.தீக்கோழி 2.குயில் 3.காகம் 4.பென்குயின்

19. 

இம் முகபாவனை குறித்து நிற்கும் மன உணர்வு

1.மகிழ்ச்சி 2.துக்கம் 3.கோபம் 4.சினம்

20.நிறையுணவு வகையாக கொள்ளக் கூடிய உணவு வகை

1.பருப்பு 2.இறைச்சி 3.பால் 4.கீரைவகை


21. 

இவ் வரலாற்றுப் படைப்பு காணப்படும் இடம்

1.அநுராதபுரம் 2.குருநாகல் 3.பொலநறுவை 4.கண்டி

22.சிவனொளிபாதமலை அமைந்துள்ள மேட்டு நிலம்

1.ஹற்றன் 2.வெலிமட 3.கண்டி 4.மிகிந்தலை

23. 

இக் குறியீடு குறித்து நிற்பது

1.சமாதானப் பணியகம் 2.பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

3.இலங்கை மின்சாரசபை 4.தபாற்சேவை

24.தரப்பட்ட பிராணிகளில் ஓட்டுக்குள் புகுந்து பாதுகாப்புத் தேடாத பிராணி

1.நத்தை 2.ஆமை 3.கடலாமை 4.மயிர்கொட்டி

25.அரசினால் நாம் பெறும் இலவச சேவை

1.குடிநீர் 2.சுகாதாரம்

3.மின்சாரம் 4.போக்குவரத்து

இவ் வினாக்களுக்குரிய விடைகள் நாளை வெள்ளிக்கிழமை (03.06.2016) வலம்புரி பத்திரிகையில் பிரசுரமாகும்.

◆◆◆

தமிழ்க் கல்விக் கழகத்தின் ஆசிரியர் குழாம்

★யோகராசா -துஷ்யந்தன் (இயக்குநர்)

★அ.நிமலகாந்தன் (யா/இணுவில் மத்திய கல்லூரி)

★றோ.சிவபுத்திரன் (யா/கோப்பாய் மகாவித்தியாலயம்)

★G.மோகன்ராஜ் (ISA வலயக்கல்விப் பணிமனை, நுவரெலியா)

★K.L.M.நபீல் (ஹ/ஸாஹிரா தேசிய பாடசாலை, ஹம்பாந்தோட்டை)

★M.S.குகன் (யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம்)